டிசம்பர் 23 முதல்
சென்னை
பாரகன் · மஹாராணி · லக்ஷ்மி

ஏவி எம் புரொடக்ஷன்ஸ்

வாழ்க்கை



மதுரை..... சென்ட்ரல்
கோவை. கர்நாடிக் · வெரைட்டி
பெங்களூர். சூப்பர் · மினர்வா · ஆபரா
திருச்சிராப்பள்ளி.. ஸ்டார்
சேலம்... சென்ட்ரல்
காரைக்குடி. சரஸ்வதி
வேலூர்... நேஷனல்
(சாமி பாபா)

கும்பகோணம். விஜயலக்ஷ்மி
திருநெல்வேலி..... பாபுலர்
சிதம்பரம். முத்தய்யா பாலஸ்
புதுக்கோட்டை.... வெஸ்டு
மைசூர்....... ராஜ்கமல்

AVM
புரொடக்ஷன்ஸ்


நான் ஏராளமான பணம் சிலவழிக்கிறேன்
—எனினும் எனது தாடை முட்கள் மாதிரி தைக்கத்தான் செய்கிறது.
நாவிதனுக்கு ஆறு அணக்கள் கொடுப்பவர் ஒருவாரத்தில் மூன்று க்ஷவரங்களை அடையக்கூடும். மற்றய நான்கு நாட்களிலும் அவர் உறுத்தும் தாடையையுடையவராய் இருப்பதுடன் அசுத்தமான கத்தியினுல் க்ஷவரம் செய்வதினுல் ஏற்படும் அனாவசியமான புண்கள் முதலியவைகளால் ஏற்படும் அபாயங்களுக்கும் ஏதுவாகிறது.
நான் சொந்தமாகவே க்ஷவரம் செய்துகொள்கிறேன் அதனுல் பணமும் மிச்சம்
அழகான பெட்டியில் இரண்டு 7'ஒ'க்ளாக் பிளேடுகளுடன் அடக்கம் செய்யப்பட்டு, முழுவதும் உலோகத்தாலான ஒரு 7'ஒ'க்ளாக் ரேஸர் வாங்குவதற்கு ஒரு ரூபாய்தான் விலையாகிறது. பிரதி காலையிலும் சுகமான க்ஷவரகத்தை உணருவதோடு, நான் முழுவதும் கவர்ச்சிகரமான தோற்றத்துடன் இருப்பேன்.
தினமும் 7'ஒ'க்ளாக் ரேஸர் பிளேடுகளாலேயே க்ஷவரம் செய்துகொள்ளுங்கள்
7 o'clock
RAZOR & BLADES
இரண்டு பிளேடு களுடன் ரேஸர்
விலை ரூ. 1
7 O'CLOCK
SLOTTED BLADE
DOUBLE EDGED
SLOTTED BLADE
7ஒ'க்ளாக் ரேஸர் பிளேடுகளினும், சீக்கிரமாகவும் சௌகரியமாகவும் க்ஷவரம் செய்துகொள்ளும் முறையை இன்றே ஆரம்பியுங்கள். அதிகம் கூர்மையுள்ள ஒவ்வொரு 7ஒ'க்ளாக் பிளேடும் சுத்தமான அநேக க்ஷவரங்களை அளிக்கும். 5 பிளேடுகள் கொண்ட பாக்கெட் ஒன்றுக்கு விலை அணு 7.

MORTON

SWEETS



குதூகலிப்பது மேனே!—மனம்
குதூகலிப்பது மேனே!!......

அந்த மார்டன் ஸ்வீட்' பண்ணுக்கு வேலை



C. & E. MORTON (INDIA) LTD.

8, ROYAL EXCHANGE PLACE, CALCUTTA

தென் இந்தியாவுக்கு ஏக விநியோகஸ்தர்கள்:
மெஸர்ஸ். ஸைவுத் இந்தியா கார்ப்பொரேஷன் (மதராஸ்) லிமிடெட்
80, செம்புதாஸ் தெரு, சென்னை

MORTON'S MAKE LIFE SWEETER MORTON'S MAKE LIFE SWEETER MORTON'S MAKE LIFE SWEETER MORTON'S MAKE LIFE SWEETER

ASP


Aid to Beauty a Guardian of COMPLEXION
LIMDA
LIMDA
LIMDA SOAP
VEGETABLE SOAP WORKS, CALICUT.
PROPRIETORS: SAIT N.P.& CO.,LTD CALICUT-BOMBAY-2, MADRAS-1

தமிழ் நாடெங்கும் (14-1-50) பொங்கலன்று வெளிவரும்



ஜலம் கலந்த பாலிலிருந்து ஜலத்தையும், பாலையும் தனித் தனியாய்ப் பிரிக்கும் சக்தி அன்னபட்சிக்கு உண்டல்லவா? அதேபோல பகுத்தறிவு படைத்தவர்கள் நல்ல பொருள் எது? கெட்ட பொருள் எது? என்று கண்டு பிடிக்கும் ஆற்றல் கொண்டிருக்கிறார்கள். நல்ல பொருள்களில் எல்லோருக்குமே அலாதி பிரியமுண்டு. அப்பேர்ப்பட்ட நல்ல பொருளில் "பிரஸிடெண்ட் வெஜிடபிள் ஹேர் ஆயிலும்" ஒன்று. மிகவும் சேர்த்தியானது என்று உபயோகிக்கப்பட்டுப் போற்றிப் புகழப் படுகிறது.

அழகான கேசத்திற்கு!



பிரஸிடெண்ட் வெஜிடபிள் ஹேர் ஆயில்

RATHOD TRADING CO.
SOWCARPET — MADRAS 1

ரதோட் டிரேடிங் கம்பெனி
சௌகார்பேட்டை : மதராஸ்

● சென்னை, தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் நடைபெறும் அகில இந்திய கதர், சுதேசி பொருட்காட்சிக்கு விஜயம் செய்யும்பொழுது எங்கள் ஸ்டால் நெ. 330-க்கு தவறாமல் வந்து எங்கள் "பிரஸிடெண்ட் வெஜிடபிள் ஹேர் ஆயில்" சாம்பிள் பாட்டிலை பெற்றுக்கொள்ளவும்.

இருமல் ஜலதோஷம் இவை களை கவனிக்காமல் அசிரத்தை யாக இருந்தால் பின்னால் தொல்லைகள் பல நேரலாம்



இவைகள் அனேகமாக நிமோனியா, ப்ளூரஸி, ஆஸ்துமா, க்ஷயம் முதலிய ரோகங்கள் பிடிக்க அறிகுறிகளாக இருக்கும். இருமலும் ஜலதோஷமும் வராமல் இருக்க முன் ஜாக்கிரதையுடன் இருங்கள். ஒருவேளை இவை பிடித்து விட்டால் தாமதியாமல் உட்கொள்ள வேண்டிய மருந்து

கஸபின்

●

இருமலுக்கும் ஜலதோஷத்திற்கும் இன்றியமையாத சஞ்சீவி

●

தயாரித்த முறை அங்கீகரிக்கப்பட்டது

பெங்கால் கெமிகல்


கல்கத்தா : பம்பாய் : கான்பூர்


ஏஜண்டுகள்:


என். தேசாய் கெனண்டர் & கோ.
41, பந்தர் தெரு :: சென்னை

ரொம்ப நன்னாயிருக்கே!

உங்கள் குழந்தைகளின்
மகிழ்ச்சிக்கும்
ஆரோக்கியத்திற்கும்........









○ ● ○

குஷியாக சவாரி செய்ய
இதோ எத்தனை சிறந்த
பெராம்புலேட்டர்கள்
மடக்கு வண்டிகள்
தள்ளு வண்டிகள்

எப்போதும் போல
சரஸமான விலை

○ ● ○

ராயல் சைக்கிள் & மோட்டார் கோ,
13-14 பிராட்வே மதராஸ்.

பயனீர் ஸைகிள் ஹௌஸ்
மேல கோபுர வீதி - - மதுரை

தினம் காலையில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதைப் போன்ற

சுகத்தை பூர்த்தியாக அனுபவியுங்கள்!

எண்ணெய் தேய்த்து குளித்தான பிறகு உங்களுக்கு சுகமாகவும் குளுமையாகவும் தென்பாகவும் இருப்பதன் காரணம், அது சருமத்தினுள் புகுந்து வேலை செய்து ஓர் இன்புணர்ச்சியூட்டுகிறது. கேரளா டாய்லட் ஸோப்புகளும் அத்தகைய பலனளிக்கின்றன. அவைகள் சுத்தமானவை; கேவலம் எடை பருமன் நிரப்ப வேண்டி மாற்றுப்பொருள்கள் யாதொன்றும் அவையில் சேர்க்கப்படுகிறதில்லை. இந்த ஸோப்புகளின் செழிப்பான நுரையை தணுத்த ஜலத்தினால் கூட எளிதில் கழுவலாம்.



கேரளா ஸோப்

சுத்தமான எண்ணெயே மூலப்பொருள்

ஸாண்டல்வுட்

இதில் கலந்துள்ள சந்தனம், கஸ்கஸ் தைலங்களின் திவ்விய பரிமளம் ஸ்நானத்திற்குப் பிறகு வெகுநேரம் நீடித்திருக்கிறது.

தயாரிப்பாளர்கள் —

கேரளா ஸோப் இன்ஸ்டிட்யூட்
கள்ளிக்கோட்டை


டிபார்ட்மெண்ட் ஆப் இண்டஸ்ட்ரீஸ் அண்டு காமெர்ஸ்

கவர்மெண்ட் ஆப் மெட்ராஸ்

SKTA'S



ஜுபிடர் பிக்சர்ஸ்
மகிழ்ச்சியுடன் வெளியிடப்போகும் மற்றுமொரு அற்புதமான திரை ஓவியம்..
கிருஷ்ண விஜயம்
ஸ்டூடியோ சென்ட்ரல்
ஸுந்தர்ராவ் நட்கர்ணி
ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் லீலா
விநோதங்களை உங்கள் கண்முன்
நிறுத்திக்காட்டும் வனப்புமிகுந்த
சிருங்கார சித்திரம்..........


RUP
மேனி
அழகை
நிருபிக்க
ரூப்
டாய்லெட் சோப்
ஒரு மேட்டூர் கெமிகல்ஸ் தயாரிப்பு.


BUSINESS MEN ask for
ACCURACY
in a watch...
வர்த்தகத் துரைமார்களுக்கு
ஒரு கடிகாரம் காட்டும் நேரம்
சரியாக இருக்க வேண்டும்
10-25க்கு அலுவல் என்றால் நேரம் தவறக்கூடாது. வெளிநாடுகளுக்கு டெலிபோன் பேச இன்ன மணி இன்ன நிமிஷம் என்று முன் ஏற்பாடு அவசியம். விமானத்திலோ ரயிலிலோ பிரயாணமென்றால், நேரந்தான் பிரதானம். பிரபல வியாபார அதிபருக்கு பல காண்ட்ராக்டுகளில் கையொப்ப மிடவேண்டும், பலருடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும், நேரந்தான் அவருக்குச் செல்வம். இப்பேர்ப்பட்டவர் 'வெஸ்ட் என்ட்' கெடிகாரத்தைத்தான் நம்புகிறார். அது நீண்டு உழைக்கும், சரியான நேரத்தைக் காட்டும் என்பதை அவர் அறிவார்.
ஒவ்வொரு 'வெஸ்ட் என்டி'ன் உத்தரவாதத்திற்கு ஆதாரமாயிருப்பது அதன் உயர்ந்த வேலைப்பாடும், சரியான மணி காட்டும் அதன் தன்மையுமே. வாழையடி வாழை என்பார்களே அதுபோல அன்றுமுதல் இன்றுவரை இந்தியநாடு எங்கும் இந்த அற்புத வேலைப்பாடுள்ள கடிகாரம் நம்பகத்திற்கும் உழைப்பிற்கும் பிரசித்தி அடைந்துள்ளது.
வெஸ்ட் என்டு வாட்ச் கோ.,
பம்பாய் & கல்கத்தா
பேடன்ட் வாடர்ப்ரூப் ஸ்டீல் ரூ. 163/-
ரோல்டு கோல்டு, 30 மைக்ரோன்ஸ் ரூ. 182/-
The WEST END WATCH Co.
BOMBAY - CALCUTTA

கல்கி

பொருளடக்கம்

மலர் 9 இதழ் 21 } டிசம்பர் 25 { விரோதி ௵ மார்கழி 11

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே

கல்கி

மலர் 9 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 21

என்ன சேதி?


அழகான பிரதிநிதிகள்

சென்ற தடவை நம் மாகாண சட்டசபைகளுக்கும் இந்திய சட்டசபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களில் பலர் சிறிதும் அப் பதவிகளுக்குத் தகுதியில்லாதவர்கள் என்பதைப் பொது மக்கள் உணர்ந்து வருந்தி வருகிறார்கள். அங்கத்தினர்களில் பெரும்பாலோர் சட்டசபைகளில் வாயைத் திறவாமலே இருந்தும், தூங்கி விழுந்தும் காலங் கழித்து விடுகிறார்கள். "இப்படித் தூங்குகிறவர்களே பாதகமில்லை" என்னும்படி செய்து விடுகிறார்கள், வாயைத் திறந்து பேசுகிற அங்கத்தினர்கள் சிலர்! இந்திய சட்டசபையில் பத்து நாளைக்கு முன்பு சில அங்கத்தினர் 'மீன் கடை'யைப் பற்றிப் பேசினார்கள். ஓர் அங்கத்தினர் சென்ற வாரத்தில் ஒரு அருமையான கேள்வி கேட்டார். பண்டித ஜவாஹர்லால் நேரு அமெரிக்கப் பிரயாணம் செய்ததின் செலவுக் கணக்கைப் பற்றித்தான். பிரதம மந்திரி அதற்குப் பதில் சொல்லும்போது, "என்னுடைய குமாரியும் என்னுடன் பிரயாணம் செய்தாள். அவளுடைய பிரயாணச் செலவுகளைச் சர்க்காரின் கணக்கில் சேர்க்கவில்லை!" என்றார். கேள்வி கேட்ட அங்கத்தினர் எவ்வளவு அற்ப புத்தியுடைய மனிதர் என்பதை நம் ஒப்பற்ற தலைவர் தெரிந்து கொண்டுதான் அப்படிப் பதில் சொல்லியிருக்கிறார். நேருஜீ அமெரிக்கா சென்று வந்ததினாலே இந்தியா அடைந்துள்ள லாபத்தை ரூபாய் மதிப்பில் கணக்கிட்டால் கோடானு கோடியாகும். கேள்வி கேட்டவரைப் போன்ற அங்கத்தினர்கள் டில்லிக்குப் பிரயாணம் செய்து விட்டு வரும் செலவு தண்டச் செலவுதான்! இதை எல்லோரும் உணர்ந்து தானிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அழகான பிரதிநிதிகளைத் தங்கள் தலையிலே சுமத்திய பெரிய தலைவர்களையும் அடிக்கடி நொந்து கொள்கிறார்கள்.

இப்போது ஒரு சோதனை


பொது ஜனங்களின் தலையிலே பிரதிநிதிகளைச் சுமத்துவது சம்பந்தமாக இப்போது ஒரு சோதனை ஏற்படப் போகிறது. மாகாண சட்டசபை அங்கத்தினர் இந்திய சட்டசபையிலேயும் அங்கத்தினராயிருக்கக்கூடாது என்ற முடிவு காரணமாகச் சென்னை மாகாணத்திலிருந்து சில புதிய பிரதிநிதிகளை இந்திய சட்டசபைக்கு அனுப்பியாக வேண்டும். அப்படிப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படப்போகிறவர்கள் 'ஜனங்களின் பிரதிநிதிகள்'' என்று அழைக்கப்படுவார்கள். ஆனால் அவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பொது ஜனங்களுக்குக் கிடையாது. மாகாணத் தலைவர்களால் நியமிக்கப் படுகிறவர்கள் பொது ஜனங்களின் பிரதிநிதிகள் ஆகிவிடுவார்கள். ஆகையால், மாகாணத் தலைவர்களுக்கு இது ஒரு சோதனை என்றே சொல்ல வேண்டும். இந்த மாகாணத்தில் ஏற்கனவே மாகாணத் தலைவர்களால் சிபார்சு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் விஷயத்தில் பொது மக்களுக்கு அளவில்லாத அதிருப்தி இருக்கிறது. இப்போது இந்திய சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கும் அங்கத்தினர்கள் விஷயத்தில் கொஞ்சம் அதிகக் கவனம் செலுத்திப் பொறுக்குவது நலமாகும். இந்திய சட்டசபைக்குப் போவது வெறும் அலங்காரத்துக்கல்ல; பிரயாணப்படிச் செலவு வாங்குவதற்கு அல்ல; அல்லது தாறுமாறாக உளறிக் கொட்டுவதற்கும் அல்ல. காங்கிரஸின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டுத் தேச நன்மையையும் பொது மக்களுக்குச் சௌகரியத்தையும் வளர்க்கும் நோக்கத்துடன் விவாதங்களில் கலந்து கொண்டு உபயோகமான யோசனைகளைச் சொல்லக் கூடியவர்களைப் பார்த்துப் பொறுக்க வேண்டும். பெயர் வெளியானவுடனே, "பேஷ்! இந்த மனிதர் இந்த ஸ்தானத்துக்குத் தகுதியுள்ளவர்தான்!" என்று பொது ஜனங்கள் ஒப்புக் கொள்ளும்படியானவர்களைப் பொறுக்க வேண்டும். "காங்கிரஸின் பெயரால் லாந்தர் கம்பங்களை நிறுத்திவைத்தாலும் வோட்டுப் போட வேண்டியதுதான்" என்ற கொள்கையை நெடுகிலும் அனுசரிப்பது விஷப் பரீட்சை பார்ப்பதாக முடியும்.

சர்க்காரும்



இந்திய சர்க்காரின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்காக............

சங்கீதமும்



ஒரு மாபெரும் உதவிக் கச்சேரியை ஏற்படுத்தினால் என்ன?



நீலக் கடலினிலே தாயின் மணிக் கொடி பாரீர்!

"கடலுக்கு யார் எஜமானரோ, அவர் தான் உலக வர்த்தகத்துக்கு எஜமானர். உலக வர்த்தகத்துக்கு யார் எஜமானரோ, அவர்தான் உலகத்தின் செல்வத்துக்கு எஜமானர். உலகத்தின் செல்வத்துக்கு யார் எஜமானரோ, அவர் தான் உலகத்துக்கே தனிப் பெரும் எஜமானர்."

இவ்வாறு சர் வால்டர் ஸ்காட் என்ற பேரறிஞர் கூறியிருக்கிறார்.

சர் வால்டர் ஸ்காட் சிறந்த பிரிட்டிஷ் கவிகளில் ஒருவர். சரித்திரப் பேராசிரியர்களுள் முதன்மையானவர்.

சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் அவர் கூறிய மேற்படி வாக்கியங்கள் அன்று உண்மையாக இருந்தன; அதற்கு முன்பும் உண்மையாக விளங்கின; இன்று உண்மையாகத் திகழ்கின்றன; இனி என்றென்றும் உண்மையாக இருந்து வரும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

* * *

மூவாயிரம் ஆண்டுகள் வரையில் பாரத நாடு திரை கடலிலே தலைமை ஸ்தானம் வகித்து வந்தது என்பதற்கு வெளிநாடுகளிலுள்ள இலக்கியங்களிலும் சரித்திரங்களிலும் சித்திரங்களிலும்கூட ஆதாரங்கள் இருக்கின்றன.

சென்ற மகா யுத்தத்தின்போது காந்த சக்தியுள்ள கடற் கண்ணிகளுக்கு நூற்றுக்கணக்கான வர்த்தகக் கப்பல்களும் போர்க் கப்பல்களும் இரையாகியதை உலகத்திலுள்ள எல்லோரும் அறிவார்கள்.

ஆனால், காந்த சக்தியுள்ள கடற் பாறைகளால் ஆபத்து நேராமல் இருப்பதற்காக, போஜ மகாராஜாவின் காலத்திலே நிர்மாணிக்கப்பட்ட இந்தியக் கப்பல்களின் அடிப்பாகத்தில் இரும்பு உலோகத்தை உபயோகிப்பதே இல்லையாம்!

இன்று ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து இந்தியாவைக் காப்பாற்றுவதற்காக, வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியை அதிகப்படுத்த வேண்டும் என்று நமது சர்க்கார் இடைவிடாது கூறிவருகிறார்கள்.

ஆனால், இந்தியா கடலுக்கு எஜமானாக விளங்கிய அக்காலத்தில் பல ஐரோப்பிய நாடுகளுக்கும் ஆசியா நாடுகளுக்கும் இந்தியாவில் உற்பத்தியான பல அபூர்வ சாமான்கள் ஏற்றுமதியாயின. அவைகளுக்குப் பதிலாக மேற்படி நாடுகள் இந்தியாவுக்குத் தேவையான எந்தகைய சாதனத்தையும் அனுப்பக்கூடிய நிலையில் இல்லை.

அதனால் அந்த நாடுகள் இந்தியாவிலிருந்து தாங்கள் வாங்கிய சாமான்களுக்கு விலையாக நவரத்தினங்களை அனுப்பி வந்தன என்பதற்கும் பல ஆதாரங்கள் இருக்கின்றன.

மகாராஷ்டிரர் ஆட்சி புரிந்த காலத்தில்கூட தங்களுடைய கடற்படை பலத்தினால் அன்னிய நாட்டினரின் கடற்படைகளைத் துவம்சம் செய்து, அவர்களுடைய படையெடுப்பை முறியடித்து வெற்றி பெற்றனர்.

குறிப்பாக, தென்னிந்தியா கப்பல் நிர்மாணத் தொழிலில் மிகுந்த கீர்த்தி பெற்று விளங்கியது.

பதினைந்தாம் நூற்றாண்டிலே கள்ளிக் கோட்டை கப்பல் நிர்மாணத் தொழிலில் உலகத்திலேயே முதன்மையாக விளங்கியது என்பது சரித்திரம் கண்ட உண்மை.

சோழ மன்னர்கள் ஆண்ட காலத்தில் இந்தியக் கப்பல்கள் அஷ்டதிக்குகளிலும் சென்று வந்தன. முக்கியமாக ஆசியா நாடுகளுக்குச் சென்று அங்கெல்லாம் இந்தியாவின் கலைச் சிறப்பு வியாபிக்கும்படி செய்தன.

ஆனால், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்ட பின் இங்கு இந்தியக் கப்பல்களின் போக்குவரத்தும் கப்பல் நிர்மாணத் தொழிலும் அடியோடு மறைந்து விட்டன.

பிரிட்டிஷார் இந்தியாவின் சுதந்திரத்தை அபகரித்துக் கொண்டது போல், கடலில் இந்தியா வகித்துவந்த எஜமான ஸ்தானத்தையும் அபகரித்துக் கொண்டார்கள்.

இச்சந்தர்ப்பத்தில், இந்தியாவிலுள்ள முக்கிய நகரங்களில் சென்ற

வாரம் இந்தியக் கடற்படை தினம் கொண்டாடப் பட்டபோது ஆங்கிலேயரும் இந்தியக் கடற்படையின் பிரதம சேனைபதியுமான வைஸ் அட்மிரல் பாரி கூறியிருப்பதைக் கேளுங்கள்.

"...சென்ற நானூற்றைம்பது வருஷங்களாக இந்தியர்கள் கப்பல் தொழிலையே மறந்து விட்டார்கள். இந்திய மகா சமுத்திரத்தில் ஐரோப்பியக் கடற்படைகள் ஆதிக்கம் செலுத்த முற்பட்டதே அதற்குக் காரணம். அக்காலத்துக்கு முன் இந்தியா கப்பல் போக்குவரத்தில் மகா வல்லமையுடன் விளங்கி வந்தது. கீழ்த் திசையிலும் மேல் திசையிலும் இந்தியக் கப்பல்கள் சென்று வியாபாரத்தில் தலை சிறந்து விளங்கின. மீண்டும் இந்தியா கப்பல் தொழிலில் அவ்விதம் சிறப்புடன் விளங்க வேண்டும் என்பதே எங்களுடைய நோக்கம்" என்று கடற்படையின் பிரதம சேனைபதி பாரி வியக்தமாகக் கூறியிருக்கிறார்.

• • •

பாரதநாடு சுதந்திரம் பெற்றுவிட்டதால், பல்வேறு தொழில் துறைகளைப்போல் கப்பல் தொழிலிலும் இந்தியா பழைய பெருமையை மீண்டும் அடைய வேண்டும்.

நாடெங்கும் தாயின் மணிக்கொடி பறப்பதுபோல நீலக் கடலிலும் தாயின் மணிக்கொடி பறக்க அங்குரார்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது என்பதையே இந்தியக் கடற்படை தினக் கொண்டாட்டம் காட்டுகிறது.

பாரதநாடு பெற்றுள்ள சுதந்திரத்தைப் பாதுகாக்க தரைப் படை, ஆகாயப்படையைப் போல் கடற்படையும் அத்தியாவசியமானது.

சுதந்திரம் பெற்றுள்ள மக்கள் சுபிட்சமாக இருப்பதற்கு உதவி செய்வதில் கடற்படையின் பங்குதான் அதிகம் என்று சொல்லலாம்.

இந்தியாவில் உற்பத்தியாகும் சாதனங்களை வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்லவும், வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்கு அத்தியாவசியமான யந்திர வகைகள் முதலியவற்றைக் கொண்டு வரவும் ஏராளமான கப்பல்கள் வேண்டும்.

அந்த வர்த்தகக் கப்பல்களுக்கும் நாட்டுக்கும் பாதுகாப்பு அளிக்கக் கடற்படை அத்தியாவசியம் ஆகும்.

எனவே, இந்தியாவின் சுதந்திரத்துக்கும் சுபிட்சத்துக்கும் இன்றியமையாத இராணுவத்தின் விஷயத்தில் பொது மக்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும்? தேசத்துக்காக, தேசத்தின் சுதந்திரத்தைப் பகைவர்களிடமிருந்து பாதுகாப்பதற்காக எந்த வினாடியிலும் உயிரை விடத் தயாராக இருக்கும் படைகளைப் பொது மக்கள் எவ்வாறு கருத வேண்டும்?

இந்த விஷயத்தில் மக்களின் கடமையை, சென்னையில் நடந்த கடற்படை தினக் கொண்டாட்ட வைபவத்தில் பேசிய கவர்னர் ஜெனரல் ராஜாஜி அருமையாக எடுத்துக் கூறினார்.

"இந்திய மாலுமிகளாயினும், சிப்பாய்களாயினும், விமானிகளாயினும், போலீஸ்காரர்களாயினும் இவர்கள் யாவரையும் நாம் நம்முடைய அத்தியந்த நண்பர்களாகக் கருதவேண்டும். பொதுவான பணியில் ஈடுபட்டுள்ள தோழர்களாகக் கருதவேண்டும். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அவர்கள் மீதிருந்த வெறுப்பையும் விரோத பாவத்தையும் நம்முடைய ஹிருதயத்திலிருந்து அறவே ஒழித்துவிட வேண்டும். மிகவும் ஆபத்தான, கஷ்டமான, அத்தியாவசியமான பணியில் ஈடுபட்டுள்ள அவர்களை நண்பர்களாகவும் சகோதரர்களாகவும் நெருங்கிய உறவினர்களாகவும் எண்ணவேண்டும்" என்று ராஜாஜி வற்புறுத்தினார்.

நாட்டின் நலனில் கருத்துள்ள இளைஞர்கள் கடற்படையில் சேர்ந்து தங்களுக்கும் தேசத்துக்கும் கௌரவத்தைத் தேடிக் கொள்ள வேண்டும் என்றும் நமது கவர்னர் ஜெனரல் கூறினார்.

"பாரத நாடு ஆயிரக்கணக்கான மைல்கள் தூரம் உள்ள கடலோரப் பிரதேசத்துடன் கூடிய பிரம்மாண்டமான தேசம். எனவே, அந்த விஸ்தீரணத்துக்கு உகந்தவாறு அதன் கடற்படை முதல்தரமாகவும் பிரம்மாண்டமாகவும் இருக்க வேண்டும்" என்பதைப் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு அனுப்பியுள்ள செய்தியில் வற்புறுத்தி யிருக்கிறார்.

எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு சீக்கிரமாக மொத்தம் இருபது லட்சம் டன் எடையுள்ள கப்பல்களை நிர்மாணம் செய்ய இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள்.

எனவே, பாரததேசம் அதன் பாதுகாப்புக்கும் பரந்த விஸ்தீரணத்துக்கும் ஏற்றவாறு மீண்டும் கடற்படை பலத்திலே பழைய பெருமையை அடையும் காலம் அதிக தூரத்தில் இல்லை என்று எதிர்பார்க்கலாம்.

இப்பொழுது நடைபெறுகிறது



P.U.சின்னப்பா • P.பானுமதி
N.S.கிருஷ்ணன் • T.A.மதுரம்

முருகன் டாக்கீஸாரின்

ரத்னகுமார்

டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு
பாடல்: சிவன் சங்கீதம் G.ராமனாதன்
ஸ்டுடியோ: நியூடோன்

டிஸ்டிரிபியூடர்ஸ் முருகன் டாக்கி பிலிம் கம்பெனி மதுரை. பெங்களூர் சிடி பெஜவாடா



புது வருஷத்தில் ஒரு புனித கைங்கரியம்

நிகழும் 1949ம் வருஷம் ஏறக்குறைய சென்று விட்டது. புதிய 1950-ம் ஆண்டு பிறக்கப் போகிறது. பிறக்கப் போகும் புதிய ஆண்டு பாரத நாட்டின் சரித்திரத்திலும் நம் எல்லாருடைய வாழ் நாளிலும் மிக முக்கியத்துவம் பெற்றிருக்கும். ஏனெனில், ஆயிரம் ஆண்டுகள் அன்னியரின் கீழ் அடிமையாக இருந்த இந்தியா தேசம் வருகிற புது வருஷத்தில் பரிபூரண சுதந்திரம் அடையப் போகிறது. 1950-ம் வருஷம் ஜனவரி மீ 26உ அன்னிய ஆட்சியின் இறுதியான சின்னமும் இந்நாட்டை விட்டுப் போய்விடப் போகிறது. அந்தப் புண்ணிய சுப தினத்தில் பாரத தேசத்தில் குடிமக்களின் நன்மைக்காகக் குடி மக்களால் நடத்தப் படும் குடியரசு ஏற்படப் போகிறது.

"முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத்துக் கொரு புதுமை!"

என்ற மகாகவி பாரதியாரின் வாக்கு அன்று உண்மையாகப் போகிறது.

இத்தகைய ஒப்பிலாத புதுமை வாய்ந்த சம்பவம் இந்தியாவின் சரித்திரத்தில் நம்முடைய காலத்தில் நிகழப் போகிறது.

அதைக் கொண்டாடுவதற்கு நாம் என்ன செய்யப் போகிறோம்?

எந்த மகானுடைய ஆத்ம சக்தியினாலும் அமர தியாகத்தினாலும் நம் தாய் நாடு சுதந்திரமும் குடியாட்சியும் பெறப் போகிறதோ, அந்த மகானுடைய ஞாபகத்தைப் போற்ற வேண்டாமா? எவர் அல்லும் பகலும் அனவரதமும் இந்திய மக்களின் நலத்தைக் கோரித் தவம் செய்து வந்தாரோ, எவர் நம்முடைய க்ஷேமத்துக்காக எல்லையில்லாத கஷ்டங்களை அனுபவித்தாரோ, அத்தகைய புருஷோத்தமருக்கு நம்முடைய அஞ்சலியைச் செலுத்த வேண்டாமா? புதிய வருஷத்தில் முதலாவது காரியமாக அந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டாமா?

*　　*　　*

காந்தி மகானுடைய புனிதமான அஸ்தியை நாட்டின் நாலா பக்கங்களுக்கும் அனுப்பியது போல் சென்னைக்கும் அனுப்பி வைத்த விவரம் நேயர்களுக்கு நினைவிருக்கும். அச்சமயம் சென்னைப் பிரதமரா யிருந்த ஸ்ரீ ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் மகாத்மாவின் அஸ்தி வந்த கலசத்தை, அதில் மீதியிருந்த அஸ்தியோடு வைத்துப் பூஜை செய்து வந்தார்கள். இப்போதும் அப் புனித அஸ்தி கலசம் பூஜை செய்யப்பட்டு வருகிறது.

அஸ்தியுடன் அக் கலசத்தை ஒரு தக்க இடத்தில் பூமியில் புதைத்து அதன் மீது மகாத்மாவின் ஞாபகார்த்தமாக ஒரு ஸ்தூபி எழுப்ப வேண்டுமென்று ஓமந்தூர் ரெட்டியார் தமது விருப்பத்தைத் தெரிவித்திருந்தார். பிரதம மந்திரி பதவியை விட்டு நீங்குவதற்கு முன்னால் அதற்கு வேண்டிய நிலம் சென்னை சர்க்கார் கொடுக்க வேண்டும் என்று தன் விருப்பத்தை எழுதியும் வைத்திருந்தார். அதற்கிணங்க சென்னை சர்க்கார் இப்போது நிலத்தைத் தேர்ந்தெடுத்து முடிவான உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். சென்னைக் கடற்கரையில், யுனிவர்ஸிடி கட்டிடம், ஸெனட் மண்டபம் இவற்றுக்கு எதிரில், காந்திஜியின் அஸ்தி கலசத்தை நாட்டி அதன் மீது மகாத்மா ஞாபகார்த்த ஸ்தூபி எழுப்புவது என்று முடிவு செய்திருக்கிறார்கள். ஞாபகார்த்த ஸ்தூபி எழுப்புவதற்கு வேண்டிய திரவியத்தைப் பொது மக்களிடம் நன்கொடையாக வசூலிக்க வேண்டும் என்றும் தீர்மானித்திருக்கிறார்கள்.

*　　*　　*

"காந்தி மகாத்மாவின் ஞாபகத்தை நிலைநாட்டக் கல்லால் ஆன கட்டிடம் வேண்டுமா?" என்று வெகு சுலபமாகக் கேட்டு விடலாம். ஆண்டவன் எங்கும் நிறைந்தவர் என்றும், ஜீவராசிகளின் உள்ளங்களில் வீற்றிருக்கிறார் என்றும் அனைவரும் சொல்லுவார்கள். ஆயினும் நமது முன்னோர்கள் தென்னாட்டிலே மட்டும் நாற்பத்திரண்டாயிரம் ஆலயங்களை எங்கும் நிறைந்த ஆண்டவனுடைய ஞாபகத்தை உண்டாக்குவதற்காகக் கட்டியிருக்கிறார்கள். நமது முன்னோர்கள் அத்தனை பேரும் முழு மூடர்கள் என்று ஒப்புக்கொள்ள நாம் தயாராயில்லை.

ஆண்டவனுக்கு உருவம் கொடுத்து வழிபாடு செய்வதை மறுக்கும் முஸ்லிம்

சகோதரர்கள் நாடெங்கும் ஆயிரக் கணக்கான மசூதிகளைக் கட்டியிருக்கிறார்கள்.

பரமண்டலத்திலுள்ள பிதாவை வணங்கும் கிறிஸ்துவர்கள் இந்தப் பூவுலகத்தில் எங்கெங்கே சென்றாலும் அங்கெல்லாம் வானளாவும் உன்னத கோபுரங்களையுடைய சர்ச்சுகளை எத்தனையோ செலவு செய்து எழுப்பியிருக்கிறார்கள்.

அன்பே கடவுள், கருணையே மதம் என்று சொல்லும் பௌத்த சமயத்தினர் புத்தர் பெருமானுடைய ஞாபகார்த்தமாக ஆயிரம் பதினாயிரம் சிலைகளைச் செய்து புத்த விஹாரங்களில் வைத்திருக்கிறார்கள். தவிர மிகப் பிரம்மாண்டமான புத்தர் சிலைகளை மலைப் பாறைகளில் செதுக்கி வைத்திருக்கிறார்கள்.

புத்த மதத்தைச் சேர்ந்த ஒப்பற்ற சக்கரவர்த்தியான அசோகர் நாளிலமெங்கும் ஸ்தூபங்களையும் ஸ்தம்பங்களையும் நிலைநாட்டி விட்டுப் போனார். அதன் பயனாக இன்று நாம் புத்த மதத்தின் உண்மைத் தத்துவங்களையும் அசோகர் அனுசரித்த தர்ம நெறிகளையும் ஐயமற அறிந்து மகிழ்கிறோம்.

வாழ்க்கையில் பலவித இன்னல்களிலும் சிக்கல்களிலும் அகப்பட்டுக் கொண்டிருக்கும் நமக்கு, நமது காலத்தில் வாழ்ந்திருந்து உயிர்த்தியாகம் செய்த ஒப்பற்ற மகானை அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்வதற்கு ஞாபகச் சின்னங்கள் தேவையே யாகும். நம்முடைய பிற்காலச் சந்ததிகளுக்கு அத்தகைய ஞாபகச் சின்னங்கள் இன்றியமையாதவை என்று சொல்லலாம்.

சென்னைக் கடற்கரையில் கம்பீரமாக நின்று ஒளி வீசப்போகும் மகாத்மா ஞாபகார்த்த ஸ்தூபிக்கு உங்கள் காணிக்கையைச் செலுத்தும்படி கேட்டுக் கொள்கிறோம். **புது வருஷத்தில் நீங்கள் செய்யும் முதல் நல்ல காரியம் இந்தப் புனித கைங்கரியத்துக்குக் காணிக்கை அனுப்புவதாயிருக்கட்டும்.**

பின்வரும் இரண்டு விலாசங்களில் ஒன்றுக்கு உங்கள் நன்கொடையை அனுப்பி வைக்கக் கோருகிறோம் :—

சபாநாயகர் கனம் ஜே. சிவசண்முகம் பிள்ளை, பொக்கிஷதார், மகாத்மா ஞாபகார்த்த ஸ்தூபி நிதி, நுங்கம்பாக்கம், சென்னை. அல்லது, மானேஜர், 'கல்கி' காரியாலயம், பூனமல்லி ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை.

• • •

ஏற்கெனவே பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருந்த விண்ணப்பங்களுக்கு இணங்க மகாத்மாவின் பக்தர்கள் சிலர் மகாத்மா ஸ்தூபி கைங்கரியத்துக்கு நன்கொடை அனுப்பியிருக்கிறார்கள். ஒரு ரூபாய் முதல் ஆயிரம் ரூபாய் வரையில் நன்கொடைகள் வந்திருக்கின்றன.

சைதாப் பேட்டையைச் சேர்ந்த ஸ்ரீ எஸ். டி. ஷண்முகோன் என்னும் அன்பர் மகாத்மா ஸ்தூபிநிதிக்கு ஆயிரத்தோரு ரூபாய் நன்கொடை தந்திருக்கிறார். பணம் படைத்த பயனை அடைந்த இந்த நன்கொடையாளரைப் பாராட்டுகிறோம்.

திருவண்ணாமலைத் தேசபக்தர் ஸ்ரீ என். அண்ணாமலைப் பிள்ளை அவர்களை அறியாதவர்கள் தமிழ் நாட்டில் யாரும் இருக்க மாட்டார்கள். வறுமையே விரதமாகக் கொண்ட தியாகிகளில் ஒருவர். அவருடைய வறுமையை ஓரளவு தீர்த்து அவருக்குக் கவலையற்ற நிலையை ஏற்படுத்துவதற்காகச் சில அன்பர்கள் நிதி வசூல் தொடங்கினார்கள். அது இன்னும் பூர்த்தி பெறாமல் நின்று வருகிறது. இந்த நிலையில் தேசபக்தர் அண்ணாமலைப் பிள்ளை அவர்கள் மகாத்மா ஸ்தூபி நிதிக்கு ரூபாய் 105 அனுப்பி, "காந்தி மகான் ஸ்தூபி கைங்கரியம் மகத்தான வெற்றி அடைவதாக!" என்று ஒரு தந்திச் செய்தியும் அனுப்பியுள்ளார்.

ஸ்ரீ அண்ணாமலைப் பிள்ளையின் காந்தி பக்தியை வாழ்த்தி வணங்குகிறோம்.

காந்தியக் கவி என்று பாராட்டப்பட்ட ஆஸ்தான கவிஞர் நாமக்கல் ராமலிங்கம் பிள்ளை அவர்கள் ரூ. 101-ம், கானகலாதர மதுரை மணி ஐயர் அவர்கள் ரூ. 101-ம் மகாத்மா ஞாபகார்த்த ஸ்தூபி நிதிக்காக அனுப்பியிருக்கிறார்கள்.

இவ்விதம் மற்றவர்களுக்கு வழி காட்டியாக மகாத்மா ஸ்தூபி கைங்கரியத்துக்கு விரைந்து உதவி செய்துள்ளவர்களைப் பாராட்டி மகிழ்கிறோம்.

இன்றுவரை மேற்படி திருப்பணிக்காக வந்திருக்கும் நன்கொடைத் தொகைகளின் விவரம் வருமாறு :—

மகாத்மா காந்தி ஸ்தூபி நிதி

ஸ்ரீ முருகன்	6	0	0
ஸ்ரீ எஸ். டி. ஷண்முகோன், மானேஜர், திருமகள் டாக்கீஸ், சைதாப்பேட்டை	1001	0	0
ஸ்ரீ ஜி. உமாபதி, 'உமா பிரிண்ட்டர்ஸ்', சென்னை	111	0	0
ஸ்ரீ என். அண்ணாமலைப் பிள்ளை, எம். எல். ஏ., திருவண்ணாமலை	105	0	0
ஆஸ்தான கவிஞர் ஸ்ரீ வெ. ராமலிங்கம் பிள்ளை, நாமக்கல்	101	0	0
ஸ்ரீ மதுரை மணி ஐயர், மயிலாபூர்	101	0	0
ஸ்ரீ பி. அரங்கசாமி நாயகர், கீழ்ப்பாக்கம், சென்னை	101	0	0
ஸ்ரீ வி. என். குமாரசாமி, திருவொற்றியூர் ஹைரோடு, தண்டையார்ப் பேட்டை, சென்னை	101	0	0

கனம் எம். பக்தவத்ஸலம், மராமத்து இலாகா மந்திரி, சென்னை 100 0 0

ஸ்ரீ மதுரை வீரசாமி நாடார், சந்திரா பஸ் ஸர்வீஸ், மதுரை 100 0 0

ஸ்ரீ டி. எஸ். நாராயண ஐயர், ஆடிடர், பகவந்தம் குப்தா தெரு, தியாகராஜ நகரம். 100 0 0

அழகப்பா இண்டஸ்ட்ரியல்ஸ், திருவொற்றியூர் ஹை ரோடு, சென்னை. 79 0 0

ஸ்ரீ என் பாலைய்யர், உரிமையாளர், முருகன் பேப்பர் மார்ட், பங்களூர் 79 0 0

திருப்புகழ் மணி ஸ்ரீ டி. எம். கிருஷ்ணசாமி ஐயர், அட்வகேட், மயிலாப்பூர், சென்னை 51 0 0

ஸ்ரீ ஏ. சுப்பராயலு செட்டி, பெரிய கடைத் தெரு, திருச்சிறாப் பள்ளி 51 0 0

ஸ்ரீ கொத்தமங்கலம் சுப்பு, மயிலாப்பூர், சென்னை 51 0 0

ஸ்ரீ டபிள்யூ. எஸ். சீனிவாச ராவ், எம். எல். ஏ., ஆரணி 51 0 0

ஸ்ரீ ஆர். கே. சுப்ரமணியப் பிள்ளை, மிராசுதார், மாயவரம் 50 0 0

ஸ்ரீ வி. எஸ். வெங்கடாச்சாரி, விட்டலாபுரம் 30 0 0

ஸ்ரீ ஜெயமணி சா. சுப்ரமணியம், துணை ஆசிரியர், 'கல்கி' காரியாலயம், சென்னை. 25 0 0

ஸ்ரீ பிரேம்ஜீ சதன்லால், சுதேசி ஜவுளி வர்த்தகம், சேலம் 25 0 0

ஸ்ரீ எஸ். அருணாசலம், ஆர். கே. பிள்ளை & கம்பெனி, சென்னை 25 0 0

டாக்டர் எம். என். பிரபு, நௌரோஜி ரோடு, கீழ்ப்பாக்கம். 25 0 0

ஸ்ரீ எஸ். ஜீ. நாராயணசாமி, அஸிஸ்டெண்ட் இன்ஜினியர், சென்னை. 25 0 0

ஸ்ரீ பி. கல்யாணசுந்தரம், ஆடிட்டர், வைத்தியராமய்யர் தெரு, தாம்பரம் 25 0 0

ஸ்ரீ ஆக்கூர் அனந்தாச்சாரியார், பகவந்தம் குப்தா தெரு, தியாகராஜ நகர், சென்னை 25 0 0

ஸ்ரீ எஸ். கணேஷ் & பிரதர், நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு, சென்னை 25 0 0

ஸ்ரீ வி. என். குமாரசாமி & சன்ஸ் கடை குமரன்தரக்கள், தங்க சாலைத் தெருவு, சென்னை 25 0 0

ஸ்ரீமதி ஏ. கமலா, எட்வர்டு எலியட்ஸ் ரோடு, மயிலாப்பூர், சென்னை 20 0 0

தலைக்கு ரூ. 11-0-0 வீதம் பின்வரும் அன்பர்கள் நன்கொடை அளித்திருக்கிறார்கள் :—

ஸ்ரீ செல்வநாத செட்டியார், சென்னை ; ஸ்ரீ டி. வி. கணபதி நாடார், சென்னை ; ஸ்ரீ எம். கோவிந்தராஜுலு முதலியார், சென்னை ; ஸ்ரீ ஜெயராம செட்டியார், சென்னை ; ஸ்ரீ எஸ். கடிகாசல முதலியார், சென்னை ; ஸ்ரீ ஜீ. கண்ணப்ப முதலியார், சென்னை.

ஆக ரூ. 66 0 0

ரூ. 10-0-0 அளித்த அன்பர்கள் :—

ஸ்ரீ கி. மகாலிங்கம், "பகீரதன்," கல்கி காரியாலயம், சென்னை ; ஸ்ரீ கே. ஷண்முக சுந்தரம், தலைமை ஆசிரியர், போர்டு ஆண் பாடசாலை, வட்டாணம் ; ஸ்ரீ டி. வி. கோபால சாமி, தலைவர், சுதந்திர சங்கம், எட்வர்டு எலியட்ஸ் ரோடு, மயிலாப்பூர், சென்னை ; ஸ்ரீ மயில்சாமிக் கவுண்டர், பூசாரிப்பட்டி, பொள்ளாச்சி ; ஜனாப் முகம்மது ஜான், இனாத்துக்கடவு ; ஸ்ரீ கே. வி. எஸ். வாஸ், உதவி ஆசிரியர், வீரகேசரி, கொழும்பு. ஸ்ரீ எஸ். வி. ராமாச்சாரி, அவதானம் பாப்பய்யர் ரோடு, ஆலை, சென்னை. ஆக ரூ. 70 0 0

ஸ்ரீ எம். நாகரத்தினம், கார்த்தி கேயா கம்பெனி, மதுரை. 6 0 0

ரூ. 5-0-0 கொடுத்த அன்பர்கள் :—

ஸ்ரீ கே. டி. தேவர், நாக்ஜி கல்யாண் பில்டிங்ஸ், மாதுங்கா, பம்பாய் ; ஸ்ரீ கே. சீதாராமன், குமாரலிங்கம் டிரேடிங் கம்பெனி, குமாரலிங்கம் ; ஸ்ரீ பி. ஆர். இலங்கமணியாப் பிள்ளை, பூனாவாலா சௌல், பம்பாய் ; ஸ்ரீ டி. வி. ஜீ. பெருமாள் செட்டியார், சென்னை ; ஸ்ரீமதி யு. நீலாவதி, சென்னை ; ஸ்ரீமதி யு. லலிதா, சென்னை ; ஸ்ரீ நாகலிங்கம், சென்னை ; ஸ்ரீ செங்கோட்டை பி. கங்காதரன், தியாகராஜ நகர், சென்னை : ஸ்ரீ செங்கோட்டை பி. நடராஜன், தியாகராஜ நகரம், சென்னை ; ஸ்ரீமதி பிச்சம்மாள், தியாகராஜ நகரம், சென்னை : ஸ்ரீ எஸ். வி. கிருஷ்ணன், வைத்திய ராமய்யர் தெரு, தாம்பரம் ; ஸ்ரீ எம். பி. சீனிவாசன், உதவி ஆசிரியர், "சுதேசமித்திரன்" சென்னை ; ஸ்ரீமதி தலையூர் மீனாட்சி ராஜகோபாலன், ரயில்வே காலனி, தாம்பரம் ; பேராசிரியர் அ. சீனிவாச ராகவன், ஆசிரியர் 'சிந்தனை', மயிலாப்பூர், சென்னை ; ஸ்ரீ டி. நாராயணன், நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு, சென்னை ; செங்கோட்டை ஸ்ரீ ஜீ. கல்யாணராமய்யர், மயிலாப்பூர் கபே, சென்னை ; செங்கோட்டை ஸ்ரீ எஸ். கிருஷ்ணன், மயிலாப்பூர் கபே, சென்னை ; ஸ்ரீ கே. வெங்கடேச செட்டியார், வாலாஜாபேட்டை. ஆக ரூ. 90 0 0

ஸ்ரீ வி. எஸ். சரவணன், தங்க சாலைத் தெரு, சென்னை 4 12 0

ரூ. 1-0-0 கொடுத்த அன்பர்கள் :—

ஸ்ரீ கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி, கடப்பை ; ஸ்ரீ பி. ஆர். சேஷாத்திரி, அரவன்காடு ; ஸ்ரீ ஆர். சீனிவாசன், சென்னை ; ஸ்ரீ டி. நாராயணசாமி, சிம்லா ; ஸ்ரீ எஸ். எம். ராமச்சந்திரன், சாதுப்பேரி கிராமம், வேலூர் ; ஸ்ரீ கே. ராமன், சென்னை.

ஆக ரூ. 6 0 0

மொத்தம் ரூ. 2,856 12 0

அட்டைப்பட விளக்கம்

11—12—49 இதழிலிருந்து "கல்கி"யில் வெளிவரும் "மாய மாளிகை" என்னும் அரபிக் கதையில் வரும் ஒரு நிகழ்ச்சியை இந்த வாரத்துக் "கல்கி" இதழ் அட்டைப் படம் சித்திரிக்கிறது.

ஒரு நல்ல கச்சேரி

பழைய காலத்தில் நம் முன்னோர்கள் நாட்டைப் பாதுகாப்பதற்கு வில், அம்பு, வேல், ஈட்டி முதலிய ஆயுதங்களை உபயோகப்படுத்தினார்கள். வீரர்கள் இந்த ஆயுதங்களைக் கொண்டே யுத்தம் செய்தார்கள். தற்சமயம் வில், அம்பு, வேல், ஈட்டி முதலியவற்றை 'மியூஸியம்' என்னும் காட்சிச் சாலைகளிலே பார்க்கலாம். மற்றப்படி அந்த ஆயுதங்கள் இந்தக் காலத்துப் போர் முறைகளுக்குப் பயன்படுவதில்லை.

இந்த நாளில் யுத்தங்களில் உபயோகப்படும் துப்பாக்கி, பீரங்கி, டாங்கி, வெடிகுண்டு, எரிகுண்டு, அணுகுண்டு ஆகியவை இன்னொரு ஆயிரம் வருஷங்களுக்குப் பிறகு எந்த நிலைமையில் இருக்கும் என்று நாம் ஊகிக்கலாம். ஏன்? அவை வில்லையும் அம்பையும் போலவே 'மியூஸிய'ங்களில் இடம் பெற்றுவிடும்! யுத்தமே ஒழிந்து போகும்; அல்லது யுத்தத்துக்கு வேறு புதிய ஆயுதங்கள் ஏற்பட்டுவிடும். இதைப் பற்றி யாதொரு சந்தேகமும் இல்லை.

ஆனால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் நம் முன்னோர்கள் பாடி மகிழ்ந்த சங்கராபரணம், காம்போதி முதலிய ராகங்களை இன்றைக்கும் நாம் பாடியும் கேட்டும் மகிழ்கிறோம். ஆயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன்னால் மகேந்திர பல்லவன் வகுத்த தாள வகைகளை இன்றைக்கும் நாம் கையாளுகிறோம். ஆயிரத்தைந்நூறு வருஷங்களுக்கு முன்னால் பரதமுனிவர் தொகுத்துச் சேர்த்த பரத சாஸ்திர முறைப்படி காட்டிய வித்தை இன்றைக்கும் பயிலப்படுவதைப் பார்க்கிறோம்.

இன்னும் ஆயிரம் — இரண்டாயிரம் வருஷங்கள் சென்ற பிறகுகூட இந்த ராகங்களை நமது சந்ததிகள் பாடுவார்கள். இந்தத் தாளங்களையே கையாளுவார்கள். இதே பரத நாட்டியக் கலையை முறைப்படி பயின்று அரங்க மேடைகளிலே ஆடுவார்கள்.


இதையெல்லாம் நினைத்துப் பார்த்தால் நமக்குப் புலனாகின்றது. ஒரு நாட்டின் மேன்மைக்கும் ஆனந்த வாழ்வுக்கும் எவ்வளவு முக்கியமான சாதனங்கள் கலைகள் என்பதை உணர முடிகின்றது.

ஆகையினால்தான் சுதந்திர மடைந்திருக்கும் தேசங்களெல்லாம் தத்தம் நாட்டுக் கலைகளைப் பாதுகாப்பதில் அவ்வளவு கவனம் செலுத்துகின்றன. ருஷியா முதலிய தேசங்களில் ஆயுதச் சாலைகளையும் தொழிற்சாலைகளையும் பெருக்குவதைக் காட்டிலும் அதிகமாகவே கலைகளை வளர்ப்பதில் சிரத்தை காட்டுகிறார்கள்.

தமிழ்நாட்டின் புராதனமான கலைச் செல்வங்களில் மிகச் சிறந்தது கர்நாடக சங்கீதமாகும். பரம்பரையாகத் தோன்றிய மகா வித்வான்கள் பலர் நம்முடைய சங்கீதக் கலையை அதன் தூய்மை குன்றாமல் பாதுகாத்துத் தந்திருக்கிறார்கள். இன்றைக்கு அத்தகைய அருமையான திருப்பணியைச் செய்து வருகிறவர்களில் ஒருவர் ஸ்ரீமதி எம். எல். வஸந்த குமாரி.

• • •

சில தினங்களுக்கு முன்னால் நண்பர் ஒருவர் சமீபத்தில் வெளியான தமிழ் டாக்கிகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். "இந்த வருஷத்தில் திரையிடப்பட்ட தமிழ்ப் படங்களில் பல நன்றாய் ஓடவில்லை. சில தமிழ்ப் படங்கள் வஸந்த குமாரியின் பாட்டினால் ஓடின!" என்று சொன்னார். "அப்படியா சமாசாரம்? வஸந்த குமாரியின் பாட்டைக் கண்டு அந்தத் தமிழ்ப்படங்களுக்கு அவ்வளவு பயம் ஏன்? எதற்காக ஓட வேண்டும்?" என்று கேட்டேன். "நல்ல சங்கீதத்துக்கும் நம் தமிழ்ப் படங்களுக்கும் அவ்வளவாக ஒத்துக் கொள்ளாதுதானே? ஆகையால் வஸந்த குமாரியின் சங்கீதம் நன்றாயிருப்பதுதான் அவை ஓடுவதற்குக் காரணம்!" என்று சொன்னார். இத்துடன் அந்த கிலேடைப் பேச்சு முடிந்தது.



சங்கீத உலகில் ஸ்ரீமதி எம். எல். வஸந்த குமாரியின் புகழ் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறதென்பது எனக்குத் தெரிந்திருந்தது. நல்ல இடத்தில், நல்ல சூழ்நிலையில், அந்த நல்ல சங்கீதத்தைக் கேட்க வேண்டும் என்று கொண்ட விருப்பம் இம்மாதம் 11-ந்தேதி தியாகராஜநகர் வாணி மகால் மண்டபத்தில் நிறைவேறியது. சென்னை நகரத்திலுள்ள சங்கீத சபைகளுக்குள்ளே சௌகர்யமாக உட்கார்ந்து சங்கீதம் கேட்கக்கூடிய சங்கீத மண்டபம் எது என்று கேட்டால், தற்சமயம் தியாகராஜ நகர் 'வாணி மகால்' மண்டபந்தான் என்று சொல்ல வேண்டும். சபையில் எங்கிருந்து பார்த்தாலும் அரங்கமேடை சமீபமாகக் காணப்படுகிறது. ஆடுகிறவர்களையும் பாடுகிறவர்களையும் எல்லாரும் பார்க்க முடிகிறது. ஆசனங்கள் நல்ல முறையில் போட்டிருக்கிறார்கள். நடுவிலே பிரம்மாண்டமான தூண்கள் நின்று மறைக்கவில்லை. கச்சேரி ஆரம்பித்ததும் பளிச்சென்று மௌனம் கட்டிவிடுகிறது. பாட்டுக் கேட்க வருகிற ரஸிகர்களும் உண்மையாகவே பாட்டைக் காது கொடுத்துக் கேட்கிறார்கள். எனவே, நல்ல சங்கீதம் கேட்கத்தக்க சூழ்நிலை அமைகிறது.

தமிழிசைச் சங்கத்தார் ஒரு நல்ல சங்கீத மண்டபம் கட்டப் போவதாகப் பயமுறுத்திக் கொண்டேயிருக்கிறார்கள். அவர்கள் அந்தப் பயமுறுத்தலை நிறைவேற்றும் போது ஒரு வேளை 'வாணி மகாலை'விட நல்ல சங்கீத மண்டபம் சென்னையில் ஏற்படக் கூடும்.

* * *

பல வருஷங்களுக்கு முன்னால் ஸ்ரீமதி எம். எல். வஸந்த குமாரி தம் தாயார் ஸ்ரீமதி லலிதாங்கியுடன் சேர்ந்து பாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது "இந்தப் பெண் சங்கீத உலகில் உன்னத ஸ்தானத்தை அடையப்போகிறாள்" என்று நான் ஜோசியம் சொல்லவில்லை. அப்படிச் சொல்வது சில சமயம் விபரீதமான பலனைத் தருகிறது. நாலுபேர் "இந்தக் குழந்தையின் பாட்டு நன்றாயிருக்கிறது; முன்னுக்கு வரும் அறிகுறிகள் இருக்கின்றன" என்று சொல்லிவிட்டால், பெற்றோர்களுக்கு உடனே உற்சாகம் பெருகிவிடுகிறது. அப்போதே குழந்தை கச்சேரி செய்ய ஆரம்பித்து உலகத்தையே வளைத்துக் கட்டிவிட வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். சங்கீத வித்தையை முறைப்படி பயிலுவதற்கு வேக்கமோ அவகாசமோ இருப்பதில்லை. கர்நாடக சங்கீதம் அபூர்வமான கலை; அதை அடைவதற்குக் கடவுள் அருள் வேண்டும்; அதோடு நீடித்த பிரயத்தனமும் வேண்டும். பிரயத்தனம் குறைந்து விடுவதால் 'முன்னுக்கு வரக் கூடிய' குழந்தைகளின் சங்கீதமும் முன்னுக்கு வராமல் 'அமெச்சூர்' ரேடியோ சங்கீதமாகப் பின்னாலேயே நின்று விடுகிறது.

ஸ்ரீமதி எம். எல். வஸந்த குமாரியின் சங்கீத வித்தை அந்த அபாயங்களையெல்லாம் தாண்டி நிலையான மேன்மையை அடைந்து விட்டதைக் குறித்து மிகவும் மகிழ்கிறேன். 'கர்நாடக சங்கீத உலகத்தில் பழைய பரம்பரையில் வந்த பெரிய வித்வான்களுடன் சேர்த்துச் சொல்லக் கூடிய யாரும் இந்தப் பத்து வருஷத்தில் வெளிவந்து பிர

"காசிக்கவில்லையே ?" என்ற கவலை ஸ்ரீமதி வஸந்த குமாரியின் சங்கீதக் கச்சேரியைக் கேட்டதினால் ஓரளவு நீங்கிவிட்டது.

* * *

அப்பழுக்குச் சொல்ல முடியாத கர்நாடக சுத்தமான வழிகளை அனுசரித்து ஸ்ரீமதி வஸந்தகுமாரி பாடுகிறார். அவருடைய குரல் சுருதியோடு சேர்ந்து குழைந்து இழைகிறது. சங்கதிகள் விவரமாகவும் ஒன்றோடொன்று மோதாமலும் கணீரென்று விழுகின்றன. ராகபாவம் கெடாதபடி பிர்க்காக்களை ஜிலுஜிலுப்புடன் பொழியும் ஆற்றல் படைத்திருக்கிறார். ராகங்களை அதனதன் உருவம் நன்கு புலப்படும்படியாக ஜீவஸ்வரங்களில் நின்று அபூர்வ சஞ்சாரங்களுடன் விஸ்தாரமாக ஆலாபனம் செய்யக்கூடியவராயிருக்கிறார். ஸாஹித்யங்களை அக்ஷர சுத்தமாக உச்சரிக்கிறார். சவுக்க காலத்தில் சங்கீத வித்தைத் திறமை வெளியாகும்படிப் பாடக்கூடிய பெரிய கீர்த்தனங்களையும், கச்சேரி களை கட்டும்பொருட்டு விறு விறுப்பாகப் பாடவேண்டிய மத்தியம கால கிருதிகளையும் உசிதமாகப் பொறுக்கிக் கச்சேரி பத்தாவை அமைக்கிறார். லயம் சுத்தமாயிருக்கிறது. ஸ்வரம் பாடும் முறை கச்சிதமாயிருக்கிறது. இவ்வளவு நல்ல அம்சங்களும் சேர்ந்திருக்கும் போது, ஸ்ரீமதி வஸந்த குமாரியின் கச்சேரி முதல்தரமாக அமைவது பற்றி வியப்பு ஒன்றும் இல்லையல்லவா ?

ஸ்ரீமதி வஸந்த குமாரியின் சாரீரத்தில் போதிய அளவு 'காத்திரம்' இன்னும் ஏற்படவில்லை. பாடும் முறையில் இன்னும் போதுமான அழுத்தம் உண்டாகவில்லை. பொதுவாக எல்லா அம்சங்களிலும் 'மெருகு' ஏறுவதற்கு மேலும் இடமிருக்கிறது. ஆனால் சரியான இலட்சியத்தை நோக்கிச் சரியான பாதையில் போகத் தொடங்கி விட்டபடியால், ஸ்ரீமதி வஸந்த குமாரியின் சங்கீதம் மேலும் மேலும் உயர்வை அடையும் என்பது நிச்சயம்.

* * *

ஸ்ரீமதி வஸந்தகுமாரி அன்று ஆலாபனம் செய்த ராகங்களில் தோடி, பைரவி, காம்போதி, ஸிம்மேந்திர மத்தியம ராகங்களைக் குறிப்பிட வேண்டும். காம்போதி ஆலாபனத்தில் கையாண்ட சஞ்சாரங்கள் அபூர்வமாயிருந்ததோடு செவிக்கு இனிமையாகவும் இருந்தன. ஸிம்மேந்திர மத்தியமத்தைப் பிரதான ராகமாக எடுத்து அதை எவ்வளவு விரிவாகவும் ரஞ்சகமாகவும் பாடலாம் என்பதைக் காட்டினார். "பாமுக

மேல" "இவனுரோ அறியேனே" "மௌனருந்தினுறு" என்னும் கீர்த்தனங்கள் எடுப்பாகவும் அழகாகவும் இருந்தன. இதர உருப்படிகளில் 'தேஷ்' ராகத்தில் "சுட்டும் விழிச் சுடர்தான்" என்னும் பாரதியார் கீதம் செவிக்கு இன்பமளித்து மனதையும் கவர்ந்தது. "குனித்த புருவமும்" என்னும் அப்பர் சுவாமிகளின் பாசுரத்தை நாதநாமக்கிரியை, செஞ்சுருட்டி முதலிய மத்தியம சுருதி ராகங்களிலேயே கர்ணாமிர்தமாகப் பாடினார்.

தமிழ் நாட்டில் தற்போது ரஸிகர்களின் கவனத்தைக் கவர்ந்திருக்கும் வயலின் வித்வான்களில் ஸ்ரீ ஆர். எஸ். கோபாலகிருஷ்ணன் ஒருவர். நல்ல பாணியும் சிறந்த வித்வத்தும் உடையவர். சிலசமயம் அவர் வாசிப்பில் வேண்டுமென்று செய்யும் கோணல்கள் நிகழ்வதுண்டு. இந்தக் கச்சேரியில் அப்படி ஒன்றுமில்லாமல் சுத்தமான பாணியில் வாசித்துப் பல்லவி ஸ்வரப் பிரஸ்தாரத்தில் சபையோரின் கரகோஷத்தையும் பெற்றார். ஸ்ரீ கோபாலகிருஷ்ணன் வயலின் வாத்தியத்தில் நல்ல உயர்வை அடைவார் என்று நம்புகிறேன்.

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ராவ் மிருதங்கமும், ஸ்ரீ விஸ்வாத்ரி ஐயர் கடமும் 'பொடி பொடி'த்துத் தள்ளிவிட்டார்கள்.

* * *

கச்சேரியின் முடிவில் பாடகி மத்தியமாவதி ராகத்தில் "வாழிய செந்தமிழ்" பாடிக்கொண்டிருந்தபோது, யாரோ ஒருவர் (சபை நிர்வாகத்தைச் சேர்ந்தவராகவேயிருக்க வேண்டும்) அவசரமாக மேடைமீது வந்தார். ஒலி பெருக்கிக் கம்பத்தைக் கையில் எடுத்துக் கொண்டு பக்க வாட்டில் ஓடினார். பாடகியின் வாழ்த்துப் பாடல் முடிவதற்குள்ளே, திரைமறைவிலிருந்து "ஜனகண மன" என்னும் தேசிய கீதம் பயங்கரக் கூச்சலாக வெளி வந்தது. அதை டாக்டர் டாகூரின் ஆவி கேட்டிருந்தால், "என் பாட்டை ஏன் இப்படிக் கோரமாக்கி வதை செய்கிறீர்கள்!" என்று அலறி யிருக்கக் கூடும். டாக்டர் டாகூர் மீது அந்த மனிதருக்கு என்ன கோபமோ தெரியவில்லை. என்ன கோபமாயிருந்த போதிலும் அதை 'வாழிய செந்தமிழ்' முடிந்த பிறகு காட்டியிருக்கக் கூடாதோ? சபை நிர்வாகிகள் தயவு செய்து கவனிக்க வேண்டும்.



ஜெமினி ஸ்டுடியோஸ்
தயாரித்த

"அபூர்வ சகோதரர்கள்"
பாட்டுகள்

P. பானுமதி & கோரஸ்
N. 28130
லட்டு லட்டு
2 பாகங்கள்
(சமையற்கட்டு பாட்டு)

★

P. பானுமதி
N. 28131
மன மோஹனமே

P. பானுமதி & 'விஜயசிம்ஹன்'
ஆஹா ஆடுவேனே

★

P. பானுமதி
N. 28132
மானும் மயிலும்
ஜுலே மை லால் ஜுலாவே
("நிஷான்")

★

கோரஸ்
N. 28133
மாயா விந்தை
பரதேசமே போகாதே





"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

தி கிராமபோன் கம்பெனி, லிமிடெட்
கல்கத்தா - பம்பாய் - மதராஸ் - டில்லி



மோகினித் தீவு

எட்டாம் அத்தியாயம்

கல்கி

பூரண சந்திரன் உச்சி வானத்தைத் தாண்டி மேற்குத் திசையில் சற்று இறங்கி நின்றான். சந்திரன் நின்றுவிட்டே அந்த அதிசயத் தம்பதிகள் கூறி வந்த கதையைக் கேட்டு விட்டுப் போகலாம் என்று தயங்கி நிற்பது போலத் தோன்றியது. காற்று அடித்த வேகம் வர வரக் குறைந்து இப்போது நிச்சலனமாகியிருந்தது. அந்த மோகினித் தீவின் காவலர்களைப் போல் நின்ற மரங்கள் அச்சமயம் சிறிதும் ஆடவில்லை; இலைகள் சற்றும் அசையவில்லை. கடலும் அப்போது அலை ஓய்ந்து மௌனம் சாதித்தது. சுகுமாரன்—புவன மோகினியின் கதையைக் கேட்பதற்காகப் பிரகிருதியே ஸ்தம்பித்து நிற்பது போலக் காணப்பட்டது.

இப்போது நான் அந்த வரலாற்றைத் திருப்பிச் சொல்லும்போது வார்த்தைகள் உயிரற்றும் உணர்ச்சியற்றும் வருவது எனக்கே தெரிந்துதானிருக்கிறது. ஆனால் அவர்கள் மாற்றி மாற்றிக் கதை சொல்லி வந்தபோது ஒவ்வொரு சம்பவத்தையும் என் கண் முன்னால் நேரில் காண்பது போலவே இருந்தது. ஒவ்வொரு கதாபாத்திரத்தைப் பற்றி அந்தத் தம்பதிகளில் ஒருவர் கூறியபோதும் நான் அந்தக் கதாபாத்திரமாகவே மாறிவிட்டேன். கதாபாத்திரங்கள் அநுபவித்த இன்ப துன்பங்களையெல்லாம் நானும் சேர்ந்து அனுபவித்தேன்.

இடையிடையே சில சந்தேகங்களும் கேள்விகளும் என் மனதில் உதித்துக் கொண்டு வந்தன. இந்தச் சுந்தர புருஷன் யார்? இவனுடைய காதலியான வனிதாமணி யார்? எப்போது இந்தத் தீவுக்கு இவர்கள் வந்தார்கள்? இவர்கள்

தங்களைப் பற்றி ஒன்றுமே சொல்லாமல் இந்தப் பழைய காலக் கதையைச் சொல்லி வரும் காரணம் என்ன? அந்தக் கதைக்கும் இவர்களுக்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா? அல்லது அக் கதைக்கும் இந்தத் தீவுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்க முடியுமா? 'புவன மோகினி' என்ற பாண்டிய குமாரியின் பெயருக்கும் 'மோகினித் தீவு' என்னும் இத்தீவின் பெயருக்கும் ஏதாவது பொருத்தம் உண்டா? இம்மாதிரியான கேள்விகளும் ஐயங்களும் அடிக்கடி தோன்றி வந்தன. ஆனால் அவர்களிடம் அவற்றைக் குறித்துக் கேட்டுச் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. பெண்மணி மூச்சு விடுவதற்காகக் கதையை நிறுத்தினால் ஆடவன் கதையைத் தொடர்ந்து ஆரம்பித்து விடுகிறான். ஆடவன் சற்று நிறுத்தினால் பெண்மணி உடனே ஆரம்பித்து விடுகிறாள்!

இப்படி மாற்றி மாற்றி மூச்சு விடாமல் சொல்லி வந்த போதிலும், அவர்கள் கதை சொன்ன முறையில் ஒரு 'பாணி' இருந்தது, ஒரு 'உத்தி' இருந்தது என்பதைக் கண்டு கொண்டேன். பாண்டிய குமாரிக்கு நிகழ்ந்த சம்பவங்கள், அவளுடைய ஆசாபாசங்கள், அவளுடைய உள்ளத்திலே நிகழ்ந்த போராட்டங்கள் — இவற்றையெல்லாம் அந்த மோகினித் தீவின் அழகி கூறி வந்தாள். சோழ நாட்டு இளவரசனைப் பற்றியும் அவனுடைய மனோ நிகழ்ச்சிகள், — செய்த காரியங்கள் இவற்றைப் பற்றியும் அந்த அழகியின் காதலன் சொல்லி வந்தான்.

இப்படிப் பங்கு போட்டுக் கொண்டு அவர்கள் கதை சொன்ன விசித்திர முறை எனக்கு ஒரு பக்கத்தில் வியப்பு அளித்துக்கொண்டு வந்தது. மற்றொரு பக்கத்தில் கதையை மேலே தெரிந்து கொள்ள ஆசை வளர்ந்து வந்தது.

பாண்டிய குமாரி போர்க்களத்துக்குப் போனாள் என்று சொல்லிவிட்டு அந்தப் பெண்மணி கதையை நிறுத்திய போது வழக்கம்போல் ஆடவன் குறுக்கிடாமல் இருந்ததைக் கண்டேன். ஆனால் அந்த இடத்தில் என் மனதில் மேலே நடந்ததைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் பொங்கிற்று.

"போர்க்களத்திலே என்ன நடந்தது? யுத்தம் எப்படி முடிந்தது? பாண்டிய குமாரி போரில் வெற்றி பெற்றாளா?" என்று பரபரப்புடன் கேட்டேன்.

என்னுடைய கேள்வியிலிருந்தும் குரலில் தொனித்த கவலையிலிருந்தும் அந்தத் தம்பதிகள் என்னுடைய அநுதாபம் புவனமோகினியின் பக்கந்தான் என்பதைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். அவர்கள் இருவருடைய முகத்திலும் புன்னகை மலர்ந்தது. அந்தச் சுந்தர புருஷன் தன் நாயகியின் முகவாயைச் சற்றுத் தூக்கிப் பிடித்து நிலா வெளிச்சத்தில் அவளுடைய முகத்தை உற்று நோக்கினான்.

"கண்மணி! பார்த்தாயா? இந்த மனிதர் பாண்டிய குமாரியைப் பற்றி எவ்வளவு கவலை கொண்டு விட்டார் என்று தெரிகிறதல்லவா? இவருடைய நிலைமையே இப்படி இருக்கும்போது, சோழநாட்டு வீரர்கள் போர்முனையில் புவன மோகினியைப் பார்த்ததும் திணறித் திண்டாடிப் போய்விட்டதில் வியப்பு என்ன?" என்றான்.

அவன் ஆசையோடு முகத்தைப் பிடித்திருந்த கையை அந்தப் பெண்ணரசி மெதுவாய் அகற்றி விட்டு, "ஏதாவது இல்லாததும் பொல்லாததும் சொல்லாதீர்கள்!" என்றாள். பிறகு என்னைப் பார்த்துச் சொன்னாள்:-

"சோழ நாட்டு வீரர்கள் ஒன்றும் திண்டாடிப் போகவில்லை. புவன மோகினிதான் திணறித் திண்டாடிப் போனாள். அந்தப் பேதைப் பெண் அது வரையில் போர்க்களம் என்பதையே பார்த்ததில்லை. அவளுக்கு யுத்த தந்திரம் ஒன்றும் தெரிந்திருக்கவில்லை. அன்று வரையில் அவள் ஆடல் பாடல்களிலும் வேடிக்கை விளையாட்டுகளிலும் கோவில் குளங்களுக்குப் போவதிலும் உல்லாசமாகக் காலங்கழித்து வந்தவள் தானே! திடீரென்று யுத்த களத்தில் கொண்டு போய் நிறுத்தியதும் அவளுக்குத் திக்குத் திசை புரியவில்லை. பெரியவர்களுடைய புத்திமதியைக் கேட்காமல் வந்து விட்டதைக் குறித்து வருந்தினாள். அவள் போர்க்களத்துக்குச் செல்வதை மந்திரிகள், பிரதானிகள்,

மற்றப் படைத் தலைவர்களில் யாரும் விரும்பவில்லை. ஒற்றர் தலைவன் தினகரன் 'அவள் போனால் நிச்சயம் தோல்விதான்!' என்று சபதம் கூறினான். வயது முதிர்ந்த பெரியவர்கள் 'அரசர் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கையில் பாண்டிய குமாரிக்குப் போர்க்களத்தில் ஏதாவது நேர்ந்து விட்டால் பாண்டிய ராஜ்யம் என்ன ஆவது!' என்று கவலைப்பட்டார்கள். இவ்வளவு பேருடைய கருத்துக்கும் மாறாகவே புவனமோகினி யுத்த களத்துக்குப் புறப்பட்டுப் போனாள். அதற்குத் தூண்டுதலாக அவளுடைய இதய அந்தரங்கத்தில் மறைந்து கிடந்த சக்தி என்ன என்பதை உங்களுக்குச் சொல்லி விடுகிறேன். சிற்ப மாணவன் வேடம் பூண்டு வந்து அவளை வஞ்சித்து விட்டுச் சென்ற சோழ ராஜகுமாரனைப் போர்க் களத்திலே நேருக்குநேர் பார்க்கலாம் என்ற ஆசைதான். அந்தப் பாழும் விருப்பமே அவளைப் போர்க்களத்தில் முன்னணியில் கொண்டு போய் நிறுத்தியது. ஒரு பெண் போர்க்கோலம் பூண்டு, பாண்டிய சைன்யத்தின் முன்னணியில் வந்து சண்டைக்கு ஆயத்தமாக நிற்பதைப் பார்த்து விட்டுச் சோழ நாட்டு வீரர்கள் குலுங்கச் சிரித்தார்கள். வஞ்ச நெஞ்சங் கொண்ட சுகுமாரன் சோழர் படைக்குப் பின்னால் எங்கேயோ நின்று தனக்குள் தானே சிரித்துக் கொண்டான்......"

இதைக் கேட்டதும் அந்தப் பெண்ணின் நாயகன் ஆத்திரத்துடன் குறுக்கிட்டுப் பேசினான்:—"இவள் சொல்லுவதை நீங்கள் நம்பவேண்டாம். சோழநாட்டு வீரர்கள் பாண்டிய குமாரியைப் பார்த்துச் சிரிக்கவில்லை. அவர்கள் திகைத்துப் போய் நின்றார்கள்! சுகுமாரன் பின்னால் நின்று தனக்குள் சிரித்துக் கொண்டிருக்கவும் இல்லை. அந்த அபாக்கியசாலி தன்னுடைய இதயத்தைக் கவர்ந்த புவனமோகினியுடன் எதிர்த்து நின்று யுத்தம் செய்யும்படி ஆகிவிட்டதே என்று மனம் நொந்து வேதனைப்பட்டான். ஒருவரும் பாராத தனி இடத்தைத் தேடிச் சென்று கண்ணீர் வடித்தான். முதலில் சில நாள் அவன் போர்க்களத்தில் முன்னணிக்கே வரவில்லை. பாண்டிய குமாரியை நேருக்கு நேர் சந்திப்பதற்கு வெட்கப்பட்டுக் கொண்டுதான் அவன் பின்னால் நின்றான். ஆனால் சுகுமாரன் முன்னணிக்கு வரவேண்டிய அவசியம் சீக்கிரத்திலேயே ஏற்பட்டு விட்டது. பாண்டிய குமாரிக்கு யுத்த தந்திரம் ஒன்றும் தெரிந்திருக்கவில்லை என்று இவள் சொன்னாள் அல்லவா? அது என்னமோ உண்மைதான். அதுவரையில் அவள் போர்க்களத்தையே பார்த்ததில்லை என்பதும் மெய்தான். ஆனால் அவ்விதம் அவள் அதுவரை யுத்தகளத்தைப் பாராமல் இருந்ததே அவளுக்கு மிக்க உதவியாய்ப் போய் விட்டது. போர் முறைகளைப் பற்றி அவளுடைய அறியாமையே ஒரு மகத்தான யுத்த தந்திரம் ஆகிவிட்டது.

போர் முறைகள் தெரிந்தவர்கள் சாதாரணமாய்ப் போவதற்குத் தயங்கக்கூடிய இடங்களுக்கெல்லாம் பாண்டிய குமாரி சர்வ சாதாரணமாகப் போகலுற்றாள். பெண்களிடம் சாதாரணமாகக் காண முடியாத நெஞ்சுத் துணிவையும் தைரியத்தையும் அவள் காட்டினாள். அந்தத் துணிச்சலும் தைரியமும் சிறந்த கவசங்களாகி அவளைக் காத்தன. அவள் காட்டிய தீரம் பாண்டிய வீரர்களுக்கு அபரிமிதமான உற்சாகத்தை ஊட்டியது. போர்க்களத்தில் பாண்டிய குமாரி எந்தப் பக்கம் தோன்றினாலும் அந்தப் பக்கத்திலுள்ள பாண்டிய வீரர்கள் வீர கோஷத்தை எழுப்பிக் கொண்டு சோழர் படையின் மேல் பாய்ந்தார்கள். அதற்கு மாறாகச் சோழ வீரர்களோ புவனமோகினியைச் சற்றுத் தூரத்தில் கண்டதுமே வில்லையும் அம்பையும் வாளையும் வேலையும் கீழே போட்டு விட்டு அந்த அழகுத் தெய்வத்தைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

பாவம் என்பதே அறியாமல் புவனமோகினி அந்த மிகுந்த சௌந்தரியத்தைப் பார்த்த சோழநாட்டு வீரர்களில் பலர் மதுரை மீனாக்ஷி அம்மனே மானிடப் பெண் உருவம் எடுத்துப் பாண்டிய நாட்டைப் பாதுகாப்பதற்காக வந்திருக்கிறாள் என்று நம்பினார்கள். அவளைத் தூரத்தில் கண்டதும் சிலர் கையெடுத்துக் கும்பிட்டார்கள். சிலர் பயந்து பின்வாங்கி ஓடினார்கள். சிலர்

பின்வாங்கி ஓடுவதற்கும் சக்தியில்லாமல் திகைத்துப் போய் நின்றார்கள். அப்படி நின்றவர்களைச் சிறை பிடிப்பது பாண்டிய வீரர்களுக்கு மிகவும் எளிதாய்ப் போய்விட்டது. இதையெல்லாம் அறிந்த உத்தம சோழர் மனம் கலங்கினார். சுகுமாரனை அழைத்து வரச் செய்து அவனுடைய கோழைத் தனத்தைக் குறித்து நிந்தனை செய்தார். 'நீயே ஒரு பெண்ணுக்குப் பயந்து பின்னால் சென்று ஒளிந்து கொண்டால் மற்ற வீரர்கள் எப்படிப் போர் செய்வார்கள்?' என்று கேட்டார். 'இப்படி அவமானத்துடன் தோல்வி யடைந்து சோழ குலத்துக்கு அழியாத அபகீர்த்தியை உண்டு பண்ணவா என்னைப் பாண்டியன் சிறையிலிருந்து விடுவித்துக் கொண்டு வந்தாய்? அதைக் காட்டிலும் நான் சிறைக் கூடத்திலேயே சாகும்படியாக விட்டிருக்கலாமே?' என்றார். அப்போது சுகுமாரன் தான் போர்க்களத்தின் முன்னணிக்குப் போய்த்தீர வேண்டிய அவசியத்தை உணர்ந்தான். சோர்ந்து போயிருந்த சோழ வீரர்களைத் திரட்டி உற்சாகப்படுத்தினான். தான் முன்னால் போர்க்களத்துக்குப் போவதாகவும் தன்னைப் பின் தொடர்ந்து மற்றவர்கள் வரும்படியும் சொன்னான். இளவரசனிடம் அள



வில்லாத விசுவாசம் கொண்டிருந்த சோழநாட்டு வீரர்கள் இனி ஊக்கத்துடன் யுத்தம் செய்வதாக அவனுக்கு வாக்களித்தார்கள். போர் முனையின் முன்னணிக்குப் போய் அவன் அநாவசியமான அபாயத்துக்கு உள்ளாகக் கூடாது என்று வருந்திக் கேட்டுக் கொண்டார்கள்.

அன்றைக்கே சோழர்களின் பக்கம் அதிர்ஷ்டம் திரும்பி விட்டதாகத் தோன்றியது. சோழ வீரர்கள் உற்சாகத்துடன் பாண்டியர் படையைத் தாக்குவதற்குப் போன சமயத்தில் பாண்டிய வீரர்கள் சோர்வுற்றிருந்தார்கள். பாண்டிய குமாரி போர்க்களத்திலிருந்து திடீரென்று மறைந்து விட்டதாகவும் தெரிய வந்தது.

எனவே சோழர் படையின் தாக்குதலை எதிர்த்து நிற்க முடியாமல் பாண்டிய வீரர்கள் பின் வாங்கி ஓடத் தொடங்கினார்கள். அவ்விதம் ஓடியவர்களைத் துரத்தியடிப்பது சோழ வீரர்களுக்கு மிகவும் சுலபமாய்ப் போய் விட்டது. இதன் பேரில் உத்தம சோழரும் மற்றவர்களும் சுகுமாரனைக் கொண்டாடினார்கள். ஆனால் அவனுடைய மனதில் நிம்மதி ஏற்பட வில்லை. பாண்டிய குமாரியின் கதி என்ன ஆயிற்றோ என்று எண்ணி எண்ணி அவன் மனங் கலங்கினான்...”



ஒன்பதாம் அத்தியாயம்

போஜனித் தீவின் பெண்ணரசி இந்த இடத்தில் மறுபடியும் குறுக்கிட்டுக் கதையைத் தொடர்ந்தாள்:— "பாண்டிய வீரர்கள் அப்படிப் பின் வாங்கியதற்குக் காரணம், பராக்கிரம பாண்டியர் காலமாகி விட்டார் என்ற செய்தி வந்ததுதான். அந்தச் செய்தி வருவதற்கு முன்பே புவன மோகினி தந்தையைக் கடைசி முறை தரிசிப்பதற்காக மதுரைக்கு விரைந்தோடினாள். மரணத் தறுவாயிலிருந்த பராக்கிரம பாண்டியர் தம் அருமைக் குமாரியைக் கட்டி அணைத்துக் கொண்டு ஆசி கூறினார். அவள் செய்த குற்றத்தை மன்னித்து விட்டதாகத் தெரிவித்தார். அவள் வீரப் போர் புரிந்து பாண்டிய நாட்டின் கௌரவத்தை நிலைநாட்டியதைப் பாராட்டினார். இனிமேல், யுத்தத்தை நிறுத்தி விட்டுச் சோழர்களுடன் சமாதானம் செய்து கொள்ளும்படியும் புத்திமதி சொன்னார். 'நான் இறந்து விட்ட பிறகு சோழர்கள் போர் செய்ய மாட்டார்கள். ஒரு அபலைப் பெண்ணோடு யுத்தம் செய்யும்படி அவ்வளவு தூரம் சோழ குலம் மானங் கெட்டுப் போய் விடவில்லை. அவர்கள் போரை நிறுத்த விரும்பினால் நீ அதற்கு மாறு சொல்ல வேண்டாம்!' என்றார். கடைசியாக, 'உனக்குத் திருமணம் நடத்திப் பார்க்க வேண்டும் என்ற என் மனோரதம் ஈடேறவில்லை. மீனாக்ஷி அம்மனுடைய அருளினால் நீ உன் மனதுக்குகந்த மணாளனை மணந்து இன்புற்று வாழ்வாய்!' என்று ஆசி கூறினார். இவ்விதம் ஆசி கூறிச் சிறிது நேரத்துக்கெல்லாம் பராக்கிரம பாண்டியர் தமது அருமை மகளுடைய மடியில் தலையை வைத்துப் படுத்தபடி இந்த இக வாழ்வை நீத்துச் சென்றார்.

புவனமோகினி அழுதாள்; அலறினாள்; கண்ணீரை அருவியாகப் பெருக்கினாள். என்ன தான் அழுதாலும் இறந்தவர்கள் திரும்பிவர மாட்டார்கள் அல்லவா? தகனக்கிரியைகள் ஆனவுடனே பாண்டிய குமாரி மறுபடியும் போர் முனைக்குச் சென்றாள். ஆனால் முன்னைப் போல் அவளுக்கு உற்சாகம் இருக்கவில்லை. சோகத்தில் மூழ்கியிருந்த புவன மோகினியினால் பாண்டிய வீரர்களுக்கு ஊக்கம் ஊட்டவும் முடியவில்லை. 'உன் மனதுக்கு உகந்த மணாளனை மணந்து கொள்' என்று தந்தை மரணத் தறுவாயில் கூறியது அவள் மனதில் பதிந்திருந்தது. மனதுக்கு உகந்த மணாளனை மணப்பதென்றால் ஒருவரைத்தான் அவள் மணக்க முடியும். ஆனால் அவரோ தன்னை வஞ்சித்துவிட்டுத் தான் கொடுத்த முத்திரை மோதிரத்தையும் எடுத்துக்கொண்டு ஓடிப் போனவர். தான் அவரிடம் காட்டிய அன்புக்குப் பிரதியாகத் தன் ராஜ்யத்தின் மீது படையெடுத்து வந்திருப்பவர். அவரைப் பற்றி நினைப்பதில் பயன் என்ன? அடா! அவர் உண்மையாகவே ஒரு சிற்ப மாணாக்கராக இருந்திருக்கக் கூடாதா? இருந்திருந்தால் இப்போது சோழர்களிடம், 'இந்த ராஜ்யம் எனக்கு வேண்டாம்; நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்!' என்று சொல்லிவிட்டுப் போய்விடலாமே? அதிலும் தந்தை இறந்த பிறகு இந்தப் போராட்டமே வேண்டியதில்லையே? அந்த இளஞ் சிற்பியை மணந்து ஆனந்தமாக வாணாளைக் கழிக்கலாமே?—இப்படிப்பட்ட எண்ணங்களினால் அவளுடைய மனது குழம்பியிருந்தது. தான் உயிர் வாழ்ந்திருக்க வேண்டும் என்ற ஆசையே அவளுக்கு இல்லாமல் போய்விட்டது. அப்படிப்பட்ட சமயம் பார்த்து, வீராதி வீரரும் சூராதி சூரருமான குமார சோழர் புவனமோகினி இருந்த இடத்துக்குத் தாமே நேரில் விஜயம் செய்து பிரமாதமான வீரப் போர் புரிந்து அவளைச் சிறைப் பிடித்து விட்டார்! பாண்டிய குமாரி சிறைப்பட்டதும் பாண்டிய சேனையும் சின்னாபின்னமடைந்து சிதறி ஓடிவிட்டது. தமிழ்நாட்டு மன்னர்களின் வீரதீரங்களைப் பற்றி நீங்கள் எவ்வளவோ கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் இந்த மாதிரி ஒரு அபலைப் பெண்ணுடன் ஒரு ராஜகுமாரன் போர்

புரிந்து அவனைச் சிறைப்படுத்திய அபாரமான வீரத்தைப் பற்றி நீர் கேள்விப்பட்டதுண்டா?"

இவ்விதம் கூறிவிட்டு அந்தப் பெண்ணரசி கடைக் கண்ணால் தன் நாயகனைப் பார்த்தாள். அந்தப் பார்வையில் அளவில்லாக் காதல் புலப்பட்டது. ஆனால் அவளுடைய குரலில் ஏளனம் தொனித்தது.

அந்த யுவதியின் ஏளன வார்த்தைகளைக் கேட்ட அவளுடைய நாயகன் சிரித்தான். என்னைப் பார்த்து, "பெண்களுடைய போக்கே விசித்திரமானது. அவர்களை மகிழ்விப்பது பிரம்மப் பிரயத்தனமான காரியம். நாம் நல்லது செய்தால் அவர்களுக்குக் கெடுதலாகப் படும். நம்முடைய நோக்கத்தைத் திரித்துக் கூறுவதிலேயே அவர்களுக்கு ஒரு தனி ஆனந்தம்!" என்று கூறி மேலும் சொன்னான்:—

"சோழ ராஜகுமாரன் போர்க்களத்தில் முன்னால் வந்து நின்று பாண்டிய குமாரியைத் தோற்கடித்து அவளைச் சிறைப் பிடித்தது உண்மைதான். ஆனால் அதற்குக் காரணம் என்ன தெரியுமா? புவனமோகினி தற்கொலை செய்து கொண்டு சாகாமல் அவள் உயிரைக் காப்பாற்றும் பொருட்டுத்தான். புவன மோகினியின் மனதில் தந்தை இறந்த காரணத்தினால் சோர்வு ஏற்பட்டிருக்கலாம். ஆனால் அந்த மனச் சோர்வை அவள் போர்க்களத்தில் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளவில்லை. முன்னைக் காட்டிலும் பத்து மடங்கு வீராவேசத்தோடு போர் புரிந்தாள். கத்தியைச் சுழற்றிக் கொண்டு போர்க்களத்தில் தன்னந் தனியாக அங்குமிங்கும் ஓடினாள். பாண்டிய குமாரியை யாரும் காயப்படுத்தி விடக் கூடாதென்று சுகுமாரன் சோழ வீரர்களுக்குக் கண்டிப்பான கட்டளையிட்டிருந்தான். ஆனால் அவர்கள் அந்தக் கட்டளையை நிறைவேற்றுவது இயலாமற் போகும்படி புவன மோகினி நடந்து கொண்டாள். எப்படியாவது போர்க்களத்தில் உயிரை விட்டு விடுவது என்றும், சோழர் குலத்துக்கு அழியாத பழியை உண்டு பண்ணுவது என்றும் அவள் தீர்மானம் செய்திருந்ததாகக் காணப்பட்டது. 'சண்டையை இனி நிறுத்திவிட்டுச் சமாதானமாகப் போகலாம்' என்று சொல்லி யனுப்பியதை அவள் சட்டை செய்யவில்லை. அதன்பேரில் சுகுமாரன் தானே அவளுக்கு எதிரே வந்து நிற்க வேண்டியதாயிற்று. சுகுமாரனைத் திடீரென்று பார்த்ததும் பாண்டிய குமாரியின் கையிலிருந்து கத்தி நழுவி விழுந்தது. உடனே பக்கத்திலிருந்த சோழ வீரர்கள் அவளைப் பிடித்துக் கொண்டார்கள். கயிறு கொண்டு அவளுடைய கைகளைக் கட்டிச் சுகுமாரன் எதிரில் கொண்டு போய் நிறுத்தினார்கள். சுகுமாரன் உடனே குதிரை மீதிருந்து கீழே இறங்கினான். பாண்டிய குமாரிக்கு ஆறுதலான மொழிகளைச் சொல்லவேண்டும் என்று கருதினான். ஆனால் மனதில் தோன்றிய ஆறுதல் மொழிகள் வாய் வழியாக வருவதற்கு மறுத்தன. புவன மோகினியின் கோலத்தைக் கண்டு அவன் கண்களில் கண்ணீர் ததும்பியது. அவள் தந்தையை இழந்து நிராதரவான நிலையில் இருப்பதை எண்ணி அவன் உள்ளம் உருகியது. ஆனால் ஆண் மக்களைவிடப் பெண் மக்கள் பொதுவாகக் கல் நெஞ்சு படைத்தவர்கள் என்பதை அப்போது புவனமோகினி நிரூபித்தாள். சுகுமாரனை அவள் ஏறிட்டுப் பார்த்து, 'ஐயா, மதிவாணரே! செப்புச் சிலை செய்யும் வித்தையைச் சோழ மன்னனிடமிருந்து கற்றுக் கொண்டுவிட்டீரா?' என்று கேட்டாள். அதற்கு மறுமொழி சொல்ல சுகுமாரனால் முடியவில்லை. தான் அவளை ஏமாற்றி விட்டு வந்ததற்காக அவளிடம் வணங்கி மன்னிப்புக் கேட்டுக்கொள்ள அவன் விரும்பினான். ஆனால் அத்தனை வீரர்களுக்கு மத்தியில் ஒரு பெண்ணுக்குப் பணிந்து மன்னிப்புக் கேட்டுக் கொள்ளச் சுகுமாரனுக்குத் தைரியம் வரவில்லை. ஆகையால் புவன மோகினியைப் பத்திரமாய்க் கொண்டு போய்த் தக்க பாதுகாப்பில் வைக்கும்படி கட்டளை பிறப்பித்துவிட்டுத் தன்னுடைய தந்தையைத் தேடிப்போனான்.


உத்தம சோழர் அப்போது வெகு உற்சாகமாக இருந்தார். மதுரையின் வீதிகளில் அவரைத் தேர்க்காலில் கட்டிப் பராக்கிரம பாண்டியன் இழுத்



துச் சென்றதை உத்தம சோழர் மறக்கவே இல்லை. அதற்குப் பழிக்குப் பழி வாங்குவதற்கு இப்போது சந்தர்ப்பம் கிடைத்து விட்டது என்று அவர் எண்ணிச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தார். பராக்கிரம பாண்டியன் இறந்து விட்டபடியால் அவனுக்குப் பதிலாக அவனுடைய மகளைப் பழி வாங்குவதற்கு அவர் திட்டங்கள் போட்டுக் கொண்டிருந்தார். இந்தச் சமயத்தில் சுகுமாரன் வந்து சேர்ந்தான். அவனுடைய இதயம் கொந்தளித்துக் கொண்டிருந்தது. உரலுக்கு ஒரு பக்கத்தில் இடி, மத்தளத்துக்கு இரண்டு பக்கத்திலும் இடி என்ற பழமொழி தெரியுமல்லவா? சுகுமாரன் மத்தளத்தின் நிலையில் இருந்தான். ஒரு பக்கம் அவனுடைய காதலைக் கொள்ளை கொண்ட புவன மோகினி அவனை வஞ்சகன் என்று நிந்தனை செய்தாள். இன்னொரு பக்கத்தில் அவனுடைய தந்தை ஒரே மூர்க்க ஆவேசங் கொண்டு பாண்டிய குமாரி மீது வஞ்சந் தீர்த்துக் கொள்ள வழிகளைத் தேடிக் கொண்டிருந்தார். சுகுமாரன் அவரிடம் மெள்ள மெள்ளத் தன் மன நிலையை வெளியிட முயன்றான். முதலில் அரச தர்மத்தைத் தந்தைக்கு நினைப்பூட்டினான். 'புவனமோகினி பாண்டிய ராஜனின் மகள் அல்லவா? அவளை மரியாதையாக நடத்த வேண்டாமா?' என்றான். அதற்கு உத்தம சோழர், 'அவர்கள் பரம்பரைப் பாண்டியர்கள் அல்ல; நடுவில் வந்து மதுரைச் சிம்மாசனத்தைக் கவர்ந்தவர்கள்; அவர்களுக்கு ராஜ குலத்துக் குரிய மரியாதை செய்ய வேண்டியதில்லை' என்று சொன்னார்.

பிறகு சுகுமாரன் 'பாண்டிய குமாரியின் உதவி யில்லாவிட்டால் நான் தங்களை விடுவித்திருக்க முடியாது. அவள் கொடுத்த முத்திரை மோதிரத்தை எடுத்துக் கொண்டு தான் சிறைக்குள்ளே நான் வர முடிந்தது. அந்த மோதிரத்தைக் காட்டித்தானே நாம் தப்பித்து வந்தோம்?' என்றான்.

அதற்கு உத்தம சோழர், 'யுத்த முறைகள் நாலு உண்டு, சாம தான பேத தண்டம் என்று. பேத முறையைக் கையாண்டு எதிரியை ஏமாற்றினாய். அது நியாயமான யுத்த முறைதான். அதற்காக நீ வருத்தப்பட வேண்டியதில்லை! உலகம் தோன்றின நாள் தொட்டு அரச குலத்தினர் பகைவர்களை வெல்வதற்காகத் தந்திரோபாயங்களைக் கைக் கொண்டிருக்கின்றனர். சாணக்கியர் அர்த்த சாஸ்திரத்தில் என்ன சொல்லியிருக்கிறார் என்று உனக்குத் தெரியாதா?' என்றார். சுகுமாரன் கடைசியாகத் தன்னுடைய உள்ளத்தின் நிலையை உள்ளபடியே வெளியிட்டான். பாண்டிய குமாரியிடம் தான் காதல் கொண்டு விட்டதையும் அவளைத் தவிர வேறு யாரையும் கலியாணம் செய்து கொள்



னைத் தன் மனம் இடம் கொடாது என்பதையும் சொன்னான். இதை அவன் சொன்னானோ இல்லையோ, உத்தம சோழர் பொங்கி எழுந்தார். துர்வாச முனிவரும் விசுவாமித்திரரும் பரசுராமரும் ஒருருக்கொண்டது போலானார். 'என்ன வார்த்தை சொன்னாய்? அந்தக் கிராதகனுடைய மகன் பேரில் காதல் கொண்டாயா? என்னைத் தேர்க் காலில் கட்டி, மதுரையின் வீதிகளில் இழுத்த பாதகனின் குமாரியை மணந்து கொள்வாயா? என்னைச் சிறையில் அடைத்துச் சங்கிலி மாட்டி விலங்கினத்தைப்போலக் கட்டி வைத்திருந்த சண்டாளனுடைய மகள் சோழ சிங்காதனத்தில் வீற்றிருப்பதை நான் அநுமதிப்பேனா? ஒரு நாளும் இல்லை! அப்பனைப் போலவே மகளும் சூழ்ச்சி செய்திருக்கிறாள். உன்னை வலை போட்டுப் பிடிக்கத் தந்திரம் செய்திருக்கிறாள். அதில் நீயும் விழுந்து விட்டாய். புவன மோகினியை நீ கலியாணம் செய்து கொள்வதாயிருந்தால் என்னைக் கொன்றுவிட்டுச் செய்து கொள்! நான் உயிரோடிருக்கும் வரை அதற்குச் சம்மதியேன்! அவனைப் பற்றி இனி என்னிடம் ஒரு வார்த்தையும் பேசாதே! அவனைக் கரும்புள்ளி செம்புள்ளி குத்திக் கழுதைமேல் ஏற்றி வைத்து அதே மதுரை நகர் வீதிகளில் ஊர்வலம் நடத்தப் போகிறேன். அப்படிச் செய்தால் ஒழிய என் மனதில் உள்ள புண் ஆறாது!' என்று இப்படியெல்லாம் உத்தம சோழர் ஆத்திரத்தைக் கொட்டினார்.

இந்த மனோநிலையில் அவருடன் பேசுவதில் பயனில்லையென்று சுகுமாரன் தீர்மானித்தான். கொஞ்ச காலம் கழித்து அவருடைய கோபம் தணிந்த

பிறகு முயற்சி செய்து பார்க்க வேண்டும். அதற்குள்ளே கோப வெறி காரணமாகப் புவனமோகினியை ஏதாவது அவமானப்படுத்தி விட்டால் என்ன செய்கிறது? அந்த நினைவையே சுகுமாரனால் பொறுக்க முடியவில்லை. காதலும் கலியாணமும் ஒருபுறம் இருக்க, அவள் தனக்குச் செய்த உதவிக்குப் பிரதி நன்றி செலுத்த வேண்டாமா?—இவ்விதம் யோசித்ததில் கடைசியாக ஒருவழி அவன் மனதில் தோன்றியது. சிறையிலிருந்து அவள் தப்பிப் போகும்படி செய்வது முதல் காரியம். நேரில் அவளிடம் போய் எதுவும் பேசுவதற்கு அவனுக்கு வெட்கமாயிருந்தது. தன்னைப் பார்த்ததும் 'செப்பு விக்கிரகம் செய்யும் வித்தையைக் கற்றுக் கொண்டீரா?' என்றுதான் மீண்டும் அவள் கேட்பாள்? அதற்கு என்ன மறுமொழி கூறுவது? அதைக் காட்டிலும் வேறொருவர் மூலம் காரியம் நடத்துவது நல்லது. எனவே, நம்பிக்கையான தாதிப் பெண் ஒருத்தியை சுகுமாரன் அழைத்தான். அவளிடம் சோழ நாட்டு முத்திரை மோதிரத்தைக் கொடுத்தான். அவளைப் பாண்டிய குமாரியின் சிறைக்குள்ளே சென்று அவளைப் பார்த்து, 'உன்னிடம் ஒரு சமயம் பாண்டிய ராஜாங்கத்தின் முத்திரை மோதிரத்தை வாங்கிக் கொண்டவர் இந்த மாற்று மோதிரத்தை உனக்கு அனுப்பியிருக்கிறார். அவர் அந்த மோதிரத்தை உபயோகித்தது போல் இதை நீயும் உபயோகிக்கலாம்' என்று சொல்லிவிட்டு மோதிரத்தைக் கொடுத்துவிட்டு வரும்படி அனுப்பினான். தாதி சென்ற பிறகு சுகுமாரனுக்குச் சும்மா இருக்க முடியவில்லை. புவனமோகினி மோதிரத்தை வாங்கிக் கொண்டு என்ன செய்கிறாள், என்ன சொல்கிறாள் என்று தெரிந்துகொள்ள விரும்பினான். ஆகவே தாதியின் பின்னோடு சுகுமாரனும் சென்று ஒரு மறைவான இடத்தில் இருந்து ஒட்டுக் கேட்டான். அவன் சொன்னமாதிரியே சொல்லித் தாதி மோதிரத்தைக் கொடுத்தபோது பாண்டிய குமாரி கூறிய மறுமொழி அவனை மறுபடியும் திகைப்படையச் செய்துவிட்டது......"

இவ்விதம் சொல்லி மோகினித்தீவின் சுந்தர புருஷன் கதையை நிறுத்தினான். மேலே நடந்ததைத் தெரிந்து கொள்ள என்னுடைய ஆவல் உச்ச நிலையை அடைந்தது. (தொடரும்)

படித்துப் பார்!

The South Indian Journalist

தென்னிந்தியப் பத்திரிகையாளர் சம்மேளனத்திலிருந்து வெளிவந்திருக்கும் மேற்படி மாதப் பத்திரிகையைப் பார்க்கும்போது, "பேஷ், பொதுஜனங்களுக்காகப் பத்திரிகை நடத்தும் பத்திரிகைக்காரர்கள் தங்களுக்காகவே ஒரு பத்திரிகை நடத்தினால் அது நன்றாயிருக்கக் கேட்பானேன்?" என்று சொல்லத் தோன்றுகிறது. பத்திரிகையின் முகப்புப் பக்கத்தை, சம்மேளனத் தலைவர் ஸ்ரீ ரங்கநாதய்யருடைய செய்தி அலங்கரிக்கிறது. "நியூ இந்தியா"ப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்து தம்முடைய எழுத்து வன்மையின் மூலம் இந்நாட்டுக்கு அருந் தொண்டாற்றிய வீராங்கனை ஸ்ரீமதி அன்னி பெஸண்ட் அம்மையாரைப் பற்றிய விஷயம் மிக ரஸமாயிருக்கிறது. சர்க்கார் அதிகாரிகள் பத்திரிகை நிருபர்களுக்கு எந்தச் செய்தியையும் கொடுக்கக் கூடாது என்று பாகிஸ்தான் சர்க்கார் பிறப்பித்திருக்கும் புதிய உத்திரவைக் கண்டித்துத் தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது. சமீபத்தில் சென்னைக்கு விஜயம்செய்த பிரபல அமெரிக்கப் பத்திரிகைக்காரரான வால்டர் லிப்மானைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் குறிப்பும் சுவையாக இருக்கிறது. பத்திரிகை உதவி ஆசிரியர்களின் வேலைகளில் ஏற்படக்கூடிய சிரமங்களைப் பற்றி ஒரு அழகான கட்டுரை வெளியாகியிருக்கிறது. இதைத் தவிர சம்மேளனம் சம்பந்தமான செய்திகள் ஆங்காங்கு நிறைந்திருக்கின்றன.

"ஹிந்து" பத்திரிகையின் உதவி ஆசிரியராக நீண்ட காலம் தொண்டு செய்தவரும், பத்திரிகையாளர் சம்மேளனத்தின் முதல் தலைவருமான ஸ்ரீ கே. பி. விசுவநாதய்யர் இந்தப் பத்திரிகையாளர் பத்திரிகைக்குப் பத்திராசிரியராக இருக்க இசைந்தது மிக்க மகிழ்ச்சி தருகிறது. பத்திரிகைத் தொழிலில் சிரத்தை உள்ள அனைவருக்கும் மிகவும் உபயோகமான இந்தப் பத்திரிகையின் ஒரு பிரதி விலை அணா நான்குதான். விலாசம்: The South Indian Journalist, 5-6, Sri Rama Buildings, Mount Road, Madras.


பரிபூரணத் திருப்தியளிக்கும்
அபூர்வமான
சித்திரம்..
அபூர்வ
சகோதரர்கள்
ஜெமினி தயாரிப்பு....
.... சென்னை பிரபாத், வெலிங்டன் ....
இரு தியேட்டர்களிலும், மற்றும் தமிழ் நாடெங்கும் நடைபெறுகிறது..

ஆம்பூர் ஹிந்து ஹைஸ்கூல் கட்டிட நிதிக்காக



ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

அவர்கள் உதவும் சங்கீதக் கச்சேரி

●

சங்கீத ரத்ன ஸ்ரீ சௌடய்யா ... வயலின்
ஸ்ரீ கல்பாத்தி ராமநாதன் ... மிருதங்கம்
ஸ்ரீ ஆலங்குடி ராமச்சந்திரன் ... கடம்

21 - 1 - 1950 சனிக்கிழமை மாலை 5 - 30 மணிக்கு

ஆம்பூர் ஹிந்து ஹைஸ்கூல் காம்பவுண்டில் விசேஷமாக அமைக்கப்பட்டிருக்கும் விஸ்தாரமான பந்தலில்

டிக்கெட்டுகள்: ரூ. 200, 100, 50, 25, 10 & ரூ. 5/-

டாக்டர் C. நாதமுனி நாயுடு
கரஸ்பாண்டெண்ட்

ஒலி பெருக்கி ஏற்பாடு: திருச்சி ரேடியோ சேல்ஸ் அண்டு சர்வீஸ்

"ஸ்டேப்ரைட்"

ஸ்டேயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களை வீட்டுக்கு வீடு மிகவும் மேலாகக் கொண்டாடுகின்றது!

உங்கள் வீடுகளை அலங்கரிக்கச் செய்வதும் நீடித்த உழைப்பை அளிக்கக் கூடியதும் ஸ்டேப்ரைட் பாத்திரங்களே!!

மனதைக் கவரும் அழகிய வடிவங்களில் பல பல ரகங்களில் நூதன நூதன வகைகளில் ஏராளமாக வந்து குவிந்துள்ளன!!!

●

சென்னை, தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் நடைபெறும் அகில இந்திய காதி, சுதேசி, கைத்தொழில் பொருட்காட்சியில்

எங்கள் ஸ்டால் நெ. 1

தங்களுடைய வரவை அன்புடன் வரவேற்கிறது

●

இந்தியா, இலங்கைக்குப் பூரண விற்பனை ஏஜெண்டுகள்

ஸாம்ஸன் & கோ., லிமிடெட்

8-22, பிராட்வே - த. பெ. 1219 - மதராஸ் 1

போன்: 4521   தந்தி: "BARAPASH"



3. நளினிக்கு ஆபத்து

அலி மந்திரக் குழாயை வாங்கியதும் தன் தந்தையைக் காணவேண்டுமென்று விரும்பினான். உடனே தன் தந்தை ராஜ சபையில் இருப்பதை அந்தக் குழாய் மூலம் கண்டான். பிறகு, தன் காதலியான நளினியைப் பார்க்க வேண்டுமென ஆசைப்பட்டான். உடனே நளினி தன் தோழிகளுடன் சிரித்து விளையாடிக் கொண்டிருக்கும் காட்சி குழாயில் தென்பட்டது. இதைக் கண்டவுடன் அலிக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. உலகத்திலேயே மிகவும் அதிசயமான பொருள் தனக்குக் கிடைத்து விட்டது என்று எண்ணிப் பெருமையடைந்தான். இனி நளினி தனக்கே கிடைக்கப் போகிறாள் என்று முடிவு செய்து கொண்டான். உடனே குழாய் வியாபாரியைத் தட்டிக் கொடுத்து அவனிடம் நாற்பது பை தங்க நாணயங்களைக் கொடுத்தான். தேடிய பொருள் கிடைத்து விட்டதால் இனி பிரயாணம் செய்ய வேண்டியதில்லை என்று அவன் தீர்மானம் செய்தான்.

ஊருக்குத் திரும்புவதற்குமுன் பாரசீகத்தில் முக்கியமாகப் பார்க்க வேண்டிய இடங்களைப் பார்த்தான். பாரசீகப் பிரயாணம் முடிந்த சில நாட்களுக்குப் பிறகு அலி பல

ரா. நா.

வியாபாரிகளுடன் சேர்ந்து கொண்டு தனது நாட்டுக்குத் திரும்பினான். பல நாட்கள் பிரயாணம் செய்த பிறகு தனது சகோதரர்களைச் சந்திப்பதற்காகத் திட்டம் செய்யப்பட்ட சத்திரத்திற்கு வந்து சேர்ந்தான். அங்கு ஏற்கெனவே தனது சகோதரன் ஹுசேன் இருப்பது கண்டு அவனைக் கட்டித் தழுவிக் கொண்டான். இருவரும் தங்களுடைய பிரயாண அனுபவங்களைப் பற்றிப் பேசிக் கொண்டனர். ஆனால் தாங்கள் வாங்கிக் கொண்டு வந்த அதிசயப் பொருள்களைப் பற்றிப் பேசவே இல்லை. மூன்றாவது சகோதரனும் அங்கு வந்து சேர்ந்த பிறகு அதைப் பற்றிப் பேசலாம் என்று அவர்கள் முடிவு செய்தனர்.

மூன்றாவது இளவரசன் அஹமத் நேராக சமர்க்கண்ட் நாட்டிற்குச் சென்றான். அந்த நாட்டை அடைந்த மறுநாள் வியாபாரிகள் தங்கள் சரக்குகளை விற்பனை செய்யும் சந்தைக்குச் சென்றான். ஒவ்வொரு கடையாகப் பார்த்து வரும்பொழுது ஒருவன் ஒரு செயற்கை ஆப்பிள் பழத்தை வைத்துக்கொண்டு, முப்பது பை தங்க நாணயம் தருபவர்களுக்கு அதை விற்றுவிடுவதாகக்

கூவிக் கொண்டு சென்றான். . இதைக் கேட்ட அஹமத் 'ஒரு சிறு செயற்கைப் பழத்திற்கு இவ்வளவு விலையா?' என்று ஆச்சரியமடைந்தான். அந்த வியாபாரியை அழைத்து அந்தப் பழத்தைக் காட்டும்படி கேட்டான். வியாபாரி அந்தப் பழத்தைக் காட்டிவிட்டு அஹமதைப் பார்த்துக் கூறியதாவது:—

“இந்தச் சிறிய செயற்கைப் பழத்திற்கு இவ்வளவு விலையா என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். ஆனால், இந்தப் பழம் சாகும் தறுவாயில் இருப்பவர்களையும் குணப்படுத்தும் சக்தி வாய்ந்தது. ஒரு நோயாளி என்ன மோசமான நிலைமையில் இருந்தாலும் சரி, இந்தப் பழத்தை அவனுடைய மூக்குக்கு அருகில் கொண்டுபோய் வைத்தால் அவன் உடனே நோய் தீர்ந்து சுகமடைந்து விடுவான்.”

இதைக் கேட்டு அஹமத் மிகவும் ஆச்சரியமடைந்து, “இது உண்மை என்று நிரூபிப்பாயானால் இந்த ஆப்பிளுக்கு நாற்பது பை தங்கம் தரத் தயாராயிருக்கிறேன்” என்றான். அஹமதும் வியாபாரியும் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டு அங்கு ஏராளமான ஜனங்கள் கூடிவிட்டனர். அந்தக் கூட்டத்திலிருந்த ஒருவன் தன் உறவினர் ஒருவர் சாகும் தறுவாயிலிருப்பதால் இந்தப் பழத்தின் சக்தியை அந்த நோயாளியின் மீது பிரயோகம் செய்து பார்க்கலாம் என்று கூறினான். அதற்கு வியாபாரி ஒப்புக் கொண்டான். சீக்கிரத்தில் எல்லோரும் நோயாளி இருக்கும் வீட்டிற்கு வந்து சேர்ந்தனர். அந்த நோயாளியின் முகத்திற்கருகில் ஆப்பிளைக் கொண்டு போனதுதான் தாமதம், அவன் சுறுசுறுப்பாய் எழுந்து உட்கார்ந்து கொண்டு பேச ஆரம்பித்துவிட்டான். இந்த அதிசயத்தைக் கண்டு எல்லோரும் பிரமித்துப் போய்விட்டனர்.

அஹமதிற்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. இதைவிட அதிசயமான பொருளைத் தனது சகோதரர்கள் அடைய முடியாது என்று அவன் கருதினான். இனி இளவரசி களிம் தனது மனைவியாகப் போவது நிச்சயம் என்று நினைத்துப் பூரித்துப் போனான். பேசியபடி நாற்பது பை பொன் நாணயங்களை வியாபாரிக்குக் கொடுத்து விட்டு, ஆப்பிள் பழத்தை அவனிடமிருந்து வாங்கிக் கொண்டு தான் தங்கியிருந்த துறைக்குப் போய்ச் சேர்ந்தான். சமர்க்கண்ட் நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களையும், அந்நாட்டு சட்ட திட்டங்களையும் அறிந்து கொண்டு தனது நாட்டிற்குத் திரும்பினான். பல நாட்கள் பிரயாணம் செய்து கடைசியில் தன் சகோதரர்களைச் சந்திக்க வேண்டிய சத்திரத்திற்கு வந்து சேர்ந்தான். அங்கு ஏற்



கெனவே ஹுசேனும் அலியும் இருப்பது கண்டு சந்தோஷமடைந்து அவர்கள் இருவரையும் கட்டித் தழுவி ஆனந்த மடைந்தான். பிரயாண அநுபவங்களைப் பற்றிப் பேசிக் காலங் கழிக்காமல் மூவரும் தாங்கள் வாங்கிய அதிசயப் பொருளைப் பிறருக்குக் காட்டி அதன் பெருமையைப் பற்றி மிகவும் பாராட்டிப் பேசினார்கள்.

ஹுசேன் தனது கம்பளத்தை மற்ற சகோதரர்களுக்குக் காட்டிக் கூறினான். "தம்பிகாள்! என் மந்திரக் கம்பளத்தைப் பாருங்கள். அதை நான் பீஸ் நகரில் ஒரு வியாபாரியிடம் நாற்பது பை தங்க நாணயங்கள் கொடுத்து வாங்கினேன். அதற்கு நான் கொடுத்த விலை எல்லா விதத்திலும் தகும். ஏனெனில் அதன் மீது உட்கார்ந்து உலகில் எந்த இடத்திற்குப் போக வேண்டும் என விரும்பினாலும் அந்த இடத்திற்குக் கொண்டு போய் விடும். நீங்கள் இருவரும் வாங்கிய அதிசயப் பொருள்கள் இந்தக் கம்பளத்திற்கு இணையாகாது."

உடனே இரண்டாவது இளவரசன் அலி கூறினான்:—"ஆமாம்! நீ வாங்கிய கம்பளம் அதிசயமானதுதான். ஆனால் பாரசீகத்தின் தலை நகராகிய ஷிராஸில் ஒரு வியாபாரியிடமிருந்து நான் வாங்கிய இந்த மந்திர சக்தி வாய்ந்த தந்தக் குழாய்க்கு அது இணையாகாது" என்று கூறி அந்தக் குழாயைத் தன்னுடைய இரு சகோதரர்களுக்கும் காட்டினான். பிறகு மேலும் அதன் சக்தியை விவரித்துக் கூறினான்: "இதை நானும் நாற்பது பைப்பொன் நாணயங்கள் கொடுத்து வாங்கினேன். இந்தக் குழாயின் நுனியில் உள்ள கண்ணாடி மூலம் எதைப் பார்க்க விரும்பினாலும் அது உடனே கண்ணுக்குத் தெரியும். வேண்டுமானால் குழாயை எடுத்து நான் கூறுவது உண்மைதானா என்று சோதனைசெய்து பார்த்துக் கொள்."

உடனே ஹுசேன் குழாயை எடுத்து நளிமைப் பார்க்க விரும்பினான். பார்த்தவுடன் பீதியினால் அவன் முகம் வெளுத்தது. வீறிட்டு அலறினான். தன் சகோதரர்களைப் பார்த்து, "ஐயோ! இதென்ன பயங்கரக் காட்சி! சகோதரர்களே, இதுவரையில் நாம் பட்ட கஷ்டங்களெல்லாம் வீணாகி விடும் போலிருக்கிறதே! இன்னும் சில நிமிஷங்களில் நமது ஆசை நளிமின் உயிர் போய்விடும் போலிருக்கிறதே? அவள் நோய் வாய்ப்பட்டு இளைத்துத் துரும்பாய்ப் படுத்திருப்பது குழாய் மூலம் தெரிகிறது. அவளுடைய தோழிகளெல்லாம் அவளைச் சுற்றி நின்று கொண்டு அழுத வண்ணமிருக்கின்றனர். ஐயோ, என்ன செய்வது?" என்று கூறி அழுதான்.

உடனே அலியும் குழாய் மூலம் பார்த்து தன் தமையன் கூறுவது உண்மையென அறிந்து மூர்ச்சித்துத் தன் படுக்கைமீது சாய்ந்தான். கடைசி இளவரசன் அஹமதும் குழாய் மூலம் அந்த காட்சியைப் பார்த்தான். ஆனால் அவன் கலங்காமல் தன் செயற்கை ஆப்பிள் பழத்தை மூட்டையிலிருந்து எடுத்துத் தன் இரு சகோதரர்களுக்கும் அதைக் காட்டிவிட்டுக் கூறினான்:—"சகோதரர்களே! கவலைப்படாதீர்கள். இந்தச் செயற்கை ஆப்பிள் மூலம் நளிமைக் குணப்படுத்தி விடுகிறேன். இந்தப் பழத்தை நாற்பது பை தங்க நாணயம் கொடுத்து வாங்கினேன். இந்தப் பழத்தை நளிம் நுகர்ந்தால் உடனே குணமடைவாள். இறக்கும் தறுவாயில் இருப்ப



குழந்தை (நடு இரவில்):— அம்மா! எனக்கு ரொம்பப் பசிக்கிறது. பிஸ்கோத்து கொடு, அம்மா!

தாயார்:—நடு ராத்திரியிலே பிஸ்கோத்து கேட்கிறாயா? இரு, எழுந்து வந்து உன்னை அடிக்கிறேன், பார்!

குழந்தை:—நீ அடிக்க வருகிறபோது பிஸ்கோத்தையும் எடுத்துக்கொண்டுவா, அம்மா?

வர்களைப் பிழைக்க வைக்கும் சக்தி இதற்கு இருக்கிறது. இது உண்மை என்பதை நான் அங்கேயே சோதனை செய்து அறிந்திருக்கிறேன். உடனே நமது நாட்டிற்குச் செல்ல முடியுமானால் நளீமைக் குணமடையச் செய்ய முடியும்.''

உடனே ஹுசேன் கூறினான்:— "அப்படியானால் நாம் மூவரும் என்னுடைய மந்திரக் கம்பளத்தில் உட்கார்ந்து கொள்வோம். நளீம் இருக்கும் இடத்துக்கு அது நம்மைக் கொண்டு போய்விடும். உடனே புறப்படுங்கள். காலதாமதம் செய்தால் நளீமின் உயிர் போய்விடும்!''

மூன்று சகோதரர்களும் மந்திரக் கம்பளத்தில் உட்கார்ந்து கொண்டனர். நளீம் நோய்வாய்ப் பட்டுப் படுத்திருக்கும் அறைக்குச் செல்ல விரும்பினர். சில நிமிஷங்களில் மூவரும் நளீமின் அறையை அடைந்தனர். திடீரென இளவரசர்கள் வந்ததைக் கண்டு அரண்மனைத் தாதிப் பெண்கள் ஆச்சரியமடைந்தனர். அலீ தன்னுடைய செயற்கை ஆப்பிள் பழத்தை நளீமின் மூக்கு அருகில் கொண்டு போனதும், நளீம் கண் விழித்துப் படுக்கையை விட்டு எழுந்தாள். இளவரசர்கள் மூவரும் தன் முன் இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தாள். தனக்கு உடம்பு ஒன்றுமில்லை என்று சொல்லித் தனது உடைகளை மாற்றிக் கொள்ள விரும்பினாள்.

இளவரசர்கள் நளீமுக்கு வந்தனம் செலுத்தி விட்டு, தந்தையைக் கண்டு அவருக்குத் தங்கள் வணக்கத்தைத் தெரிவிக்கப் புறப்பட்டனர். தன்னுடைய குமாரர்கள் மூவரும் வந்துவிட்டதைக் கண்டு சுல்தான் குதூகலமடைந்தான். மேலும் அவர்களால் தான் நளீம் பிழைத்தெழுந்தாள் என்பதை அறிந்ததும் அவன் சந்தோஷம் தாங்க முடியவில்லை. தன் குமாரர்களை அணைத்து ஆனந்தம் அநுபவித்த பிறகு அவர்கள் கொணர்ந்திருக்கும் அபூர்வப் பொருள்களைத் தனக்குக் காட்டும்படி கூறினான். அவர்களும் மிக்க மகிழ்ச்சியுடன் அவற்றை எடுத்துத் தங்கள் தந்தை முன் வைத்தனர். (தொடரும்)

அவருக்கே தெரியவில்லை!

ஒரு தேசத்தின் அதிகார பீடத்தில் அமர்ந்திருக்கும் தலைவர்களுக்கு எதிரிகள் பலர் இருப்பார்கள். அவர்கள் தலைவர்களுடைய உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கருதலாம். அத்தகைய ஆபத்துக்களிலிருந்து தலைவர்களைக் காப்பாற்ற வேண்டியது இரகசியப் போலீஸின் கடமையாகும். தலைவர்கள் போகும் இடத்துக்கெல்லாம் அவர்களுடனே போவார்கள். சதா காலமும் அவர்களைச் சூழ்ந்த வண்ணமாகவே இருந்து அவர்களைப் பாதுகாப்பார்கள். எந்த நாட்டிலும் இந்த வழக்கம் இருப்பது உண்டு.

ஒரு முறை கிளமண்ட் அட்லீ என்ற பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஒரு விருந்துக்குப் போயிருந்தார். அங்கு பிரிட்டிஷ் ஜனநாயகத்தின் பெருமையைப் பற்றிப் பலருடன் பேசிக் கொண்டிருந்தார். "ஐரோப்பாவின் பல அரசாங்கங்கள் இரகசியப் போலீஸின் துணையால் நாட்டை ஆளுகின்றன. ஆனால் பிரிட்டனின் அப்படி இல்லை. நாம் இரகசியப் போலீஸின் உதவியை நாடுவது இல்லை. உதாரணமாக என் விஷயத்தையே எடுத்துக் கொள்வோம். எந்த இரகசியப் போலீஸாரும் என்னைப் பின் தொடர்ந்து வந்து எனக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இதிலிருந்தே பிரிட்டிஷ் ஜனநாயகத்தின் பெருமை நன்கு விளங்குகிறது அல்லவா?'' என்றார்.



இதைக் கேட்டதும், அவருக்குப் பக்கத்தில் நின்று விருந்து பரிமாறிக் கொண்டிருந்த இரு வேலைக்காரர்கள் தங்களுக்குள் எழுந்த சிரிப்பை அடக்க முடியாமல் 'களுக்'கென்று சிரித்து விட்டார்கள். அவர்கள் வேறு யாருமல்ல; மாறு வேஷத்தில் இருந்த இரகசியப் போலீஸாரே தான்!

ஷாலிமார் தயாரிப்புகளை ஆர்டர் செய்யும்போது எந்த வேலைக்காக என்பதை தெரிவிக்கவும்.

எண்ணெய் சேர்ந்த

டிஸ்டெம்பர்

தண்ணீரால் அழிக்கமுடியாதது



ட்யூரடால் 46 அழகிய வர்ண வரிசைகளில் கிடைக்கும். உட்புற வெளிப்புற சுவர்களுக்குப் பூச இதைவிடச் சிறந்த கழுவி விடக்கூடிய எண்ணெய் சேர்ந்த டிஸ்டெம்பர் கிடையாது. ட்யூரடால் அழியாது. தண்ணீராலும் அழிக்க முடியாது.

அடித்தாற் போல் சொல்லுங்கள்

ஷாலிமார் ட்யூரடால்

எண்ணெய் சேர்ந்த கழுவிவிடக்கூடிய டிஸ்டெம்பர்

SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO., LTD.,

Post Box 136, Madras 1. Importers & Distributors for Ceylon:

Lewis Brown & Co., Ltd., Post Box 85, Colombo




வதனத்தை அதிக மழமழப்பும் அழகும் வாய்க்கச் செய்வதற்குள்ள இரட்டிப்பான வழி

பாண்ட்ஸ் இரு க்ரீம்களையும் உபயோகித்து இப் பிரசித்தமான இரு வகை சௌந்தரிய பராமரிப்பை நீங்கள் அனுசரிப்பதாயின் உங்கள் வதனம் மோகன எழில் வாய்ப்பது திண்ணம். உங்கள் முகத்திற்கு இரண்டு க்ரீம்கள் தேவை—ஒன்று சுத்தம் செய்வதற்கு மற்றது பாதுகாப்பிற்கு. இரவு அரிய தைலங்களடங்கிய பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம், பகலிலுள்ள தூசியையும் அழுக்கையும் நீக்கி முகத்தை சுத்தம் செய்ய. காலையில், அதிருபமான மெல்லிய பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம், மேனியைக் கருக்கும் சூரியகிரணங்களினின்று உங்கள் முகத்தை பாதுகாக்க.

உங்கள் இருவித சௌந்தரிய பராமரிப்பு

பிரதி இரவும், முகமீது பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம் தடவி, அதன் செழுமையான தைலங்கள் உள்ளிருக்கும் மாசினைதனை வெளியேற்றும்படி மெதுவாகத் தேயுங்கள். துடைத்துவிட்டு, முகத்தில் வசீகர காந்தியை கண்ணாடியில் பாருங்கள்!

பிரதி காலையும், பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் முகத்தில் லேசாகத் தடவுங்கள். இம்மெல்லிய க்ரீம் உடனே மறைந்து, ஓர் அதிருபமான படலமே பகல்முழுதும் உங்கள் சௌந்தரியத்தைப் பாதுகாக்கிறது.



பாண்ட்ஸ்

வியாபார விவரங்களுக்கு:
L. D. ஸெய்மூர் & கோ. (இந்தியா) லிமி.
பம்பாய் - கல்கத்தா - டில்லி - சென்னை - கோவா கோவா - காராச்சி - கொழும்பு - ரங்கூன்.



பீஜகுப்தன் சித்திரலேகாவை லட்சியம் செய்யவில்லை. அவன் முகத்திலே திட சித்தம் பிரதிபலித்தது; காம்பீர்யம் தாண்டவமாடியது; கோபத்தின் கடுகடுப்பு தோய்ந்திருந்தது; எல்லாவற்றையும் விட 'தான் எஜமானன்' என்னும் அகந்தையும் அவனிடம் காணப்பட்டது. அதைக் கண்ட சித்திரலேகாவின் முகம் சிவந்தது. ஆயினும் அவள் தன் மன உணர்ச்சிகளைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு, "உரிமை உண்டா? இவ்வளவு நாட்களாக எனக்கு அது தெரியாமற் போய்விட்டதே! மனிதன் மீது மனிதனுக்கு உரிமை உண்டா? என்ன உரிமை? எப்படிப்பட்ட உரிமை? நான் இதுவரை அப்படி ஒரு உரிமை இருப்பதாகக் கேள்விப்பட்டதுகூட இல்லையே! அது போகட்டும்; உங்களுக்குக் காரணம் தானே தெரிய வேண்டும்? சொல்லுகிறேன், கேளுங்கள். இவ்வளவு நாட்களாக என் மனதையும் ஏதோ ஒரு கிலேசம் வாட்டிக் கொண்டு வந்திருக்கிறது. அந்த மனக் கிலேசம் காரணமாக நான் என்னையும் என்னைச் சேர்ந்தவர்களையும்கூட மறந்து விட்டேன்" என்றாள்.

அதற்குள் ரதம் பீஜகுப்தனின் மாளிகை வாசலிலே வந்து நின்றது. சுவேதாங்கன் தன் ரதத்திலிருந்து இறங்கிப் போய் பீஜகுப்தனையும் சித்திரலேகாவையும் அவர்களுடைய ரதத்திலிருந்து இறக்கினான். மூவரும் பீஜகுப்தனுடைய இன்ப விடுதிக்குச் சென்றனர். அதன் பின்னர் சுவேதாங்கன் வெளியே செல்ல எண்ணி எழுந்தான். அவன் எழுந்து வெளியே செல்ல யத்தனிப்பதைக் கண்ட பீஜகுப்தன், "சுவேதாங்கா! நீயும் இங்கே இருக்கலாம். வெளியே போகவேண்டிய அவசியம் ஒன்றுமில்லை" என்றான்.

"ஏன், சுவேதாங்கன் இங்கே இருந்துதான் ஆகவேண்டும் என்ற அவசியமுமில்லையே!" என்றாள் சித்திரலேகா.

"அது சரி, அவசியமில்லைதான். ஆயினும் சுவேதாங்கன் இங்கே இருப்பதனால் கெடுதி ஒன்றும் சம்பவித்துவிடாது."

இதைச் சொல்லும்பொழுது பீஜகுப்தனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. "அதற்குப் பதிலாக இங்கே இருப்பதனால் சுவேதாங்கனுக்கு ஏதாவது பிரயோஜனம் ஏற்பட இடமிருக்கிறது. அநுபவமற்ற அவனுக்குச் சிறிது அநுபவம் ஏற்படுவதே ஒரு பிரயோஜனம்தானே?" என்றான் அவன்.

வெளியே போக யத்தனித்த சுவேதாங்கன் சற்றுத் தயங்கி நின்றான். பீஜகுப்தன் பழரசம் கொண்டுவருமாறு அவனுக்குச் சமிக்ஞை செய்தான்.

சுவேதாங்கன் அந்தக் காரியத்தில் நல்ல தேர்ச்சி அடைந்து விட்டான். பழரசம் எடுத்து வந்து பானக் கோப்பையை நிரப்பி முதலில் பீஜகுப்தனுக்குக் கொடுத்தான்; அடுத்தபடியாகச் சித்திரலேகாவுக்குக் கொடுத்தான்; கடைசியாகத் தானும் அருந்தினான். பிறகு சற்றுத் தொலைவில் போட்டிருந்த தனியான ஆசனம் ஒன்றில் அமர்ந்தான்.

பீஜகுப்தன் சித்திரலேகாவைப் பார்த்து, "ஆமாம், ஏதோ மனக் கிலேசம் காரணமாக 'நான் என்னையும் என்னைச் சேர்ந்தவர்களையும் மறந்து விட்டேன்' என்று நீ சற்று நேரம் முன்பு சொன்னாயே! அவ்வளவு ஞாபக மறதியை உண்டு பண்ணக் கூடிய அந்த மனக்கிலேசம் மிகவும் விசித்திரமானதாக இருக்கவேண்டுமே! அது என்னவாயிருக்கலாம் என்று அறிய எனக்கு உரிமையுண்டா?" என்று கேட்டான்.

அவன் சொல்வதைக் கேட்ட சித்திரலேகாவுக்குச் சிரிப்பு வந்தது. "அப்படியானால் என் மனப் போக்கை அலசி ஆராய்ந்து பார்க்க விரும்பி, பீஜகுப்தன் என்னைக் கட்டாயப் படுத்துகிறார் என்று நான் நினைத்தால் அதில் தவறு ஒன்றும் இல்லையே!" என்றாள் அவள்.

"இல்லை, இல்லை. நான் உன்னை அவ்வாறு கட்டாயப்படுத்த விரும்பவே இல்லை. எனக்குத் தெரிவிக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்; அவ்வளவுதான்!"

"பீஜகுப்தன் அவ்வாறு வேண்டிக் கொள்வதாயிருந்தால் அவருக்கு அது தெரிவதில் எனக்கு யாதொரு விதமான ஆட்சேபணையும் இல்லை. எனக்கு ஏற்பட்டிருக்கும் மனக்கிலேசம் இருக்கிறதே, அது சாதாரணமானதல்ல. அந்த மனக்கிலேசத்துக்குக் காரணமும் சாதாரணமானதல்ல. ஆனால் சித்திரலேகா அந்தக் கிலேசத்தைப் பற்றி அதிகம் சொல்லக் கூடிய நிலைமையில் இல்லை" என்றாள் சித்திரலேகா.

பீஜகுப்தன் சுவேதாங்கனைத் திரும்பிப் பார்த்தான். சுவேதாங்கன் மௌனமாக அவர்களிடையே நடந்து கொண்டிருந்த சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்தான். "சித்திரலேகா சொல்லக்கூடிய நிலைமையில் இல்லையா?"—சித்திரலேகா சொன்ன அதே சொல்லை பீஜகுப்தன் மிகவும் மெதுவாக முணுமுணுத்தான். பிறகு மெதுவான குரலில், "பீஜகுப்தனும் சித்திரலேகாவும் ஒருவரை யொருவர் அறிமுகம் செய்து கொண்ட பின்னர், பீஜகுப்தனிடம் எதையும் சித்திரலேகா மறைத்ததில்லை. அம்மாதிரி சந்தர்ப்பமும் இதுவரை வாய்த்ததில்லை. சித்திரலேகா ஒரு விஷயத்தைப் பீஜகுப்தனிடம் மறைக்க முயலுவது இது தான் முதல் தடவை. ஆகவே, சித்திரலேகாவின் மனம் மாறிவிட்டது என்று பீஜகுப்தன் எண்ணினால் அதில் வியப்பொன்றுமில்லை யல்லவா?" என்றான்.

மூவர் மீதும் பழரசம் தன் பிரபாவத்தைக் காட்டத் தொடங்கிவிட்டது. அவர்களுடைய விழிகள் 'செக்கச் செவேல்' என்று சிவந்து காணப்பட்டன. சித்திரலேகா பக்கத்திலிருந்த பழரசக் கோப்பையை நிரப்பி மீண்டும் பருகியவாறே, "மாறும் தன்மை வாய்ந்த இந்த உலகத்திலே எந்தப் பொருள் எப்படி மாறினாலும் அது இயற்கைக்குப் புறம்பானதாக ஆகாது" என்று சொன்னாள்.

அதைக் கேட்ட பீஜகுப்தன் அப்படியே திகைத்துப் போய்விட்டான். அவன் அவளிடமிருந்து அந்தப் பதிலை எதிர்பார்க்கவே இல்லை. "என்ன சொன்னாய்? மாறும் தன்மை வாய்ந்த இந்த உலகத்திலே எந்தப் பொருள் எப்படி மாறினாலும் அது இயற்கைக்குப் புறம்பானதாக ஆகாதா? அப்படியானால் சித்திரலேகாவின் காதலும் மாறக் கூடியது என்று நான் எண்ணிவிடலாம் அல்லவா?" என்றான்.


முன்பின் யோசிக்காமல், 'பலன் என்ன ஆகும்?' என்று கூடச் சிந்திக்காமல் உணர்ச்சி வேகத்தில் வாயில் வந்தபடி வார்த்தைகளைக் கொட்டி விட்டோமே என்று சித்திரலேகா மிகவும் வருந்தினாள். தான் சொன்ன சொற்கள், இப்படி மகத்துவம் வாய்ந்த பிரச்னையாக உருவெடுக்கக் கூடும் என்று அவள் கனவிலும் கருதவில்லை. ஆயினும் சொன்னதோ சொல்லிவிட்டாள். இனி வருந்தி என்ன பயன்? சொன்ன சொல் திரும்பி வரப்போகிறதா? ஆகவே, அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டு அசாத்தியத் துணிவுடன், "இல்லை, பீஜகுப்தன் நினைப்பது முற்றிலும் தவறானது. ஏனெனில் சித்திரலேகாவின் காதல் கடலைப்போல் கம்பீரம் வாய்ந்தது. அது மாறுவது என்பது கனவிலும் நடவாத காரியம். ஆனால் ஒன்று; காதலும் மாறும் தன்மை வாய்ந்தது என்பதை நான் நம்புகிறேன். அது அப்படி மாறுவதும் சரியென்றே நான் எண்ணுகிறேன். ஏனெனில்



இயற்கை மாறும் தன்மை வாய்ந்தது. காதல் என்பது அந்த இயற்கையின் அம்சம். இயற்கையின் காரணமாகத்தான் காதல் வளர்ச்சி கொள்கிறது என்பது அநுபவ பூர்வமான உண்மை. காதல் இயற்கையின் அம்சம் என்பதற்கு அதுவே போதுமான சான்றும்கூட. ஆகவே இயற்கைக்கு என்னென்ன சட்ட திட்டங்கள் உண்டோ, அந்தச் சட்ட திட்டங்கள் காதலுக்கும் பொருந்தக் கூடியவை” என்றாள்.

கசப்பாக இருந்தபொழுதிலும் சித்திரலேகா சொல்வதில் ஓரளவு உண்மை இருப்பதைப் பீஜகுப்தன் உணர்ந்தான். அவள் பேசும் பேச்சும் உண்மையான பேச்சு; சொல்லும் சந்தர்ப்பமும் சரியான சந்தர்ப்பம்; சம்பாஷணைக்கு எடுத்துக் கொண்ட விஷயமும் சமயோசிதமானது. இவற்றையெல்லாம் ஒருங்கே சேர்த்து மனக் கண் முன்னே கொண்டுவந்து பார்த்த பீஜகுப்தன் சித்திரலேகாவுக்கும் தனக்கும் உள்ள தொடர்பு துண்டிக்கப்படுவதையும், அதைத் துண்டிக்கும் விஷயத்தில் இனந் தெரியாததொரு சக்தி வேலை செய்வதையும் கண்டான். “சித்திரலேகா! நீ சொல்வது தவறு. காதல் ஆத்மாவுடன் தொடர்பு கொண்டது. இயற்கையுடன் தொடர்பு கொண்டதல்ல. இயற்கையுடன் தொடர்புகொண்ட பொருள் வேறு. அது காமம் எனப்படும். காமம் வெளித் தோற்றத்தை மட்டுமேதான் விரும்புகிறது. இயற்கை கருணைகூர்ந்து அளித்திருக்கும் அழகிய சரீரத்தை மட்டும்தான் காமம் நாடுகிறது. அழகிய சரீரம்தான் காமத்தின் லட்சியம். ஆனால் காதலோ ஆத்மாவுடன் மட்டுமே தொடர்பு கொள்கிறது. வெளித் தோற்றத்தில் மயங்கி சரீரத்துடன் அது ஒரு பொழுதும் தொடர்பு கொள்வதே இல்லை. மாறும் தன்மை வாய்ந்தது இயற்கை, மாறுவதுதான் அதன் நியதி என்பதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் ஆத்மா அத்தகையதல்ல; மாறும் தன்மை அதற்குக் கிடையவே கிடையாது. ஆகவே ஆத்மாவுடன் ஏற்படும் தொடர்பு அழியாத் தன்மை வாய்ந்தது; அமரத்துவம் பெற்றது என்பதை நாம் மறக்கக் கூடாது” என்றான் பீஜகுப்தன். அதைக் கேட்ட சித்திரலேகா சிரித்தாள் ‘களுக்’ கென்று. “ஆத்மாவுடன் ஏற்படும் தொடர்பு அமரத்துவம் வாய்ந்ததா? நீங்கள் சொல்வது மிகவும் விந்தையாக அல்லவா இருக்கிறது! பிறப்பு என்று ஒன்று எடுத்துவிட்டால் சாவு கட்டாயம் உண்டு. பிறப்பவன் சாவது திண்ணம். ஒருவன் அமரத்துவம் வாய்ந்தவன்; அழிவற்றவன் என்றால், அவன் பிறப்பென்பதே எடுக்காதவனாயிருக்கவேண்டும். சிருஷ்டி என்று ஒன்று இருந்தால் பிரளயம் என்றும் ஒன்று உண்டு. ஆத்மா பிறப்பு-இறப்பு அற்றது, அமரத்துவம் வாய்ந்தது என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் காதல் அத்தகையதல்ல; அதற்குப் பிறப்பும் உண்டு; இறப்பும்





"இன்றைக்குப் பரதநாட்டியம் ஆடி நம்மைக் களிப்பித்த பேபி லீலாவுக்கு இந்த வெள்ளிப் பால் புட்டியைப் பரிசாக அளிக்கிறேன்......!"

உண்டு. ஆண் பெண் இருவரிடையே காதல் உதிக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதைப் பார்க்கும் நாம் அவ்விருவர்களிடையே காதல் உண்டாகிறது, காதல் பிறக்கிறது, காதல் ஜனிக்கிறது என்றெல்லாம் சொல்லுகிறோம். அப்படிச் சொல்வதிலிருந்தே காதலுக்கும் பிறப்பு உண்டு என்பது நிதர்சனமாக விளங்கவில்லையா? தொடர்பு என்று இன்னொரு வார்த்தை சொன்னீர்களே, அதுவும் அத்தகையதுதான். அது ஆத்மாவைப்போல ஆதி அந்தம் அற்றதல்ல. அதற்கும் பிறப்பு உண்டு; இறப்பும் உண்டு. என்றைக்காவது ஒருநாள் கட்டாயம் அதற்கும் முடிவுகாலம் வந்தே தீரும். ஆகவே தாங்கள் மேலே சொல்லியவை அனைத்தும் அநித்தியமானவை என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. காமத்துக்கும் காதலுக்கும் ஒரே ஒரு வித்தியாசம் என்னவென்றால், காமம் என்பது ஒரு வெறி; க்ஷணப்பித்தம். அது வெகு சீக்கிரத்தில் தணிந்து விடக்கூடியது. அந்த க்ஷணப்பித்தம் தெளிந்ததும், வெறி அடங்கியதும் காமமும் தணிந்து விடுகிறது. ஆனால் காதல் அப்படிப்பட்டதல்ல; அது கம்பீரம் வாய்ந்தது; மிகவும் ஆழமானது. அது அவ்வளவு சீக்கிரமாக அழிவதில்லை. ஆத்மாவின் தொடர்பு தாங்கள் கூறுவதுபோல ஸ்திரமானதல்ல, ஸ்வாமி!" என்று அடித்துச் சொன்னாள் சித்திரலேகா.

சித்திரலேகாவின் தர்க்க சக்தி மிகவும் அதிகரித்திருப்பதைக் கண்டான் பீஜகுப்தன். அவனது வாதம் சிறிதும் பிரயோஜனப் படாமற் போவதைக் கண்ட அவனுடைய மனம் மிகவும் வெதும்பிற்று. "சித்திரலேகா! நீ சொல்வதனைத்தும் சரியாகவே இருக்கலாம். நான் அதை எதிர்க்கவோ ஆட்சேபிக்கவோ முன்வரவில்லை. அதெல்லாம் அவரவருடைய நம்பிக்கையைப் பொறுத்தது. ஆனால் இந்த இடத்தில் ஒரே ஒரு விஷயம் சொல்லுவது அநுசிதமாகாது என்று எண்ணுகிறேன். பித்தத்துக்கும் அறிவுக்கும் எவ்வளவு வித்தியாசம் உண்டோ அவ்வளவு வித்தியாசம் காமத்துக்கும் காதலுக்கும் உண்டு. பித்தம் நிலைத்திருக்கும் தன்மை வாய்ந்ததல்ல. ஆனால் அறிவு நிலைத்திருக்கும் தன்மை வாய்ந்தது. சிறிது நேரத்துக்கு அறிவு மழுங்கலாம் அல்லது மறையலாம்; ஆனால் அழியாது. பித்தம் தலைக்கேறும்பொழுது அறிவு அழிந்து விட்டது போலத் தோன்றுகிறது. அது வெறும் பிரமைதான். பித்தம் தெளிந்த மறு க்ஷணமே அறிவும் தெளிந்துவிடுகிறது. அறிவு அழிவற்றதல்ல, அமரத்துவம் வாய்ந்ததல்ல என்று சொன்னால் காதலும் அழிவற்றதல்ல, அமரத்துவம் வாய்ந்ததல்ல என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் அறிவு அமரத்துவம் வாய்ந்தது; அது கடவுளின் அம்சம். அதேபோல அன்பும்—அதாவது காதலும் தெய்வத்தின் அம்சம் என்பது என் திட்டமான அபிப்பிராயம். காதல் தெய்விகமானது என்னும் என் திட்டமான அபிப்பிராயத்தை நான் எந்த நிலையிலும் மாற்றிக் கொள்ளத் தயாராயில்லை" என்றான் அவன்.

சித்திரலேகா அப்பொழுது படுத்திருந்தாள். அவள் அகன்ற நீண்ட விழிகள் பாதி தான் திறந்திருந்தன. அவளுடைய அழகிய முகத்திலே இன்பவெறி தாண்டவமாடிக் கொண்டிருந்தது. அவள் எழுந்து உட்கார்ந்தாள். "ஸ்வாமி! தாங்கள் சொல்வது சரிதான். நான்தான் வீண் பிரமையில் ஆழ்ந்திருந்தேன். பிரமை சூழ்ந்திருந்ததனால் நான் என்னையே கூட மறந்துவிட்டேன். மன்னித்தருள வேண்டும்" என்று சொல்லியவாறே அவள் தன் கைகளைப் பீஜகுப்தன் கழுத்திலே போட்டு விட்டாள்.

அதைக் கண்ட சுவேதாங்கன் உடனே எழுந்து நின்றான். பீஜகுப்தன் அவனைப் பார்த்து, "சுவேதாங்கா! நீ போகலாம். ஆனால் ரதத்தை அவிழ்த்து விடவேண்டாம். உனக்கும் எனக்கும் இன்று ஓரிடத்திலிருந்து அழைப்பு வந்திருக்கிறது. அவசியம் நாம் அங்கே போகவேண்டும்" என்று சொல்லி யனுப்பினான். (தொடரும்)



வாஸ்தவம்!

"நம்ம வீட்டில் திடீரென்று தண்ணீர்க் குழாய் உடைத்துக் கொண்டு விட்டது. வீட்டு முற்றமெல்லாம் ஜலமாக ஓடுகிறது!"

"ஓட்டமாகப் போய் நம்ம சீனுவை அழைத்துக் கொண்டு வாங்கோ! அவன் நொடியிலே இத்தனை தண்ணீரையும் இருந்த இடம் தெரியாமல் பண்ணி விடுவான்."

"அவனுக்கு எது இதில் பழக்கம்?"

"அவன் நம்ம வீட்டுப் பால்காரன் இல்லையா?"

★

எப்படி?

மாமியார் (நாட்டுப் பெண்ணைப் பார்த்து):—காமு, சந்துரு கூப்பிட்டானே, போனாயோ?

காமு:—அவருக்கு வேறு வேலை யில்லை, வெறுமனே கூப்பிட்டுண்டு......!

மாமியார்:—நன்றாயிருக்கிறது! இப்படித் தான் பதில் சொல்லுவதா, புருஷன் கூப்பிட்டால்......!

மாமனார் (தம் மனைவியின் பக்கம் திரும்பி):—இந்தா! இங்கே வா, குழந்தை அழுகிறது!

மாமியார்:—உங்களுக்கு வேறே வேலை என்ன, வெறுமனே கூப்பிட்டுண்டு!

★

வருத்தம்!

படுத்த படுக்கையாகக் கிடக்கும் நோயாளி (தன் நண்பனிடம்):—ஐயோ! இனி நான் பிழைக்க மாட்டேன்! இந்த மருந்தைச் சாப்பிட்டு என்ன பிரயோஜனம்?

நண்பன்:—என்ன பிரயோஜனமா! சரி தான்; எவ்வளவு விலை கொடுத்து இந்த மருந்துகளை வாங்கியிருக்கிறது தெரியுமா? இவற்றைச் சாப்பிடாமல் நீங்கள் இறந்து போனால் எல்லாம் வீணாய்ப் போய்விடுமே!

சந்தோஷம்

சீட்டாட்டத்தில் தோல்வியுற்ற சீனு தன் நண்பனிடம், "நான் என் மனைவியிட மிருந்து பத்து ரூபாய் வாங்கி வந்தேன். அதைச் சீட்டாட்டத்தில் இழந்துவிட்டேன் என்று என் மனைவிக்குத் தெரிந்தால் அவ்வளவுதான் என் பாடு!" என்றான்.

நண்பன்:—அப்படியானால் இந்தப் பத்து ரூபாயை வைத்துக் கொள்.

சீனு (சிறிது நேரம் கழித்து):—இன்னும் ஐந்து ரூபாய் இருந்தால் கொடு; அப்புறம் தருகிறேன்.

நண்பன்:—எதற்கு?


சீனு:—எனக்குச் சீட்டாட்டத்தில் ஐந்து ரூபாய் கிடைத்தது என்று சொன்னால் என் மனைவி ரொம்பவும் சந்தோஷப்படுவாள்!

★

நல்ல வேலை!

ஒருவர்:—நம்ம பையனுக்குப் பட்டணத்தில் தந்தி ஆபீஸிலே வேலையாகி யிருக்கிறது......

மற்றவர்:—போகிறது......நல்ல இடத்திலேதான் உத்தியோகம் கிடைத்திருக்கிறது. ஏதாவது ஆபத்து என்று தந்தி அடித்தால் 'டக்'கென்று அவனுக்குச் சமாசாரம் கிடைத்துவிடும்!



"அப்பா! இன்றைக்கு மிருகக் காட்சிச் சாலைக்குச் சென்னையிலிருந்து ஒரு கரடி வந்திருக்கிறதாம். நான் போய்ப் பார்க்கட்டுமா, அப்பா!"

"இன்றைக்குத்தான் உன் மாமா கிராமத்திலிருந்து வந்திருக்கிறாரே? நீ மிருகக் காட்சிச் சாலைக்குப் போக வேண்டாம்!"



"அப்பப்பா, என்ன கூச்சல்! இந்த வீட்டில் ஒரு நிமிஷங்கூட நிம்மதியில்லையா?" என்று கூவினான் காசிம்ஹுஸேன்.

கையில் செய்தித்தாளுடன் காமிரா உள்ளினின்று கோபாவேசத்துடன் கூவிக்கொண்டே வந்த அவன் முகத்தில் ஆத்திரம் ஜ்வலித்தது. தொட்டிலில் படுத்துக் கொண்டிருந்த குழந்தை நிமிஷத்துக்கு நிமிஷம் அழுகையை அதிகரித்துக் கொண்டிருந்தது.

"ஆபீஸிலே எட்டு மணி நேரமும் உழைத்து விட்டு இங்கே கொஞ்ச நேரம் நிம்மதியாயிருக்கலாம்னு இந்த வீட்டிலே கொஞ்சம் கூட முடியவில்லையே! குழந்தையைக் கொஞ்ச நேரம் எடுத்து வைத்துக் கொண்டிருந்தாலென்ன? அதை விட என்ன வெட்டி முறிக்கிறப் போலேயாம்?" என்றான் காசிம்ஹுஸேன்.

சமையல் உள்ளிலிருந்து கைக் காரியத்தைப் போட்டுவிட்டு அப்படியே வந்தாள் பீனு.

"வெட்டி முறிக்காத போனாலும் எனக்கும் வேலைன்னு ஒண்ணுமில்லையா?...... ஒரு நிமிஷம் வீட்டிலே இருக்கிறதுக்குள்ளே அழுகையைப் பொறுத்துக்காமே அக்கலாய்த்துக் கொள்றேளே! பொழுது விடிஞ்சா நாள் பூராவும் அதோடேயே பொழுதைக் கழிக்கும் எனக்கு எப்படி இருக்கும்?" என்றாள்.

காஸிம்ஹுஸேனின் கோபம் இன்னும் அதிகரித்தது.

"குழந்தையும் நீயும் எப்படியாவது போங்கள்! நன்றாகத் தூங்கித் தொலைந்த பிறகு வருகிறேன்" என்று கூறிவிட்டுச் செருப்பை மாட்டிக்கொண்டு வெளியே போய் விட்டான்.

சந்தோஷமானவர்களுக்கும் சங்கடம் உள்ளவர்களுக்கும் தஞ்சம் அளிக்குமிடம் கடற்கரையல்லவா? மணலில் அழுத்தி அழுத்திக் கால் பதிய நடந்து சென்று ஓர் ஒதுக்குப்புறமாக உட்கார்ந்தான் காசிம்ஹுஸேன். 'கடலைப் பட்டாணி'க்காரன் இரண்டு தடவை அந்தப் பக்கம் போய் அவன் பொறுமையைச் சோதித்தான். மூன்றாந் தடவை அந்த 'சப்பாஸை' அவனைச் சும்மா விடவில்லை. "இந்தாப்பா!" என்று கைதட்டிக் கூப்பிட்டான். ஒரு அரையணா கடலை வாங்கி வைத்துக் கொண்டான். எவ்வளவுக் கெவ்வளவு சுவாரஸ்யமாக வாங்கினானோ, அவ்வளவுக்கவ்வளவு அந்தச் சுவாரஸ்யம் கடலை கையில் வந்த பிறகு போய்விட்டது.

பலவித யோசனைகள் பின்னலிட்டன. உண்மையில் எவ்வளவு பெரிய கூச்சலிடையேயும் நிம்மதியாக இருப்பதென்றால் இருக்கலாம். ஆனால் மனதில் அலைகடலென எழுந்து மோதும் அந்த வேதனைகள் அவனுடைய நிம்மதியைக் குலைத்துவிடும். சம்பளமாக முழுசாக வரும் எழுபது ரூபாயில் அந்த ஈட்டிக்காரன்—ஆறுமாத வட்டிக்காரன்—காபூலிவாலா இருக்கிறானே, அவன் தயாராக வந்து ஆபீஸ் எதிரே காத்துக்கொண்டிருக்கும் பொழுது, முழுசாக இருபது ரூபாயை அவனுக்கு அழுதுவிட்டு மீதி ஐம்பது ரூபாயுடன் வீடு திரும்பும்போது மனதிலே அமைதி ஏது? அந்த இருபது ரூபாய்.........இதுவரை நான்கு மாதம் செலுத்தியாகிவிட்டது. இன்னும் நூற்றறுபது ரூபாய்—இருநூறு ரூபாய் கடன் வாங்கியதற்கு இருநூற்று நாற்பது ரூபாய்—

இதை நினைக்கும்போதே அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

இப்பொழுது கத்திற்றே ஒரு குழந்தை— அந்தச் சங்கரியின் பிரசவத்திற்காகத்தான் அவன் காபூலிவாலாவிடம் கடன் வாங்கினன். பிரசவத்திற்கு முன் பணத்துக்கு என்ன செய்வது என்று ஏங்கிக் கொண்டிருந்தபோது இந்தக் காபூலிக்காரன் பிரத்யட்சமானன். ஒரு நகை நட்டு ஈடு வைக்காமல் வள்ளிசாக நூற்று எண்பது ரூபாயை எண்ணிக் கொடுத்தான். இருநூறு ரூபாய்க்கு எழுதி வாங்கிக் கொண்டான்.

எப்படியாவது பணம் கிடைத்து மீனு சுகப் பிரசவம் ஆகிவிட்டால் போதும் என்றிருந்தது நரசிம்ஹனுக்கு.


அதே மீனு சுகப்பிரசவமாகி, எந்தச் சங்கரியைக் கொஞ்சினுளோ அதே சங்கரி தொட்டிலில் படுத்துக்கொண்டு அழும்போது, நரசிம்ஹனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. சுகமாகப் பிழைத்து எழுந்தால் போதும் என்று ஏங்கிய அதே மீனுவைக் கண்டால் இன்று வெறுப்பு. அதற்குச் சமாதானமாகத் தனக்குத்தானே 'நிம்மதி' என்ற வார்த்தையை அவன் உபயோகிக்கிறன். உண்மையில் 'நிம்மதி' பண அளவில்தான் — வறுமை இருள் மறையும் வரையில்தான் என்பது அவனுக்குத் தெரியாதா, என்ன?

நன்றாக இருட்டிவிட்டது. தூரத்தே ஹைகோர்ட் லைட் ஹவுஸிலிருந்து ஒளி சுழன்று சுழன்று வந்தது. மினுக் மினுக்கென்று பழைய எலக்ட்ரிக் விளக்குகள், இந்த மெர்க்குரி விளக்குக்கிடையே ஒளியிழந்து நின்றன. ஜனக்கடல் கலைந்து போய், அலைகடலின் பேரொலி அந்தப் பிராந்தியத்தில் அதிகரித்தது.

துண்டை உதறிக்கொண்டு எழுந்தான் நரஸிம்ஹன். அப்பொழுதும் பலப்பல யோசித்து ஒரு முடிவுக்கும் வராத குழப்ப நிலைதான். கையில் கடலை அப்படியேதான் இருந்தது. என்ன தோன்றிற்றோ என்னவோ, அதை அப்படியே வீசி எறிந்தான்.

★

வீட்டிற்குள் நுழையும்போது மணி எட்டு. வெளிச்சமின்றி இருளோ என்



திருந்தது. வழக்கமாக, சுவாமி மஞ்சத்துக் கருகே எரியும் குத்துவிளக்கில்கூடத் திரி எரிந்து போய்விட்டது. நரசிம்ஹனின் ஆத்திரம் அதிகமாயது. கால் செருப்புச் சத்தம் கேட்டதும் திடுக்கிட்டு எழுந்த மீனு ஓடோடியும் சென்று ஹரிகேன் விளக்கை ஏற்ற முயன்றாள். ஒரு குச்சி, இரண்டு குச்சி, மூன்று குச்சிகள்......எரிந்தால்தானே?

வெளியேயிருந்து உள்ளே நுழைந்ததால் நரசிம்ஹனுக்கு நன்றாக வியர்த்திருந்தது. பசி, பழைய ஆத்திரம் இவைகளும் சேர்ந்தன. "மூதேவி பிடித்து விட்டதா, வீட்டில்?......நான் பூராவும் உழைக்கிறேன், உழைக்கிறேன் என்றே, அந்த லட்சணம் இதுதானோ?" என்று கூவினான் அவன்.

மீனு பதில் பேசவில்லை. விளக்கை ஆட்டிப் பார்த்தாள். எண்ணெய் இல்லை. கைவிளக்கான சிம்மணி விளக்குதான் ஆபத்சகாயம். அதைக் கொளுத்தினாள். மண்ணெண்ணெய் புட்டியை எடுத்துப் பார்த்தாள். ஒரு துளிக் கூட இல்லை.

"காலையில் கூடச் சொன்னேன், எண்ணெய் இல்லையென்று......" என்று ஆரம்பித்தாள் மீனு.

"இல்லையா?......துளிக்கூட இல்லையா? இப்போதுதானே வாங்கினேன்! அதற்குள்ளேயா ஆகிவிட்டது?" என்றான் பல்லைக் கடித்துக் கொண்டு.



"நான் நேற்று இரவு நாலு பேருக்கு மத்தியில் தூங்கிக் கொண்டிருந்தேன். அப்பொழுது பாட்டுக் கச்சேரி செய்வது போல் சொப்பனம் கண்டேன். உடனே எழுந்து பார்த்தேன். பக்கத்தில் இருந்த நான்கு பேர்களையும் காணவில்லை, ஸார்! இதற்கு என்ன சொல்கிறீர்கள்?"

உண்மையில் எண்ணெய் வாங்கி ஒரு வாரம் ஆகியிருந்தது.

"அதற்குள் ஆகாமல் என்ன செய்யும்? குடித்து விட்டேனா?" என்றாள் மீனு.

அவளுக்கும் ரோஷம் என்பதில்லையா? எப்படி ஆகும் எண்ணெய் என்று கேட்டால் இந்தப் பதில்தானே கூறவேண்டும்? ஆனால் சமயம் சரியா என்று அவள் கவனிக்கவில்லை.

"வர வரக் கழுதைக்கு வாய் அதிகமாகி விட்டது. மூதேவி! வீட்டைக் கவனிக்கிறதே இல்லை!" என்றான் நரசிம்ஹன்.

மீனு விம்மினாள். இலை போடப்பட்டது. ஏதோ கடனுக்காகச் சாப்பிடுவது போல அந்த மங்கிய விளக்கொளியில் சாப்பிட்டு விட்டு, 'அப்பாடா!' என்று எழுந்தான் நரசிம்ஹன்.

பாயை விரித்துப் படுத்துவிட வேண்டும் என்று தோன்றியது அவனுக்கு.

அதற்குள் சங்கரி இரவு ஆகாரத்துக்காக விழித்துக் கொண்டாள். தாயும் அருகாமையிலில்லை. அழுகை பொங்கி வந்தது அவளிடமிருந்து.

'சனியன்......!' என்று நரசிம்ஹனின் உதடுகள் முணுமுணுத்தன. பாயை வாரிச் சுருட்டிக்கொண்டு திண்ணைக்குப் போய் விட்டான். முதலில் தூக்கம் பிடிக்காமல் புரண்டு படுத்தாலும் பிறகு நல்ல தூக்கம்.

காலை விடிந்ததும் சங்கரிக்கு வயிற்றுப் போக்கு. மீனு இதுபற்றி ஒன்றுமே சொல்லவில்லை கணவனிடம். குழந்தையை டாக்டர் சீதாராமனிடம் கொண்டுபோய்க் காட்டினாள். நரசிம்ஹனை அவருக்குத் தெரியும். அவர் குழந்தையைப் பரிசோதித்தார். வயிற்றுப் போக்குக்கு மருந்து கொடுத்து, "அம்மா! குழந்தைக்கு வயிற்றில் கட்டி......" என்றார்.

பதறிவிட்டாள் மீனு. "டாக்டர், டாக்டர்......! எத்தனை மாசக் கட்டி?......ஒரு குறைவும் இல்லையே!......என்ன மருந்து கொடுக்கவேண்டும்?" என்று கேட்டாள்.

"பயப்படாதே, அம்மா!...இப்பொழுது தான் அதற்கான குறி கண்டுள்ளது. நல்லவேளை, எதேச்சையாய்ப் பார்த்தோம். இல்லாவிடில் வளர்ந்தபிறகு மருந்து கொடுப்பது சாத்தியமா? நரசிம்ஹனிடம் சொல்லுங்கள்—ஐந்து ரூபாய் மருந்து நாலு பாட்டில் வாங்கிக் கொடுத்தால் போதும்" என்றார்.

கலங்கிய கண்களுடன் வீடு திரும்பினாள் மீனு. கோபத்தோடு அவளை வரவேற்றான் நரசிம்ஹன். "எங்கே போயிருந்தே உன்

செல்வக் குழந்தையை எடுத்தாண்டு?" என்று கேட்டான்.

ஓவென்று அழுதே விட்டாள் மீனு. "குழந்தைக்கு வயிற்றில் கட்டியாம்......" என்றாள் விம்மலினிடையே.

அவனுக்கும் இது 'சோதோ' என்று னைத்தாலும் கூட, 'செலவு' என்ற பூதம் மீண்டும் ஏதோ ஒரு புது உருவில் வந்திருப்பதாகத் தோன்றியது. அவன் பதிலே பேசவில்லை; கொல்லைப் பக்கம் போய்விட்டான்.

★

அன்று ஆபீஸிலிருந்து வரும்போது திடமான முடிவுடன் வந்தான் நரசிம்ஹன். மீனுவைப் பிறந்த வீட்டுக்கு அனுப்பி வைப்பது என்பதுதான் அந்த முடிவு. அவள் திரும்பி வருவதற்குள் இந்தக் கடன் தொல்லைகளும் அடைந்து விடும். ஏதோ குழந்தைக்குக் கட்டி என்கிறாளே, அதையும் அவர்களே பார்த்து அனுப்ப மாட்டார்களா? கொஞ்ச காலைக்குத்தான் நிம்மதியாக இருக்கலாமே! — இவ்வாறு அவன் எண்ணினான்.

நரசிம்ஹன் இதை அவளிடம் சுருக்கமாகச் சொல்லும்போது மீனுவுக்கு வருத்தமாகவே இருந்தது. ஆனால் தன் கணவருடைய அலட்சிய புத்திக்கு இந்த மாறுதல் ஒரு மருந்தாயிருக்கட்டுமே என்று அவள் ஊருக்குப் போகச் சம்மதித்தாள்.

மீனு ஊருக்குப் போய் ஒரு வாரமாயிற்று. வீடு ஒரே சூன்யமாயிருந்தது. விளக்கும் சரிவர ஏற்றப்படவில்லை. ஹரிகேன் விளக்கைத் தூக்கினால் சிம்மணி கழன்றது. மேல் பர்னரைத் தூக்கினால் திரியை எட்டுவதற்குள் நெருப்புக் குச்சி அணைந்தது. தினம் ஒரு தடவை குடித்தனக்காரப் பையனைக் கூப்பிட்டு அந்த விளக்கை ஏற்றச் சொல்லும்போதுதான் நரசிம்ஹனுக்குத் தனது பழைய முட்டாள்தனம் நினைவுக்கு வந்தது. மீனு வீட்டை விட்டுப் போன பிறகும் அவனுக்கு நிம்மதியில்லையென்றால்......?

ஒரு நாள் அவன் எழுந்து வாசல் பக்கம் வரும்போது, வாசலில் குதிரை வண்டி வந்து நின்றது. அவன் தங்கை, தங்கையின் குழந்தைகள், தங்கையின் அகமுடையான் எல்லாரும் இறங்கினார்கள்.

நரசிம்ஹன் ஒருகணம் ஸ்தம்பித்து நின்றான். மறுகணம் சமாளித்துக்கொண்டு, "காவேரி, ஒரு கடிதாசு போடக்கூடாதா? நான் ஸ்டேஷனுக்கு வந்திருக்க மாட்டேனா?" என்றான் அவன்.

"போடனும்னுதான் நினைச்சது...என்னவோ திடீர்னு அந்த ஊர் பிடிக்கலே. அப்பாடான்னு ஒரு மாசம் எங்கேயாவது இடம் மாறினாத் தேவலை போல இருந்தது. நினைச்சேன்; சொன்னேன். சொன்ன மறுநாள் கிளம்பிவிட்டோம்" என்றாள் காவேரி.

காசிம்ஹானுக்கு ஒன்றுமே பேச வரவில்லை.

"அண்ணா! மீனு எங்கே?" என்றான் அவன்.

"குழந்தைக்குக் கட்டி...அவா பொறந்தாத்திலேருந்து வந்து அழைச்சண்டு போயிருக்கா. நீ வருவது தெரிந்தா அனுப்பாமலிருந்திருப்பேன்" என்றான் அவன் மனச்சாட்சிக்கு விரோதமாய்.

காவேரி வந்தபிறகு வீடு கலகலப்பாக இருந்தது. இந்தக் கலகலப்பு காசிம்ஹானுக்கு இப்பொழுது பிடித்தது!

இரு வாரங்கள் கழிந்தன. காவேரி படுக்கை, பெட்டிகளையெல்லாம் கட்டிக்கொண்டிருந்தாள். "என், இதற்குள் கிளம்பிவிட்டாய்......?" என்றான் காசிம்ஹான்.

"எவ்வளவு நாள் இங்கே தங்குகிறது? சும்மா இடமாற்றம் இருக்கட்டுமே என்று வந்தோம். தங்கியாகி விட்டது; போகிறோம்" என்றாள் காவேரி.

காவேரியும் போன பிறகு காசிம்ஹானுக்கு இருப்பே கொள்ளவில்லை வீட்டில். பாதி நாட்கள் அவன் வீட்டுக்கு வரவேமாட்டான். இத்தனை நாளும் போகாத சிநேகிதர் வீடு, தூர பந்துவின் வீடு—இவற்றுக்கெல்லாம் சென்று 'டிகானா' போடுவான்.

★

அன்று காசிம்ஹான் காரியாலயத்துக்குள் நுழைந்ததும், "மிஸ்டர் காசிம்ஹான்! கோயமுத்தூர் பிராஞ்சுக்கு நீங்கள் போக முடியுமா?" என்று கேட்டார் மானேஜர். ஏதோ சொப்பன லோகத்திலிருப்பது போல் காசிம்ஹான் தலையை ஆட்டினான். "நீங்கள் அங்கே போய் அந்த ஊழல்களைச் சரிப்படுத்திப் பழைய மானேஜரை ரிலீவ் பண்ணிவிட வேண்டும். பிறகு நீங்கள் தான் அந்த பிராஞ்சைப் பார்த்துக்கொள்ள வேண்டும்" என்றார் மானேஜர்.

மறுநாள் 'புளூமவுண்ட'னில் கோயமுத்தூருக்குப் போவதற்குப் பதிலாகப் பொள்ளாச்சிக்குப் பயணமானான் காசிம்ஹான். ராத்திரி ஏழு மணிக்குப் பொள்ளாச்சி வந்து சேர்ந்தது ரயில். பிசுபிசுவென மழை வேறு பெய்து கொண்டிருந்தது. இருந்தாலும் அவன் மனதில் இப்பொழுது ஏதோ ஒரு நிம்மதி குடிகொண்டிருந்தது. கோயமுத்தூருக்குப் போகிறேன் என்று அவன் ஒப்புக்கொண்டதற்குக் காரணம் உத்தியோக உயர்வு மட்டும் அல்ல; மீனுவின் பிறந்தகம் பொள்ளாச்சியில் இருக்கிறது என்பதற்காகவும் தான்!

'கடக், கடக்' என்ற சத்தத்துடன் வாசலில் வண்டி வந்து நின்றதும் மீனு ஹரிகேன் விளக்குடன் வந்து கதவைத் திறந்தாள்.

அவளைத் தொடர்ந்து வந்த அவள் தகப்பனார், "மாப்பிள்ளையா!" என்றார் ஆச்சரியத்துடன்.

காசிம்ஹான் விடுவிடுவென்று உள்ளே சென்றான். தொட்டிலில் சங்கரி படுத்துக்கொண்டிருந்தாள். அவளை வாரி எடுத்துக்கொண்டான் அவன்.

"என்ன திடீர்னு கருணை!" என்றாள் மெல்லிய குரலில் மீனு.

"ஊம்......எல்லாம் இனிமேல் இங்கே தான். இப்பத்தாண்டியம்மா எனக்கு நிம்மதியாச்சு!" என்று சொல்லிக் கொண்டே குழந்தையை முத்தமிட்டான் காசிம்ஹான்.

அரைத் தூக்கத்தில் திடீரென விழித்துக் கொண்ட சங்கரி வீறிட்டழுதாள்.

ஆனால் அந்த அழுகை இப்பொழுது காசிம்ஹானுக்கு இன்பமாக இருந்தது.

தேடி வந்த திருடன்

க. ரா.

ஆங்கிலப் பத்திரிகை ஒன்றை ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்த நண்பர் பாலு சட்டென்று தலையைத் தூக்கி, "இந்த விகடத் துணுக்கைப் பார்த்தீரா?" என்றார். "சொல்லும்" என்றேன். "'என்னிடம் உள்ள பணமெல்லாம் கஷ்டப்பட்டுச் சம்பாதித்தது' என்றானாம் ஒருவன். 'யார் கஷ்டப்பட்டுச் சம்பாதித்தது?' என்றானாம் மற்றவன்" என்று படித்துவிட்டு, அந்த விகடத்தை நான் எப்படி ரஸிக்கிறேன் என்று அறிய அவர் என்னைக் கூர்ந்து பார்த்தார்.

நான் சிரிக்காமல் வாயை மூடிக் கொண்டு மௌனமாக இருந்தேன்.

"விகடம் புரியவில்லையா? விளக்கமாகச் சொல்லட்டுமா?" என்றார் பாலு.

"புரிகிறது. ஆனால் அதில் அவ்வளவாக உண்மை இல்லை என்பதுதான் என் அபிப்பிராயம்" என்றேன்.

"உண்மை இல்லாமல் என்ன? ஒருவன் கஷ்டப்பட்டுச் சம்பாதிப்பதை வேறு ஒருவன் அடித்துக்கொண்டு போவதில்லையா? நெற்றித் தண்ணீர் நிலத்தில் விழப் பாடுபடும் ஒருவனுடைய உழைப்பின் பலனை நடுவில் வரும் ஒருவன் தனதாக்கிக் கொள்ளுவதில்லையா?" என்று நண்பர் பாலு அரசியல் மேடைப் பிரசங்கியின் தோரணையில் சரமாரியாகக் கேள்விகளை அடுக்கினார்.

"இருக்கலாம். ஆனால் அவ்வளவும் உண்மை இல்லை என்றுதான் சொல்ல வந்தேன். கஷ்டப்பட்டுத் தேடின ஒருவனுடைய உடைமை சுலபமாக அவனை விட்டுப் போகாது. உண்மை உழைப்பின் பலனான ஊதியம் நம்மை விட்டு ஓட முயற்சிக்காது. அதை அடைய எவனாவது பிரயத்தனப்பட்டால் அதில் வெற்றி கிடைக்காது அவனுக்கு."

"பீடிகையின் பலத்தைப் பார்த்தால் உங்கள் கொள்கையை விளக்குவதற்கேற்ற சம்பவம் ஏதோ நடந்திருப்பது போல எனக்குத் தோன்றுகிறது" என்றார் பாலு.

"உங்கள் ஊகம் சரிதான்! என்னுடைய நண்பர் அப்பாசாமியை உமக்குத் தெரியாது. இப்பொழுது பம்பாயில் இருக்கிறார் அவர். சுமார் நான்கு வருஷங்களுக்கு முன் ஒரு சம்பவம் நடந்தது. அது நடந்தது முதற்கொண்டு எனக்குத் தெய்வ பக்தியும், உழைப்புக்கும் யோக்யமான நடத்தைக்கும் எப்பொழுதும் மதிப்பு உண்டு என்ற நம்பிக்கையும் அதிகமாகிவிட்டன" என்றேன்.

"இன்னமும் பீடிகை கட்டத்திலேயே இருக்கிறீரே தவிர, விஷயத்துக்கு வர மாட்டேன் என்கிறீரே?" என்றார் பாலு.

நான் அந்தக் கதையைச் சொல்ல ஆரம்பித்தேன்:

* * *

"நண்பர் அப்பாசாமி அப்பொழுது சென்னையில் இருந்தார். எங்கள் வீட்டுக்குப் பக்கத்து வீடுதான் அவர் ஜாகை. பி. ஏ. படித்துவிட்டு ஐந்து வருஷ காலம் உத்தியோகமே இல்லாமல் இருந்தார். அவருடைய குடும்பம் பெரியது. தாயார், தகப்பனார், மனைவி, தம்பி, தங்கை என்று ஐந்து நபர்கள் கொண்ட குடும்பம் அவருடையது. அவரைக் கணக்கில் விட்டு விட்டேன் போலிருக்கிறது. அவருடன் அரை டஜன் என்பதுதான் சரியான எண்ணிக்கை!"

"இந்தக் குடும்ப எண்ணிக்கையை விருத்தி செய்ய அவருடைய மனைவி யாதொருவிதமான முயற்சியும் செய்யவில்லையா?" என்று நண்பர் பாலு சற்று ஹாஸ்யமாகக் குறுக்கிட்டார்.

"நல்ல காலம்! அதெல்லாம் ஒன்றும் அந்தச் சந்தர்ப்பத்தில் நடக்கவில்லை. கதையைக் கேளும். சாப்பாட்டுக்கு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த காலம் அது. யுத்தம் அப்பொழுது நடந்து கொண்டிருந்தது. தேசம் முழுவதும் கறுப்பு மார்க்கட்காரர்களும், யுத்த காண்டிராக்ட் எடுத்தவர்களும் கொள்ளை கொள்ளையாகச் சம்பாதித்துக் கொண்டிருந்த சமயம் அது. எதற்கு இதெல்லாம் சொல்லுகிறேனென்றால் சர்க்கார் அஞ்சாமல் ஆயிரம், லக்ஷம், கோடி என்று ரூபாய்களை அச்சடித்துக் கொண்டிருக்கும் நம் அப்பாசாமிக்கு உத்தியோகம், சம்பளம் இரண்டும் இல்லாமலிருந்தன என்பதை வற்புறுத்தத்தான்!"



"பாவம், குடும்பம் எப்படித்தான் நடந்து வந்தது?" என்றார் நண்பர் பாலு.

"அப்பாசாமி சில இடங்களில் 'ட்யூஷன்' சொல்லி வந்தார். நடு நடுவில் பத்திரிகைகளுக்குக் கதைகள் எழுதுவார்......"

"அது சரி, ட்யூஷனில் அவருக்கு மாதம் எவ்வளவு வரும்?"

"ட்யூஷன், ஸீஸனாகிய அக்டோபரிலிருந்து ஏப்ரல் மாதம் வரை மாதம் ஐம்பது, அறுபது ரூபாய் வரும். மே மாதத்திலிருந்து அடுத்த ஐந்து ஆறு மாதம் கோடை தான். ஒரே வறட்சி!"

"அந்தக் கோடை வெயிலில்தான் கதைகள் கட்டுரைகள் எழுதுவாராக்கும்?" என்றார் பாலு ஒருவிதமான புன்சிரிப்புடன்.

அதைக் கவனிக்காதவன் போலக் கதையை நான் மேலும் தொடர்ந்தேன்:

"கடைசியில் அப்பாசாமிக்கு நல்ல காலம் பிறந்தே விட்டது. ஒரு நல்ல கம்பெனியில் மாதம் இருநூறு ரூபாய் சம்பளம். அந்தக் கம்பெனி யுத்த காலத்தில் நிறையச் சம்பாதித்துவிடவே கம்பெனியை விருத்தி செய்யும் நோக்கத்துடன் அதிக நபர்களை வேலைக்கமர்த்தி நிறையச் சம்பளமும் கொடுத்தனர் அதன் முதலாளிகள்.

"அப்பாசாமியின் வீட்டில் ஒரே குதூகலம். நல்ல காலம் பிறந்துவிட்டது என்று அவர்கள் ஆனந்தக் கூத்து ஆடினார்கள். கம்பெனி முதலாளிக்கு அப்பாசாமியின் குணமும் நடத்தையும் வேலை செய்யும் ஒழுங்கும் மிகவும் பிடித்து விட்டன. பின்னால் நடக்கப்போகும் ஒரு தகராறை முன் கூட்டியே ஊகித்து அதற்கு வருமுன் காப்போனானார். அவர் நடந்து கம்பெனியைப் பல சிக்கல்களிலிருந்து காப்பாற்றினார்.

"அப்பாசாமியை நாங்கள் எல்லாம் 'அதி ஜாக்கிரதை அப்பாசாமி' என்று அழைப்பது வழக்கம். பள்ளிக்கூட நாட்களிலிருந்து அவருடைய ஜாக்கிரதை குணம் படிப்படியாக முன்னேறி வந்தது. ஒவ்வொரு சின்ன விஷயத்திலும் அவர் வருமுன் காப்போனாக விளங்குவார். அப்படிப்பட்டவருக்கு முழுசாய் இருநூறு ரூபாய் சம்பளம் கொடுக்கும் உத்தியோகம் கிடைத்ததென்றால் அவர் எச்சரிக்கையாய் இருப்பதற்குக் கேட்கவா வேண்டும்?

"ஒரு மாதம் கண்ணும் கருத்துமாய் அவர் கம்பெனிக்கு உழைத்தார். மறு மாதம் முதல் தேதி வந்தது. அவருடைய ஒருமாத உண்மை உழைப்பைக் கண்ட பெரிய முதலாளி இருநூறு ரூபாய் சம்பளம் பேசி இருந்தும் அதிகப்படியாக இருநூற்றைம்பது ரூபாய் சம்பளம் போட்டிருந்தார். அப்பாசாமிக்கு மிகவும் சந்தோஷம்.

"அன்று மாலை ஆறு மணிக்குக் காரியாலயத்தைவிட்டு வெளியேறின அப்பாசாமியின் பையில் இருநூற்றைம்பது ரூபாய்கள் இருந்தன. அன்றுவரை காரியாலயத்துக்கு நடந்தும் டிராமிலும் சென்று திரும்பிக் கொண்டிருந்த அப்பாசாமி சீக்கிரம் வீட்டை அடைந்து பெற்றோரையும் மனைவியையும் சந்தோஷத்தில் ஆழ்த்த விரும்பி பஸ்ஸிலேயே வீடு திரும்ப விரும்பினார். பஸ் ஸ்டாண்டில் ஏகக் கூட்டம். சினிமா போவோரும், போய் வருவோரும், காரியாலயத்திலிருந்து வீடு திரும்புவோரும், இரவு ரயிலில் பிரயாணம் செய்வதற்காக ஸ்டேஷன் செல்வோருமாகக் கூட்டம் நிறைந்திருந்தது. அதிர்ஷ்டவசமாக அவர் ஏறவேண்டிய பஸ் உடனே வந்தது. அப்பாசாமி வழக்கமான ஜாக்கிரதையுடன் பஸ் எங்கே வந்து நிற்கும் என்பதை அது வரும் வேகத்தைக் கொண்டே கணக்கிட்டுச் சற்று ஒதுங்கி நின்று சட்டென்று தொத்தி பஸ்ஸில் ஏறிக் கொண்டார். ஆனால் அதே சமயம் பலர் அவர்மேல் மோதி இடித்துக் கொண்டே இறங்கினார்கள். கடைசியில் ஒருவிதமாக இடம் பிடித்து உட்கார்ந்தும் விட்டார் அப்பாசாமி.

"அப்படி அவர் உட்கார்ந்து கொண்டது ஒரு நண்பர் பக்கத்தில். அவர் "அட, அப்பாசாமியா!" என்று சொல்லிக் கொண்டே தமக்கும் அப்பாசாமிக்கும் சேர்த்து டிக்கட் வாங்கி விட்டார்.

"தான் இறங்கும் இடம் வந்ததும் நண்பரிடம் சொல்லிக் கொண்டு பஸ்ஸை விட்டு இறங்கி ஒரு ரிக்ஷா வைத்துக் கொண்டு அப்பாசாமி வீடு போய்ச் சேர்ந்தார். வீட்டு வாசலில் அவருடைய தாயாரும் தந்தையும், தம்பியும் தங்கையும், நானும் அவருடைய வருகைக்காகக் காத்

திருந்தோம். வீட்டிற்குள்ளே அவருடைய மனைவி நிலை கொள்ளாமல் இருந்தாள்.

“‘ஜம்’ மென்று ரிக்ஷாவை விட்டு இறங்கின அப்பாசாமியை ‘அண்ணா’ என்று அவருடைய தங்கையும், தம்பியும் சூழ்ந்து கொண்டார்கள். ‘எனக்கு என்ன வாங்கிக்கொண்டு வந்திருக்கிறாய்?’ என்று இருவரும் ஆவலோடு கேட்டார்கள். ‘அப்பாவிடம் பணத்தைக் கொடுக்கிறேன் முதலில். பிறகு உங்களுக்கு வேண்டியது வாங்கித் தருகிறேன்’ என்று சொல்லிக் கொண்டே வீட்டினுள் சென்றார் அப்பாசாமி. ‘சாமி, எனக்குக் கூலி தரலிங்களே?’ என்று அவரைப் பின் தொடர்ந்தான் ரிக்ஷாக்காரன். அவனுக்குக் கூலி கொடுப்பதற்காகக் கோட்டின் உள் பையில் கையை விட்ட அப்பாசாமி தேள் கொட்டினவர் போலக் கையை உதறினார். “ஐயோ, அம்மா! பர்ஸைக் காணோமே! இது என்ன மாயம்?” என்று கூக்குரலிட்டார். பக்கத்தில் நின்ற எனக்கே தலையைச் சுற்றியது என்றால் அப்பாசாமிக்கும் அவருடைய பெற்றோருக்கும் அவர் மனைவிக்கும் எப்படி இருந்திருக்கும்? வீட்டினுள் நுழையவே பிடிக்காமல் தெருத் திண்ணையில் தலையில் கை வைத்து உட்கார்ந்து விட்டார் அப்பாசாமி. போலீஸில் ரிபோர்ட் கொடுத்து விட்டு வருகிறேன் என்று நான் எழுந்தேன். அப்பொழுதுதான் அப்பாசாமியின் பணத்தை எடுத்த திருடன் எதிரே வந்தான்......”

“அவனே எப்படி வந்தான்? அப்பாசாமியின் பணத்தை எடுக்கக் கூடாது என்று அவனுக்கு எப்படித் தோன்றியது?” என்று கேட்டார் பாலு.

“கதையை முழுக்கக் கேளும். அப்பாசாமி பஸ்ஸில் ஏறும்போது இந்த ஆசாமி அவரை இடித்துக்கொண்டு இறங்கும் பாவனையில் அவர் பைக்குள் கையை விட்டுப் பர்ஸை எடுத்து விட்டிருக்கிறான். தொழிலுக்கு ஒரு வேளை புதியதானபடியாலோ என்னமோ, அந்தப் பரபரப்பில் ரஸ்தாவைக் கடந்திருக்கிறான். ஒரு மோட்டார் சைகிள் அவனை மோதிக் கீழே தள்ளிவிட்டுப் போயிருக்கிறது. ஆசாமிக்கு நல்ல ஊமைக் காயம். அத்துடன் பிரக்ஞை தவறிப்போய்விட்டது. உடனே ஒரு கூட்டம் கூடுவதற்குக் கேட்பானேன்? கடுசயகமாக ஒரு போலீஸ்காரன் அங்கு நின்றிருந்தான். ‘பாவம், ஆள் ஒழுங்கா ‘டிரஸ்’ பண்ணிக் கொண்டிருக்கிறார். எங்கே உத்தியோகமோ, எங்கே வீடோ தெரியவில்லை’ என்று ஒருவர் அங்கலாய்த்தார். ‘இவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போகவேண்டாம்; வீட்டுக்கே கொண்டு போகலாம்’ என்று வேறு ஒருவர் சொன்னார். ‘அவர் விலாசம் இங்கு யாருக்காவது தெரியுமா?’ என்றான் போலீஸ்காரன். ‘அவருடைய பாக்கெட்டில் ஏதாவது விலாசம் இருக்கிறதா பாருங்கள். தற்கொலை செய்துகொள்ளும் சிலர் விலாசம் வைத்திருப்பார்கள்!’ என்றார் மூன்றாவது நபர் ஒருவர். போலீஸ்காரன் அந்தப் ‘பிக்-பாக்கெட்’டின் பையைச் சோதனை செய்தான். பர்ஸ் இருந்தது. அதில் ரூபாய் இருநூற்றைம்பதும் கொஞ்சம் சில்லறையும் அப்பாசாமியின் பெயரும் விலாசமும் இருந்தன. ‘அதி ஜாக்கிரதை அப்பாசாமி’ எப்பொழுதும் எது எப்படி இருக்குமோ என்று வெளியே போகும்போது பர்ஸில் பெயரும் விலாசமும் எழுதின சீட்டைப் போட்டுக் கொண்டு போவது வழக்கம். அந்த வழக்கம் அவருக்கு இப்பொழுது நல்லதாகவும் முடிந்தது.



“அப்புறம் என்ன? போலீஸ்காரன் திருடனை அப்பாசாமி என்று நினைத்துக் கொண்டு, மூர்ச்சையாகக் கிடந்த அவனை ஒரு ரிக்ஷாவில் தூக்கிப் போட்டுக் கொண்டு சீட்டில் இருந்த விலாசத்துக்கு அழைத்து வந்தான். இதைத்தான் திருடனே அப்பாசாமியைத் தேடிக் கொண்டு வந்தான் என்று நான் சொல்கிறேன். இப்பொழுதாவது புரிந்ததா, பாலு?” என்று சொல்லிக் கதையை முடித்தேன் நான்.

“பேஷாய்ப் புரிந்தது! ஆனாலும் இதை உண்மைச் சம்பவம் என்றால் யாரும் நம்பமாட்டார்கள்!” என்றார் பாலு.

கம்பர் தரும் காட்சி

277. நால்வர் பட்ட பாடு!

டி.கே.சி

அங்கதன் இராவணனை ரொம்பவும் கேவலமாகப் பேசிவிட்டான்.

"உனக்கு வீரமாவது ஒன்றாவது! உன் பாட்டி தாடகை கொல்லப் பட்டாள்; மாமன் மாரீசன் கொல்லப் பட்டான்; தங்கை சூர்ப்பனகை சாக வில்லைதான். ஆனாலும் மிக்க அவமானத்துக்கு உள்ளானாள். மூக்கறு பட்டாள்; காதறுபட்டாள். அந்தச் சந்தர்ப்பங்களில், போர் செய்ய வராத நீ, இப்போது போருக்கு வருவது என்பது உண்டா?" என்பதாகப் பேசி விட்டான் அங்கதன்.

கேட்டான் ராவணன்.

அடங்காக் கோபம் வந்து விட்டது. அங்கதனை மாத்திரம் அல்ல; பூர்வத்திலிருந்து வாழ்ந்து வந்திருக்கிற உயிர் வர்க்கங்கள் எல்லாவற்றையுமே தின்று விடுபவன்போல் ஒரு கோப வெறி உண்டாய் விட்டது.

சொற்ற வார்த்தையைக்
கேட்டலும், தொல்உயிர்
முற்றும் உண்பது
போலும் முனிவினன்,—
'பற்று மின், கடி—
தின்நெடும் பார்மிசை
எற்று மின்,' என
நால்வரை ஏவினன்.

[சொற்ற வார்த்தையைக் கேட்டலும்: அங்கதன் சொன்ன இழி உரையைக் கேட்டதும்; தொல்லுயிர் முற்றும் உண்பது போலும் முனிவினன்: அநாதியாக இந்த உலகத்தில் தோன்றி நெடுகிலும் வாழ்ந்து வருகிற உயிர்வர்க்கம் எல்லாவற்றையுமே தின்று நிர்மூலம் ஆக்கி விடும்படியான ஒரு கோபத்துக்கு உள்ளானான் ராவணன்; பற்றுமின் கடிதின்: உடனே பிடியுங்கள்; பார்மிசை எற்றுமின்: தரையில் அவனை வீசி அடியுங்கள்.]

• •
•

ஏவினானோ இல்லையோ, அந்த நால்வரும் அப்படியே ஓடிப்போய் அங்கதனைப் பிடித்தார்கள். பிடித்தவர்களை அங்கதன் என்ன செய்தான்?

கைக்கு இரண்டு தலையாகக் குடுமிகளை இறுகப் பிடித்துக் கொண்டு ஒரு தாவு தாவினான் அங்கதன்.

"ஐயோ! எங்கள் தலை போய் விட்டதே!" என்று ஒரே கத்தாய்க் கத்தினார்கள் அந்த நாலு அரக்கரும். அவர்கள் கத்தினாலும் விட்டபாடாக இல்லை அங்கதன்.

கோட்டையின் கோபுர வாசல் வரையும் தாவித் தாவிப் போய்க் கொண்டிருந்தான் — நாலு தலைகளையும் கையில் பிடித்த வண்ணமாகவே.

கோபுர வாசலைச் சேர்ந்ததும் அந்த நால்வரையும் வீசி 'நச்'சென்று கீழே எறிந்தான். பிறகு மிதி மிதி என்று மிதித்தான்.

அப்படி மிதித்த காரணமாகத் தேகங்களில் இருந்து இரத்தம் பீறி அடித்தது.

அந்த இரத்தம் அங்கதனுடைய வெண்மையான மார்பை ஒரே சிவப்பாய் ஆக்கி விட்டது.

ஏவி னான்;பிடித்
தாரை, எடுத்தெழுத்
தாவினான்; அவர்
தம்தலை போயதாக்
கூவினார்; தமைக்
கோபுர வாயிலில்த்
தாவினான்; துகைத்
தான்; இவை சொல்லினான்.

[ஏவினான்: ராவணன் நால்வரை ஏவினானோ இல்லையோ; பிடித்தாரை வெடுத்தெழுத் தாவினான்: ஏவினதும் பிடிக்கப் போனார்கள் நால்வர். அவர்களை அப்படியே குடுமியைப் பிடித்து எடுத்துக் கொண்டுபோக ஒரு தாவு தாவினான்; அவர் தலை போயதாகக் கூவினார்: ஐயோ, தலைபோய்விட்டதே என்று கத்தினார்கள் நால்வரும்; தமைக் கோபுரவாயிலில் தாவினான்: அவர்களைக் கோபுர வாசலத் தனத்தில் வீசி எறிந்தான்; துகைத்தான்: அவர்களை மிதி மிதி என்று மிதித்தான்.]

அபூர்வமான துரித பாவத்தில் அமைந்திருக்கிறது செய்யுள். வார்த்தைகள் அது காரணமாக ஆங்காங்கே விடுபட்டிருக்கின்றன. அப்படி விடுபட்ட காரணத்தினாலேயே அங்கதன் செயல் எல்லாம் அப்படி அப்படியே நம் கண் முன் நிற்கின்றன.

அப்படி நிற்கச் செய்வதுதானே கவிக் கலையின் பண்பு.

பாடலைத் திரும்பத் திரும்பப் பாடி அனுபவிக்க வேண்டும்.


அங்கஜலதோஷத்தை
விரட்டுங்கள்
இன்று இரவே !
ஒரே இரவில் ஜலதோஷத்தையும் இன்புளுயென்ஸாவையும் 'ஆஸ்ப்ரோ' நிச்சயமாக விரட்டிவிடும் என்பதை ஆயிரக்கணக்கானவர்கள் உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே ஏன் ஜலதோஷத்தால் அவஸ்தைப்படுகிறீர்கள்? அதனாலேற்படும் கோளாறுகளை — ஜுரவேகம், படுத்த படுக்கை, காலம் வீணாவது — முதலியவைகளை உணர்ந்திருந்தாலும், ஒரு கணம்கூட தாமதிக்காமல் உடனே செய்யுங்கள் :—
2 'ஆஸ்ப்ரோ'
வில்லைகளும் ஒரு கோப்பை எலுமிச்சம்பழ ரசமும் ஆச்சரியமான குணமளிக்கும்
தயாராகவிருங்கள். இன்றே ஒரு பாக்கெட் ஆஸ்ப்ரோ வாங்கி வையுங்கள். சமயத்திற்கு உதவும். சாதாரணமாக ஜலதோஷத்துக்கு அறிகுறி உலர்ந்த தொண்டையாகும். அதைப்
ஆஸ்ப்ரோவைக்கொண்டு
கொப்புளித்தால் நீக்கிவிடலாம்
3 வில்லைகள் அ. 1½
30 வில்லைகள் அ. 15
எச்சரிக்கை ! மட்டமான வில்லைகளை உங்களுக்கு கொடுக்கக்கூடும். அவை 'ஆஸ்ப்ரோ'வைப்போல் தோன்றலாம்— ஆனால் தோற்றம் குணமளிக்காது — உட்புறந்தான் பிரதானம்.

கண்டால் சொல்லுங்கள்!

பி. எஸ். மணி

"ஸார்! நேற்று நம்ம வக்கீல் நண்பர் பேசினார் பாருங்கோ, ரொம்பப் பிரமாதம்!" என்றார் எனது நண்பர் ஒருவர். எனக்குக் கோபங் கோபமாக வந்தது. 'யாரை யெல்லாமோ பற்றிப் பேசுகிறீர்களே, என்னைப் பற்றிக் கொஞ்சம் பேசுங்களேன்' என்று கேட்கத் தோன்றியது. ஆனால் பாழும் நாக்கு ஒத்துழைக்க மறுத்துவிட்டது.

ஆனால் இந்த என் ஆசை இவ்வளவு சீக்கிரம் பூர்த்தியாகும் என்று நான் கனவிலும் கருதவில்லை.

அன்று காரியாலயத்துள் நுழைந்தது தான் தாமதம், என்னை நண்பர்கள் அனைவரும் சூழ்ந்து கொண்டார்கள். என்னோடு பால்ய முதலே பழகி வரும் எனது தோழன் துரைசாமி என்னருகில் உரிமையுடன் வந்து, "என்னடா! ஒருநாளுமில்லாத திருநாளாகக் குல்லா போட்டிருக்கிறாயே, ஆபீசரைக் குல்லாப் போடறதுக்கு வழியா?" என்று சிரித்துக் கொண்டே உரக்கக் கூறினான். கூடியிருந்த அனைவரும் கொல்லென்று சிரித்தார்கள். என் முகத்தில் அசடு வழிந்தது என்று என் நண்பர் ஒருவர் சொல்லித்தான் தெரிந்தது—என் முகத்தில் அசடு வழிவது எனக்கு எப்படித் தெரிய முடியும்?

ஒரு இளைய நண்பர், "பேஷ், குல்லா பிரமாதம்! உங்கள் மாமனார் வாங்கிக்கொடுத்தாரோ?" என்றார் ஏகத்தாளமாக. இதற்குள் எனது பால்ய நண்பன் துரைசாமி என்னைக் கேட்காமலேயே சடக்கென்று என்னிடமிருந்து குல்லாவைப் பிடுங்கி விட்டான். எனது குல்லா அவர்கள் கையில் சிக்கி என் குட்டும் வெளிப்பட்டு விட்டது.



"டேய் என்னடா! மொட்டை அடிச்சிருக்கே. ஊரிலே எல்லாரும்...!" என்று சொல்லி கிறுத்தினான் துரைசாமி.

இன்னொருவர் "திருப்பதிக்குப் போய்விட்டு வந்திருக்கிறீர்கள் போலிருக்கிறது. ஏதாவது பிரார்த்தனையோ?" என்றார்.

"அவர் எப்படி திருப்பதிக்குப் போயிருக்க முடியும்? நேற்று காலை கடைத் தெருவில் பார்த்தேனே!" என்றார் எங்கள் ஆபீஸ் டைப்பிஸ்ட்.

இவ்வாறு எனது காரியாலயத்திலுள்ள அனைவரும் என்னைப் பற்றியும் எனது குல்லாவைப் பற்றியும் விமர்சனம் செய்யத் தொடங்கினார்கள். அவர்களுடைய கேலிக்கும், சிரிப்புக்கும் ஆளானாலும் என்னைப் பற்றியே அவர்கள் பேசியது எனக்குப் பெரு மகிழ்ச்சி யூட்டியது. இவ்வாறு என்னை ஒரே நாளில் பிரபலப்படுத்திய ஆசாமியைப் பற்றித் தெரிவிக்காவிட்டால் நான் பெரிதும் நம்பிக்கைத் துரோகம் செய்தவனாவேன்!

* * *


அன்று ஞாயிற்றுக்கிழமை. எனது நண்பன் ஒருவன் என்னை அபூர்வமாக விருந்துக்கு அழைத்திருந்தான். நண்பன் வீட்டுக்குக் கொஞ்சமாவது 'டீக்'காகப் போகவேண்டாமா? காடுபோல் வளர்ந்திருந்த தலைமயிரையும், முகத்தை அலங்கோலப் படுத்தும் தாடியையும் ஒழித்துக் கட்டுவதற்காகச் சென்றேன்.

அன்று வழக்கமாக வெட்டிக் கொள்ளும் சலூனில் ஏகக் கூட்டமாயிருந்தது. 'சரி! வேறு ஏதாவது சலூனில் நுழைந்து பார்க்கலாம்' என்ற நினைப்பில் அங்கிருந்து புறப்பட்டு வந்து கொண்டிருந்தேன். ஒரு மூலையிலிருந்த சலூனில் ஒருவருமே யில்லை. எனது அதிர்ஷ்டத்தை நினைத்து வியந்து கொண்டே அந்தச் சலூனில் நுழைந்தேன்.

அங்கேயிருந்த ஆசாமியிடம் "தலை மயிர் அவசரமாக வெட்டிவிட வேண்டும். எனக்கு அவசர வேலையாக ஒரு இடத்துக்குப் போக வேண்டியிருக்கிறது" என்றேன்.

"இல்லை. மன்னிக்கவேண்டும் நான் வந்து..." என்று அவன் பதிலளிப்பதற்குள்ளேயே நான் "அவசரமாக எங்காவது போகவேண்டுமா? முதலில் எனக்கு வேலை செய்து விட்டுப் போ. கூட காலணா வேண்டுமானால் தருகிறேன்" என்று சொல்லி எனது அவசரத்தில் அவனைப் பேச விடாமல் தடுத்தேன்.

அவன் சலிப்புடன் தனது வேலையை ஆரம்பித்தான். என் மனம் அன்றைய விருந்துக்கு எவ்வாறு ஆடை அணிந்துகொண்டு செல்லலாம் என்பதைப் பற்றிச் சிந்தனை செய்ய ஆரம்பித்தது. பத்து நிமிஷம் கழித்



துச் சிந்தனைச் சுழலிலிருந்து விடுபட்டுத் திரும்பி எனது முகத்தைக் கண்ணாடியில் நோக்கினேன். 'கண்ணாடியில் பார்ப்பது என் முகந்தானா?' என்ற சந்தேகம் எழுந்தது. கண்ணை நன்றாகத் துடைத்துக் கொண்டு மறுபடியும் பார்த்தேன். சந்தேகமில்லை. என்முகந்தான்!

"என்னப்பா! உனக்கு மூளையிருக்கா? கறையான் அரித்தமாதிரி வெட்டி யிருக்கிறாயே!" என்று முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக்கொண்டு கேட்டேன்.

"ஸார்! நீங்கள் கெஞ்சிக் கேட்டதினாலேதான் முதல் தடவையாக என்னால் முடிந்த அளவு வெட்டியிருக்கேன். இதற்கு முந்தி நான் யாருக்கும் தலைமயிர் வெட்டியதில்லை. இந்தச் சலூன்காரர் சாப்பிட்டு விட்டு வருவதாகச் சொல்லி என்னை உட்கார்த்தி வைச்சுட்டுப் போனாரு. நான் அதைச் சொல்வதற்குள்ளே நீங்க அவசரப்பட்டுட்டீங்க. என்மேலே கோவிச்சு என்ன பிரயோசனங்க?" என்று பதிலளித்தான் அவன்.

இதற்குள் அந்தச் சலூன்காரன் வந்து சேர்ந்தான். அவன் வந்ததும் அவனிடம் எனது கோபத்தைத் திருப்பினேன்.

"என்னடா! உன்னை யாரு இந்த விஷமத்தைச் செய்யச் சொன்னாங்க?" என்று அவனைக் கேட்டான் சலூன்காரன்.


"நான் முடியாதுன்னுதான் சொன்னேனுங்க. அவரு அவசரப் பட்டுட்டாரு" என்று வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு பதிலளித்துவிட்டு அந்த ஆசாமி நழுவினான்.

"இந்தத் தடவை மன்னிச்சுக்குங்க. இப்போ என்ன செய்யச் சொல்றீங்க?" என்று கேட்டான் சலூன்காரன்.

"சரி! மொட்டையடித்துவிடு. இப்படியிருக்கிறதைவிட அதுவே மேல்" என்று வெறுப்புடன் பதிலளித்தேன். அவன் வெகு சீக்கிரத்தில் மழுங்க மொட்டையடித்து விட்டான். உடனே தலையில் மேல்துண்டை முண்டாசு கட்டிக் கொண்டு வீட்டை நோக்கி விரைவாக நடந்தேன்.

• • •

[illegible] செலவின்றி என்னைப் பற்றியே எல்லோரும் பேசும்படி பிரபலப்படுத்திய அவனையும்—இல்லை, அவரையும், எனது குல்லாவையும் என்னால் புகழாமலிருக்க முடியவில்லை. என்னுடைய நன்றியறிதலைத் தெரிவிப்பதற்காக அவரைத் தேடிக் கொண்டிருக்கிறேன். கண்டால் சொல்லுங்கள்!



கோட்டு வாத்தியம் ஸ்ரீ துரையப்ப பாகவதர்

5. மூன்றாவது உற்சவம்

சின்னக் கட்சியாரின் பலம் குன்றிய பிறகு 1921, 1922-ம் வருஷத்திய உற்சவங்களை நிர்வகிக்கும் பொறுப்பு முழுவதும் சூலமங்கலம் வைத்தியநாத பாகவதரிடம் சமர்ந்து விட்டது. அதனால், அவர் நிர்வாக விஷயங்களில் யதேச்சாதிகாரமாக நடந்து கொள்ளுகிறார் என்னும் மனக் குறை சிலருக்கு ஏற்பட்டது. இதன் பலனாக, திருவையாறு சபேசய்யர், சூலமங்கலம் சௌந்தரராஜ பாகவதர், கல்யாணபுரம் விசுவநாத சாஸ்திரிகள் ஆகிய மூவரும் விலகி விட்டார்கள். விலகியவர்கள் எல்லோரும் இன்னும் சில வித்வான்களைச் சேர்த்துக் கொண்டு சூலமங்கலம் சௌந்தரராஜ பாகவதரின் தலைமையில் ஒரு கட்டமாகக் கூடித் தனி உற்சவம் ஒன்று நடத்தத் திட்டம் போட்டனர். 1923-ம் வருஷம் திருவையாறு பச்சையப்ப முதலியார் சத்திரத்தில் உற்சவம் நடத்தப் போவதாகப் பத்திரிகைகள் அச்சிட்டு வழங்கி உற்சவத்துக்காக நிதி திரட்டவும் ஆரம்பித்தனர்.

அந்த வருஷம் பஞ்சமிக்கு முன்னதாகச் சின்னக் கட்சியாரும், அந்தக் கட்சியிலிருந்து விலகியவர்களும் இரண்டு கோஷ்டியாகப் பிரிந்து ஸ்ரீ தியாகப்பிரம்ம ஆராதனை உற்சவத்தை நடத்தினார்கள்.

பஞ்சமியிலிருந்து ஐந்து தினங்கள்வரை பெரிய கோஷ்டியார் வேறு தனியாக உற்சவம் நடத்தினார்கள். இப்படி மூன்று உற்சவங்கள் நடந்தன.

ஏற்கெனவே சின்னக்கட்சியாரின் பலம் குன்றியிருந்தது. அத்துடன் கட்சியில் பிளவு ஏற்பட்டு மூன்றாவது உற்சவமும் நடக்க இருப்பதை யறிந்த சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர் உற்சவக் காரியங்களில் என்னையும் மைலாட்டூர் மிருதங்கம் சாமி அய்யரையும் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தஞ்சாவூர் வருங்களை எனது தந்தையான பஞ்சாபகேச பாகவதரும், மைலாட்டூர் சாமி அய்யரின் சிறிய தகப்பனாராகிய கிருஷ்ண ஐயரும் கவனித்து வந்தார்கள். வைத்தியநாத பாகவதருக்கு இன்னும் அநேக நிர்வாகப் பொறுப்புகள் இருந்து வந்தன. ஆகவே, நாங்கள் இருவரும் தியாகப் பிரம்மத்தின் கைங்கரியத்தில் அந்த வருஷம் முதல் ஈடுபட ஆரம்பித்தோம். சின்னக் கட்சியாரின் உற்சவம் ஒருவாறு சிறப்பாகவே நடந்தது.

இந்த வருஷ உற்சவத்தில் வழக்கத்துக்கு விரோதமாக ஒரு காரியம் நடந்து விட்டது. இத்தனை வருஷ காலமாகச் சின்னக் கட்சியார் அதிஷ்டான பூஜை செய்த பிறகுதான் பெரிய கட்சியார் அதிஷ்டான பூஜை செய்வார்கள். அதற்கு நேர்மாறாகப் பெரிய கட்சியார் தங்கள் அதிஷ்டான பூஜையை முதலிலேயே நடத்தி விட்டார்கள். இதனால் ஏற்பட்ட பரபரப்பைச் சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர் வெகு அழகாகச் சமாளித்து மாற்றினார்.

“பூஜை விஷயத்தில் முன்பின் மாறினால் எவ்வித பாதகமும் இல்லை. இன்று முதல் உற்சவத்தை மிகுந்த சுறு சுறுப்பாய் ஆரம்பிக்கும் பெரிய கட்சியார் முதலில் அதிஷ்டான பூஜையை ஆரம்பித்து நடத்துவது, சென்ற நான்கு நாட்களாய் உற்சவத்தை நடத்திச் சிரமப் பட்டிருக்கும் நமக்குப் பெரிய உதவியாகும். நாம் ஆற அமர நிதானமாய்ப் பூஜை செய்ய வேண்டும் என்பது ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் அபிப்பிராயம் போலும்” என்று சொல்லிப் பரபரப்பை அடக்கி விட்டார்.

இப்படியாக உற்சவம் நடந்த போதிலும் சின்னக் கட்சியில் இருந்த சிலர் பிரிந்து போய் மூன்றாவது உற்சவம் நடத்தியது அவ்வளவு அழகாக இல்லை. இம்மாதிரி

அடுத்த வருஷமும் நடந்தால் கட்சி இன்னும் பலவீனமாகி விடும் என்று நானும் மைலாட்டூர் சாமி அய்யரும் உணர்ந்தோம். ஆகையால் சின்னக் கட்சிகளை ஒன்று சேர்க்க வேண்டும் என்று தீர்மானித்துச் சூலமங்கலம் சௌந்தராஜ பாகவதரையும், கல்யாணபுரம் விசுவநாத சாஸ்திரிகளையும் கலந்து பேசினோம். பிறகு அவர்களையும் அழைத்துக் கொண்டு திருச்சிக்குப் போய்ப் பல்லடம் சஞ்சீவிராவைப் பார்த்தோம். அங்கிருந்து எல்லோருமாக மாங்குடி சென்று சிதம்பர பாகவதரை அழைத்துக் கொண்டு சூலமங்கலம் வந்து சேர்ந்தோம். அங்கு "ஸ்ரீ தியாகப் பிரம்ம வைபவப் பிரகாச சபை"யின் கூட்டம் சூலமங்கலம் வைத்தியநாத பாகவதரின் தலைமையில் கூடிற்று.

சபையின் தலைவர் ஸ்தானத்தை ஏற்றுக் கொள்ள சூலமங்கலம் வைத்தியநாத பாகவதரே முன்வர வேண்டும் என்று ஒரு தீர்மானம் கொண்டு வரப் பட்டது. அதை அனைவரும் ஆமோதித்த போதிலும் வைத்தியநாத பாகவதர் சம்மதிக்கவில்லை. தம்மைத் தலைவராக ஆக்கினால் அடுத்த வருஷமே தன்னைச் சபையார் இழுத்து விட நேரிடும் என்று பயப்பட ஆரம்பித்து விட்டார். அப்படியானால் சௌந்தராஜ பாகவதரை ஒரு உதவிக் காரியதரிசியாகச் சேர்த்துக் கொண்டு கட்சியில் உள்ள பிணக்கை நீக்கி விட வேண்டும் என்று கோரினோம். "இப்போது மூன்றாவது காரியதரிசியைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற அவசியமே இல்லை. எது எப்படியானாலும் உற்சவம் நின்றுவிடப் போவதில்லை" என்றார் வைத்தியநாத பாகவதர்.

சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர் பிடிவாதமாகவும் சர்வாதிகார மனப்பான்மையுடனும் இருப்பதைப் பார்த்த மாங்குடி சிதம்பர பாகவதர் "உற்சவ வருக்களையும் வரவு செலவுகளையும் பல்லடம் சஞ்சீவி ராவும் சூலமங்கலம் சௌந்தராஜ பாகவதரும் கவனித்துக் கொள்ளட்டும். இவர்களுக்கு உதவியாய் மைலாட்டூர் சாமி அய்யரும் கோட்டு வாத்தியம் துரையப்பாவும் இருந்து வருவார்கள். உற்சவ ஆரம்பத்திலிருந்து முடிவு வரையில் இருவரும் இருந்து உற்சவத்தை நடத்தி வைப்போம்" என்று வைத்தியநாத பாகவதரிடம் சொன்னார்.

ஆனால் வைத்தியநாத பாகவதர் "எப்படியாவது என்னை இந்த உற்சவத்திலிருந்து விலக்கிவைக்க வேண்டும் என்று நீங்கள் எல்லோரும் அபிப்பிராயப் படுவதால் அம்மாதிரியே நான் இருக்கத் தயார். நீங்கள் எல்லோரும் இவ்வருஷ உற்சவத்தை நடத்திப் பாருங்கள். அப்போது தெரியும் உங்களுக்கு அதில் உள்ள சிரமம்" என்று சொல்லிக் கூட்டத்தை முடித்து விட்டார். நாங்களும் அப்படியே செய்வதாய் ஒப்புக் கொண்டு "உற்சவத்திற்குத் தாங்கள் அவசியம் வந்து கௌரவப்படுத்த வேண்டும்" என்று கேட்டுக் கொண்டோம்.

இந்தக் காலத்தில் சூலமங்கலம் சௌந்தராஜ பாகவதர் காலக்ஷேபத் துறையில் பிரபலமாக இருந்து வந்தார்; அவருக்கு நல்ல வருமானமும் வந்தது. எப்படியும் இந்த உற்சவத்தைத் தாம் முன்னின்று நடத்திக் காட்டுவது என்ற திடமனதுடன் இதை அவர் ஏற்றுக் கொண்டு, ஒரு வேளை இது விஷயமாய்க் கைப்பொறுப்பு ஏற்பட்ட போதிலும் பாதகமில்லை என்று துணிந்து உற்சவத்தைப் புஷ்ய மண்டபத்திலேயே நடத்துவதற்கு எல்லா முஸ்திப்புகளையும் செய்ய ஆரம்பித்தார்; ரங்கூன் சாமியார் மடத்தில் சாப்பாட்டுக்கும் ஏற்பாடுசெய்தார்.

இப்படி ஏற்பாடுகள் நடந்து வரும் பொழுது வைத்தியநாத பாகவதர் சில பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கை எழுதி அனுப்பி விட்டார். "சென்ற வருஷம் ஸ்ரீ தியாகப் பிரம்மத்திற்குத் திருவையாற்றில் மூன்று கோஷ்டியார் உற்சவம் நடத்தினார்கள். இந்த வருஷத்தில் புதிதாக ஒரு கோஷ்டியார் நான்காவது உற்சவத்தைப் புஷ்ய மண்டபத்திலேயே நடத்துவதாகத் தீர்மானித்து வேண்டிய முயற்சிகள் செய்து கொண்டிருப்பதாய்த் தெரிகிறது. ஆகையால் 'ஸ்ரீ தியாகராஜ பரப்பிரம்ம வைபவப் பிரகாச



சூலமங்கலம் வைத்தியநாத பாகவதர்

சபையார்' தங்கள் உற்சவத்தை இவ் வருஷம் நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இதன் மூலம் பொது ஜனங்களுக் குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இங்ஙனம், காரியதரிசி குலமங்கலம் வைத் தியநாத பாகவதர்."

இந்த அறிக்கை எங்கள் எல்லோரையும் மிகவும் கலங்க வைத்து விட்டது. சமரச மான தீர்மானத்துக்கு எதிரிடையாக மேற் படி அறிக்கை வெளியாகியிருந்ததால்தான். தவிரவும், 'ஸ்ரீ தியாகராஜ பரப்பிரம்ம வைபவப் பிரகாச சபை'க்கும் இந்த வரு ஷத்திய உற்சவத்துக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று அது மறுத்து விட்டபடியால் மாமூலாகக் கிடைத்து வந்த வசூல்களை இது பாதிக்க ஆரம்பித்து விட் டது. சௌந்தரராஜ பாகவதரும் சபையின் பெயரைப் பத்திரிகையில் குறிப்பிட இய லாமற் போனதால் 'ஸ்ரீ தியாகராஜ பரப் பிரம்ம பக்தகான சபாவின் 77-வது உற் சவம்' என்று பத்திரிகைகளை அச்சிட்டு வசூல் செய்ய ஆரம்பித்தார்.

வழக்கம்போல் தஞ்சை வசூல்களை நானும் மைலாட்டூர் சாமி அய்யரும் கவ னித்துக் கொண்டோம். திருச்சி, மதுரை, செட்டிநாடு முதலிய வசூல்களைச் சௌந்தர ராஜ பாகவதரே கவனித்துக் கொண்டார். எல்லா வித்துவான்களுக்கும் பத்திரிகை யுடன் பிரத்தியேகக் கடிதமும் அனுப் பினர். சுமார் 1,500 ரூபாய் வசூல் மூலம் கிடைத்தது. சாப்பாடும் பிரமாதமாக நடந்தது. ஆனால் எதிர்பார்த்தபடி வித்து வான்கள் வாராததால் உற்சவம் சோபிக்க வில்லை. ஆகவே உற்சவத்தின் இரண்டாம் நாளே நானும் மைலாட்டூர் சாமி அய்யரும் வைத்தியநாத பாகவதரைப் பிரார்த்தித்து அழைத்து வருவது என்று குலமங்கலம் போனோம். அவர் வரிசில்லை என்று அறிந்து ஏமாற்றத்துடன் திரும்பினோம்.

சௌந்தரராஜ பாகவதருக்கு உற்ச வத்தை நடத்த வேண்டும் என்ற ஆசை மட்டும் இருந்ததேயன்றி அதை நிர்வகிக்கும் சக்தி, சாந்தம் முதலிய எந்தக் குணமும் இல்லை. பொது ஜனங்கள் கூட்டத்தில் ஏதாவது கொஞ்சம் சத்தம் போட்டால் உடனே ஜனங்களிடம் கடுமையாகக் கோபித் துக் கொள்ள ஆரம்பித்து விடுவார். அதோடு சௌந்தரராஜ பாகவதருக்கு வைத்தியநாத பாகவதரைப் போலவே இரண்டு கதைகள் வேறு செய்ய வேண்டி வந்து விட்டது. மற்ற மூன்று நாட்களில் திருவையாறு ராஜு

பஞ்சத்தின் பயன்!



மீசைக்காரர் :—என்ன ஐயா இது! அந்த அம்மாள் பின்னாலே ஏகப் பட்ட குருவிகள் பறக்கின்றன!

மைனர் :—அந்த அம்மாளின் புட வையைப் பாருங்கள்! நெல் கதிர் டிஸைன் போட்டிருக்கிற நல்லவா!


கோபால பாகவதரும், அண்ணாசாமி பாக வதரும், அப்பன் கோவில் ராமசாமி பாக வதரும் கதை செய்தார்கள். ஆனால் கச்சேரி களில் குறிப்பிடக் கூடியதாயிருந்தது பல் லடம் சஞ்சீவிராவ் கச்சேரி ஒன்றுதான்.

ஆகவே அடுத்த வருஷத்திற்குள் இந்த உற்சவத்தை மறுபடியும் வைத்தியநாத பாக வதரிடமே ஒப்புவிப்பதையன்றி வேறு வழி யில்லை என்று நானும் மைலாட்டூர் சாமி ஐயரும் தீர்மானித்தோம்.

நிடையிலில் உற்சவ வரவு செலவுகளைப் பரிசீலனை செய்து பார்க்கையில் சௌந்தர ராஜ பாகவதரின் கைப் பொறுப்பாய்ச் சுமார் ரூ. 350 வரையில் உபரிச் செலவு என்று தெரிந்தது. இதனால் அவருக்கும் சிரத்தை குறைந்தது. அடுத்த வருஷ உற்சவத்தைப் பற்றிப் பிரஸ்தாபம் வரும்போதெல்லாம் ஆளைவிட்டால் போதுமானது என்ற முறை யில் பேச ஆரம்பித்து விட்டார். ஆகவே அவருடைய விஷயம் மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கின கதையாக முடிந்தது.

மாங்குடி சிதம்பர பாகவதர் 1924-ம் வருஷத்தில் மறுபடியும் கதை செய்ய ஆரம்

மோசந்தான்!



ஒரு ரஸிகர் :—பாகவதர் கல்யாணி ராகத்தை இப்படி மோசமாகப் பாடிக் கொண்டு இருக்கிறாரே?

இன்னொரு ரஸிகர் :—அது கல்யாணி இல்லை, பைரவி ராகம் ஸார்!

முதல் ரஸிகர் :— அது எந்த ராகமா யிருந்தாலும் மோசமாகத் தான் பாடிக்கொண்டிருக்கிறார்!

பித்தார். ஆனால் அவரிடமிருந்தாவது அல்லது குலமங்கலம் வைத்தியநாத பாகவதரிடமிருந்தாவது அல்லது பல்லடம் சஞ்சீவிராவிடமிருந்தாவது அடுத்த வருஷத்திய உற்சவத்தைப் பற்றி டிஸம்பர் மாதம் வரை எவ்விதத் தகவலும் இல்லை. அந்த வருஷம் டிஸம்பர் மாதம் சென்னையில் நடந்த அகில இந்திய கலாச்சார மகா நாட்டுக்கு அழைப்பு வந்திருந்தபடியினால் நானும் மைலாட்டூர் சாமி அய்யரும் அங்கே போயிருந்தோம். சென்னையில் வைத்தியநாத பாகவதரைச் சந்திக்க நேர்ந்தபோது "ஸ்ரீ தியாகப் பிரம்ம உற்சவ விஷயத்தில் பெரியோர்களாகிய நீங்கள் எல்லோரும் இப்படி அசிரத்தையா யிருக்கலாமா?" என்று கேட்டோம்.

"ஏன் உங்கள் சௌந்தரராஜ பாகவதர் என்ன செய்து கொண்டிருக்கிறார்?" என்று பழைய கதையை ஆரம்பித்தார் அவர்.

"மறுபடியும் எப்படியாவது நீங்கள் முன் நின்று நடத்தத்தான் வேண்டும். அப்போது தான் சின்னக் கட்சியாரின் கௌரவம் நிலைக்கும்" என்று கேட்டுக் கொண்டதின் பேரில் ஒருவாறு சம்மதித்தார்.

அன்று டிஸம்பர் 26-ம் தேதி யாகிவிட்டது. உற்சவமோ ஜனவரி மாதம் பத்தாம் தேதி யன்று ஆரம்பிக்க வேண்டும். நடுவில் பதினைந்து நாட்களே யிருந்தன. இதற்குள் மற்றவர்களையும் கலந்தாலோசித்து உற்சவப் பத்திரிகையை அச்சிட்டு 1500 ரூபாய்க்குக் குறையாமல் வசூல் செய்தாக வேண்டும் என்ற நெருக்கடியான நிலைமையை உணர்ந்து பின்வாங்க ஆரம்பித்தார்.


ஆனால் நாங்களோ அவரை விடவில்லை. "இன்று கிளம்பி நாங்கள் தஞ்சை போகிறோம். நாளைக்குள் உற்சவப் பத்திரிகையை அச்சிட்டு விடுகிறோம். திருச்சியிலிருக்கும் பல்லடம் சஞ்சீவிராவுக்கும் மாங்குடி சிதம்பர பாகவதருக்கும் இந்த விவரங்களைத் தகுந்தவர்கள் மூலம் சொல்லி அனுப்பி விடுகிறோம். டிஸம்பர் இருபத்தெட்டாம் தேதி காலையில் நாம் எல்லோரும் தஞ்சாவூரில் கூடி முடிவு செய்யலாம்" என்று சொன்னோம். குலமங்கலம் வைத்தியநாத பாகவதரும் ஒருவாறு ஒத்துக் கொண்டார்.

அம்மாதிரியே மறுநாள் தஞ்சாவூர் வந்து எல்லாக் காரியங்களையும் செய்துவிட்டோம். பிறகு டிஸம்பர் இருபத்தெட்டாம் தேதி எல்லாரும் தஞ்சையில் கூடி நாகூர், நாகப்பட்டினம், கும்பகோணம் முதலிய இடங்களின் வசூல்களைச் சிதம்பர பாகவதரைக் கொண்டு கவனித்துக் கொள்வதென்றும் திருச்சி முதலான இடங்களைப் பல்லடம் சஞ்சீவிராவும் வைத்தியநாத பாகவதரும் கவனிப்பதென்றும் தீர்மான மாயிற்று. தஞ்சை வசூலை நானும் மைலாட்டூர் சாமி ஐயரும் கவனித்துக் கொள்வதுடன் மற்ற வித்துவான்களுக்கும் அபிமானிகளுக்கும் பத்திரிகைகளை யனுப்பி அதன் மூலம் வரக்கூடிய வசூல்களையும், திருவையாறு வசூலையும் மற்ற ஏற்பாடுகளையும் கவனித்துக் கொள்ள விசுவநாத சாஸ்திரிகளுக்குக் கடிதம் எழுதுவதென்றும் தீர்மானித்துக் கொண்டோம்.

ஸ்ரீ தியாகப்பிரம்மத்தின் கிருபையால் எல்லாம் சரிவர நடந்து வந்தன. தஞ்சாவூரில் வழக்கம்போல் வசூல் செய்ய அவகாசம் குறைவாக இருந்ததால் ஒரு கைங்கரியக் கச்சேரி ஏற்பாடு செய்து டிக்கட்டுகள் மூலம் வசூல் செய்ய நேர்ந்தது. எதிர் பார்த்த அளவுக்குமேல் பணம் கிடைத்தபடியால் எல்லோரும் திருவையாறு போய்ச் சேர்ந்தோம். இவ்வளவு குறைந்த அவகாசத்தில் வழக்கம்போல் வசூலானது ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் கிருபைதான். (தொடரும்)


கடாவ்
வாயில்கள்

டயபெப்ஸின்



ஆகாரம் சரிவர ஜீரணமாக டயஸ்டாஸ், பெப்ஸின் என்னும் இருவகைப் பொருள்கள் அத்யாவசியமானவை. இவைகள் இரண்டும் உயர்ந்த ரசாயன முறையில் சேர்ந்ததுதான் டயபெப்ஸின். ஆகாரத்துக்குப்பின் ஒரு டீஸ்பூன் டயபெப்ஸின் உட்கொண்டால் ஜீரணச் செயல் தக்ஷணமே ஆரம்பித்து, பாக்கி ஜீரண வேலை வயிற்றுக்கு மிக எளிதாகிறது. உங்கள் ஆகாரத்தின் முழுப் போஷணையும் அடைய இதுவே சிறந்த மார்க்கம்.

யூனியன் ட்ரக், கல்கத்தா

ஏஜண்டுகள்: அப்பா அண்டு கோ., மதராஸ்
மற்றும் எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

UNION DRUG. CALCUTTA

ரூ. 22. பெறுமானமுள்ள ஒரு கைக் கெடியாரமும் ஒருபவுண்டன் பேனாவும் இனாம்.


உயர்தர கைக் கெடியாரங்கள்

எல்லா கெடியாரங்களும் உயர்ந்த ரகம். ஸ்விஸ் தயாரிப்பு, உறுதியுள்ள மிஷின் மெக்கானிஸம். கெட்டித்த உறைப்புடன் சரியாக மணி காட்டும். ஐந்து வருஷங்களுக்கு உத்திரவாதம். படத்தில் காட்டி இருப்பதைவிட மிகவும் அழகானவை. ஒவ்வொன்றும் ப்ரேஸ்லெட் பட்டையுடன் அல்லது செயினுடன் வெல்வெட் பெட்டியில் வைக்கப்பட்டுள்ளது.



நெ. 805 வட்ட வடிவம் சைஸ் 10½

வட்ட வடிவம் க்ரோம் கேஸ் 14/- உயர்ந்த ரகம் 18/-
செண்டர் செகண்டு 18/- 5 ஜுவெல்ஸ் க்ரோம் 22/-
7 ஜுவெல் க்ரோம் 30/- ரோல்டு கோல்டு 38/-
15 .. க்ரோம் 48/- ரோல்டு கோல்டு 58/-



நெ. 806 சதுர வடிவம் சைஸ் 8¾

5 ஜுவெல் க்ரோம் 28/- உயர்ந்த ரகம் 30/-
5 .. ரோல்டு கோல்டு 10 வருஷ உத்தரவாதம் 38/-
7 .. க்ரோம் 35/- ரோல்டு கோல்டு 40/-
15 .. க்ரோம் 54/- ரோல்டு கோல்டு 64/-



நெ. 807 வளைந்த வடிவம் சைஸ் 7¾

5 ஜுவெல் க்ரோம் 30/- உயர்ந்த ரகம் 32/-
6 .. ரோல்டு கோல்டு 10 வருஷ உத்தரவாதம் 40/-
7 .. க்ரோம் 36/- ரோல்டு கோல்டு 45/-
15 .. க்ரோம் 56/- ரோல்டு கோல்டு 66/-




நெ. 808 நீண்ட சதுர டோனோ வடிவம் சைஸ் 6¾

5 ஜுவெல் க்ரோம் 32/- உயர்ந்த ரகம் 35/-
5 .. ரோல்டு கோல்டு 10 வருஷ உத்தரவாதம் 40/-
7 .. க்ரோம் 38/- ரோல்டு கோல்டு 48/-
15 .. க்ரோம் 68/- ரோல்டு கோல்டு 88/-

தபால் செலவு அணா 14 பிரத்தியேகம். ஒவ்வொரு கைக் கெடியார ஆர்டருக்கும் ஒரு பேனா இனாமாக அளிக்கப்படும். சேர்ந்தாற்போல் மூன்று கைக் கெடியாரங்களுக்கு ஆர்டர் செய்தால் ரூ. 22. பெறுமானமுள்ள ஒரு கைக் கெடியாரம் இனாமாக அளிக்கப்படும். அல்லது விலையில் பனிரண்டரை சத விகிதம் தள்ளுபடி செய்யப்படும்.

STANDARD WATCH Co. (K). Post Box 12212, CALCUTTA-5


அக்ரிகோ கருவிகள்
மண்வெட்டிகள்
AGRICO
மண்வாரிகள்
கட்டப்பாரைகள்
இருதலைக் கோடாலிகள்
தி டாடா அயர்ன் &
ஸ்டீல் கம்பெனி லிமிடெட்.
தலைமை ஸேல்ஸ் ஆபீஸ்:
23 B, நேதாஜி சுபாஷ் ரோட், கல்கத்தா.


இன்னுமொரு சினிமா நட்சத்திரம்
டி. எ. ஜயலக்ஷ்மி
லக்ஸ் டாய்லட்
சோப்பின் புதிய
பரிமளத்தால்
வசியப்
படுத்தப்
பட்டார்
LUX
சினிமா நட்சத்திரங்களின்
அழகு தரும் சோப்
"நான் லக்ஸ் டாய்லட் சோப்பின் ரம்மியமான புதிய பரிமளத்தை மிகவும் விரும்புகிறேன்" என்று கூறுகிறார்
LTS. 207-172 TM



a good habit

ஆரோக்கிய வாழ்க்கைக்கு நல்ல பழக்க வழக்கங்கள் அத்யாவசியம். பற்களின் ஆரோக்கியத்தைச் சரியானபடி பாதுகாத்துக்கொள்வது ஒரு நல்ல பழக்கம். இது பற்களை உறுதியாகவும் ஈறுகளை ஆரோக்கியமாகவும் இருக்க உதவுகிறது. இதற்கு முக்கிய தேவை ஒரு நல்ல பற்பசை. நீம் டூத் பேஸ்ட் ஒரு சிறந்த பற்பசை. உயர்ந்த சரக்குகளைக் கொண்டு தயாரிக்கப் பட்டிருக்கும் இதில் வேப்பங் குச்சியின் சத்து அடங்கி யிருக்கிறது.

'Neem'

TOOTH-PASTE



CALCUTTA CHEMICAL
CALCUTTA

நோயுற்ற குழந்தைகளுக்குப் பல வருடங்களாக சேவை புரிந்து வருகிறது




ஜம்பியின் லிவர்க்யூர் பல்லாண்டுகளாக செய்து வரும் சேவையால் ஆயிரக் கணக்கான விலைமதிப்பற்ற சிற்றுயிர்கள் சாண் குணக்கட்டி வியாதிகளிலிருந்து காப்பாற்றி மனித சமூகத்திற்கு விசேஷ நன்மை புரிந்து வருகிறது.

டாக்டர்கள் இவ் வியாதியை போக்க ஆரம்ப நிலை, கட்டி முதிர்ந்த நிலைக்குத் தகுந்தவாறு 'சிம்பிள்' அல்லது 'காம்ப்ளிகேட்டட்' லிவர்க்யூர் மருந்துகளை பிரயோகம் செய்து இவ் வியாதியை குணப் படுத்துகிறார்கள்.

ஜம்பியின் சிம்பிள் லிவர்க்யூர் சரிய அளவில் கொடுத்துவர, வியாதி வராமல் தடுக்கவும், பசி, ஜீரண சக்தி விருத்தி செய்யவும் மலச்சிக்கல்களைப் போக்கி சாண், குணங்களை சரியானபடி வேலை செய்கிறது.

மூன்றும் சாண் குணக்கட்டி நோயினால் பீடிக்கப்பட்ட குழந்தைகளின் தாய்மார்கள் திரும்பவும் கர்ப்பம் தரிக்கும் பொழுது ஜம்புவின் டானிக்கை உபயோகப் படுத்துவது நல்லது. பிறக்கப் போகும் குழந்தையின் சாண், குணங்கள் நோய் ஆளமாய் ஏற்படுகிறது என்று ஆயுர்வேத சித்தாந்தத்தை அனுசரித்து இந்த டானிக் தயாரிக்கப்பட்டுள்ளது.



ஜம்பியின்

லிவர்க்யூர்

ஜம்பி வெங்கடரமணய்யா அன் ஸன்ஸ்
மைலாபூர் மதராஸ் 4 (போன் நெ. 8139)
தேப்பகுளம் திருச்சி. பெரிய தெரு கும்பகோணம்.
பெங்களூர், பம்பாய் 4. (போன் நெ. 41593)
மற்றும்: லக்னோ, கல்கத்தா.


J. 234

கிறிஸ்துமஸுக்காக சலுகை

அதிக நாள் உழைக்கக் கூடிய கடிகாரங்கள் அசல் விலையில் சமீபத்தில் வரவழைக்கப்பட்ட புதிய ஸ்விஸ் கடிகாரங்கள் அனைவரின் சக்திக்கும் ஏற்றவாறு அசல் விலைகளில் அளிக்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம். இந்த கடிகாரங்கள் நீடித்துழைப்பதுடன் அதன் கைதேர்ந்த வேலை திறத்தினால் நம்பகமான உழைப்புக்கு உத்திரவாதம் அளிக்கப்படுகிறது.

ஒரிஜினல் 15 முதல் 17 ஜுவல் முழு லீவர் கடிகாரங்கள் 5 வருஷங்களுக்கும் இதர ரகங்கள் 3 வருஷங்களுக்கும் உத்திரவாதமுள்ளவை. ஆர்டர் செய்த கடிகாரங்கள் நன்கு பயிற்சியடைந்த அனுபவம் வாய்ந்த திறமையான மெக்கானிக்குகளின் மேற்பார்வையில் 32 மணி நேரத்திற்கு நன்கு பரிசோதனை செய்யப்பட்டு எண்ணெய் போடப்பட்டு நேரத்தை சரிப்படுத்தப்பட்ட பிறகு தான் அனுப்பப் படுகின்றன. பிரதி கடிகாரத்துடனும் எழுத்து மூலம் ஒரு உத்திரவாத சர்டிபிகேட்டும் ஒரு உயர்தரமான கடிகாரப் பட்டையும் ஒரு அழகான வெல்வெட் பெட்டியும் இலவசமாக அளிக்கப்படும். ஆர்டர்கள் எங்கள் பொறுப்பில் வி. பி. பி. யில் அனுப்பப்படும். இன்ஷூரன்ஸ், விற்பனை வரி, தபால் மற்றும் பாக்கிங் செலவு இலவசம்.

இனாம் அளிப்பு



ஒரே பாக்கிங்கில் இரண்டு கடிகாரங்களுக்கு டிஸம்பர் 31 தேதிக்குள் வரும் ஆர்டர்களுக்கு மேலே காட்டப்பட்ட அழகிய அமெரிக்க பேனா, பென்ஸில் செட்டு தங்க நிற கிளிப்புகளுடனும் வழவழப்பாக எழுதுவதற்காக இரிடியம் தோய்ந்த நிப்புடனும் இலவசமாக தரப்படும்.




ரவுண்டு (சைஸ் 10½)

616 A	ரோல்டு கோல்டு கேஸ் 5 ஜுவல்	ரூ. 23	0
654	ரோல்டு கோல்டு கேஸ் 7 ஜுவல்	38	8
620B	ஷாக்ப்ரூப் ரோல்டு கோல்டு கேஸ் 7 ஜுவல்	43	0
619 A	20 மைக்ரான் கோல்டு கேஸ் 15 ஜுவல்	54	0



சென்டர் செகண்டு ரவுண்டு (சைஸ் 10½)

621 A	ரோல்டு கோல்டு கேஸ் 5 ஜுவல்	25	0
657	ரோல்டு கோல்டு கேஸ் 7 ஜுவல்	40	8
624	ரோல்டு கோல்டு கேஸ் 15 ஜுவல்	54	0
629	வாட்டர் ப்ரூப் ரோல்டு கோல்டு கேஸ் ரேடியம் டயல் 17 ஜுவல்	65	0



கர்வெக்ஸ் (சைஸ் 7¾)

609	ரோல்டு கோல்டு கேஸ் 5 ஜுவல்	43	0
663	ரோல்டு கோல்டு கேஸ் 7 ஜுவல்	48	0
612 A	20 மைக்ரான் கோல்டு கேஸ் 15 ஜுவல்	65	0




டன்னோ (சைஸ் 6¾)

613	ரோல்டு கோல்டு கேஸ் 5 ஜுவல்	41	0
666	ரோல்டு கோல்டு கேஸ் 7 ஜுவல்	50	0
615	20 மைக்ரான் கோல்டு கேஸ் 15 ஜுவல்	68	8



சென்டர் செகண்டு (சைஸ் 8¾)

637	ரோல்டு கோல்டு கேஸ் 5 ஜுவல்	29	0
639	ரோல்டு கோல்டு கேஸ் 15 ஜுவல்	66	0
641	வாட்டர்ப்ரூப் ரோல்டு கோல்டு கேஸ் 15 ஜுவல்	98	0




லேடீஸ் (சைஸ் 5¾)

643	ரோல்டு கோல்டு கேஸ் 5 ஜுவல்	41	8
669	ரோல்டு கோல்டு கேஸ் 7 ஜுவல்	53	8
646	ரோல்டு கோல்டு கேஸ் 15 ஜுவல்	66	0

CAROLINE AGENCIES (India), Dept. 17, P.P. 6764, Bombay 22

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press 116-117, Sladens Gardens, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI டிசம்பர் 25. 1949 4 அண

நான் ஏராளமான பணம் சிலவழிக்கிறேன்

—எனினும் எனது தாடை முட்கள் மாதிரி தைக்கத்தான் செய்கிறது.

நாவிதனுக்கு ஆறு அணாக்கள் கொடுப்பவர் ஒருவாரத்தில் மூன்று க்ஷவரங்களை அடையக்கூடும். மற்றைய நான்கு நாட்களிலும் அவர் உறுத்தும் தாடையையுடையவராய் இருப்பதுடன் அசுத்தமான கத்தியினால் க்ஷவரம் செய்வதினால் ஏற்படும் அனாவசியமான புண்கள் முதலியவைகளால் ஏற்படும் அபாயங்களுக்கும் ஏதுவாகிறது.






நான் சொந்தமாகவே க்ஷவரம் செய்துகொள்கிறேன் அதனால் பணமும் மிச்சம்

அழகான பெட்டியில் இரண்டு 7 ஓ'க்ளாக் பிளேடுகளுடன் அடக்கம் செய்யப்பட்டு, முழுவதும் உலோகத்தாலான ஒரு 7 ஓ'க்ளாக் ரேஸர் வாங்குவதற்கு ஒரு ரூபாய்தான் விலையாகிறது. பிரதி காலையிலும் சுகமான க்ஷவரத்தை உணருவதோடு, நான் முழுவதும் கவர்ச்சிகரமான தோற்றத்துடன் இருப்பீர்கள்.

தினமும் 7 ஓ'க்ளாக் ரேஸர் பிளேடுகளாலேயே க்ஷவரம் செய்துகொள்ளுங்கள்

7 o'clock

RAZOR & BLADES



இரண்டு பிளேடுகளுடன் ரேஸர்

விலை ரூ. 1

7 ஓ'க்ளாக் ரேஸர் பிளேடுகளினால், சீக்கிரமாகவும் சிக்கனமாகவும் க்ஷவரம் செய்துகொள்ளும் முறையை இன்றே ஆரம்பியுங்கள். அதிகம் கூர்மையுள்ள ஒவ்வொரு 7 ஓ'க்ளாக் பிளேடும் சுத்தமான அநேக க்ஷவரங்களை அளிக்கும். 5 பிளேடுகள் கொண்ட பாக்கெட் ஒன்றுக்கு விலை அணா 7.

Regd. No. M. 4392